Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
34°C 28°C

பக்கம் 30 | சுடர்: 28 | கதிர்: 163 | வள்ளுவர் ஆண்டு: 2044 | சித்திரை 25, புதன் 08.05.2013

**உலகம்**



பக். 05

மலேசியப் பிரதமராக ரசாக்

**செய்திகள்**



பக். 08

நாடாளுமன்ற அமர்வுகள் மக்கள் பார்வைக்கு- சபாநாயகர் ஆலோசனை

**விளையாட்டு**



பக். 22

கோட்டை விட்டார் கோஹ்லி

# பயங்கரவாதச் சட்டம் நீக்கப்படவே மாட்டாது

## நாடாளுமன்றத்தில் பிரதமர் திட்டவட்டம்



கொழும்பு, மே 8

''பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது கடினம். அரசியல் நோக்கர்களுக்காகவோ, அரசியல் கட்சிகள்,நபர்களைக்குறிவைத்தோ பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஏற்பாடுகளை அரசு ஒருபோதும் பயன்படுத்தவில்லை'' பிரதமர் டி.எம். ஜயரட்ண நேற்று நாடாளுமன்றில் இவ்வாறு அறிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் பிரதமர் இவ்வாறு கூறினார்.

''அஸாத் சாலி கைதுசெய்யப்பட்டதைப் பயன்படுத்தி சிலர் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றனர். இதனையிட்டு நான் கவலையடைகின்றேன். எதிர்க்கட்சித் தலைவரும் அரசியல் நோக்கத்துக்காகத் தான் இதுகுறித்துப் பேசுகிறார் என நான் நினைக்கின்றேன்'' என்றார் பிரதமர்.

தேசிய சுதந்திர முன்னணியின் செயலாளர் அஸாத் சாலி பல்வேறு சந்தர்ப்பங்களில் இனங்களுக்கிடையே மோதலை ஏற்படுத்தும் வகையில் இலத்திரனியல், அச்சு ஊடகங்களினூடாக கருத்துகளை வெளியிட்டு வந்தார் எனவும் அவர் கூறினார்.

''தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும், இனங்களுக்கிடையில் குழப்பம் ஏற்படுத்தும் வகையிலும் சமாதானத்துக்கு அச்சுறுத்தலாகவும் இளைஞர்களைத் தூண்டும் வகையிலும் செயற்படும் நபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பது அரசின் பொறுப்பாகும். இது விடயத்தில் தராதரம் பார்க்காது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

பிரிட்டனில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டது போல் இங்கு செய்யமுடியாது. பிரிட்டனுக்கும் அயர்லாந்துக்கும் இடையிலான பிரச்சினை தீர்ந்துவிட்டது. ஆனால், எமது நாட்டில் பயங்கரவாதம் ஒடுக்கப்பட்ட போதும் பயங்கரவாதத்தின் நிழல்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இன்னமும் தொடர்கின்றன'' என்று பிரதமர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்யுமாறு விடுக்கப்படும் கோரிக்கையை நிறைவேற்றுவது கடினமாகும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-சி)

# வலி. வடக்கு காணிகளுக்கு ரூ. 400 மில்லியன் நட்டஈடு

## காணி அமைச்சு ஒதுக்கீடு

கொழும்பு,மே 8

வலி.வடக்கில் சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்காக 400 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

அரசினால் வலி.வடக்கில் 6 ஆயிரத்து 381 ஏக்கர் நிலப்பரப்பு சுவீகரிக்கப்படவுள்ளது. காணி சுவீகரிப்புச் சட்டத்துக்கு அமைவாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், சுவீகரிக்கப்படும் காணிகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுமெனவும் அமைச்சர் தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

### இராணுவம் மறுப்பு

படைத்தலைமையகம் அமைப்பதற்காகவே காணி சுவீகரிக்கப்படுவதாகக் காணி சுவீகரிப்பு அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை முற்றாக மறுக்கும் யாழ்.மாவட்டதளபதிமேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, மக்களின் பாவனைக்காகவே இந்தக் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன எனத் தெரிவித்தார். (த-5)

# வரமாட்டார் மகாராணி

## பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் சார்ள்ஸ் பங்கேற்பார்



2011ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற மாநாட்டில் மகாராணியுடன் மஹிந்த

லண்டன், மே 7

கடந்த 30 வருடங்களில் முதல் தடவையாக பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மாநாடு இலங்கையில் நடைபெற உள்ளது. மகாராணி அதில் பங்கேற்க மாட்டார் என்பதை பக்கிங்காம் அரண்மனை உறுதிப்படுத்தியது. அவருக்குப் பதிலாக இளவரசர் சாள்ஸ் மாநாட்டுக்குத் தலைமை தாங்க உள்ளார்.

தொடர்ச்சி பக். 24

# அஸாத் சாலி சார்பில் மனு

கொழும்பு, மே 8

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அஸாத் சாலியின் சார்பில் உயர்நீதிமன்றில் நேற்று அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

இதேவேளை, நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் அஸாத் சாலியின் சார்பில் ஆள்கொணர்வு மனுவொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா உதயனிடம் தெரிவித்தார். (த-சி)

# புலிகளின் குண்டில் 6 படையினர் காயம்

## ஒட்டுசுட்டானில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 8

புலிகளின் பதுங்கு குழிக்குள் இருந்த வெடிபொருள்கள் வெடித்து ஆறு படையினர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான் பகுதியில் உள்ள உடையார்கட்டு குளத்தடியில் இடம்பெற்றது.

சிப்பாய் ஒருவர் மண்வெட்டியால் நிலத்தை கொத்தித் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அங்கு வெடிக்காத நிலையில் இருந்த வெடிபொருள் வெடித்து விபத்து இடம்பெற்றது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய தெரிவித்தார்.

காயப்பட்ட படைச்சிப்பாய்கள் உடனடியாக முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும், அவர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-16)

# அரசின் அத்துமீறல்கள் குறித்து மௌனம் காக்கிறது இந்தியா

## சிவில் சமூகத்தினர் கூறியவற்றை கேட்டுவிட்டு வாய் திறக்காதிருந்தார் அசோக் கே.காந்தா

யாழ்ப்பாணம்,மே 8

வட பகுதியில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவது தொடர்பிலோ, அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பிலோ இந்தியா எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருவதாக வட பகுதி சிவில் சமூகத்தினர், இந்தியாவின் முன்னாள் தூதுவரிடம் நேரடியாகத் தெரிவித்தனர்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவராகப் பணியாற்றி பதவி உயர்வு பெற்றுச் செல்லும்

தொடர்ச்சி: பக்கம் 24

# மின்கட்டணம் மீண்டும் மீளாய்வுக்கு

கொழும்பு, மே 8

மின்கட்டணம் மீண்டும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடந்த பல வருடங்களாக திட்டமிடப்பட்ட மின்கட்டண உயர்வு கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கு எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, அமைச்சர்களும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

தொடர்ச்சி: பக்கம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டக்ளஸ் வருகைக்காக 3 மணித்தியாலம் காத்திருந்த சிகை அலங்கரிப்பாளர்கள்

## தொழில் நிலையங்களும் மூடப்பட்டன



யாழ்ப்பாணம்,மே 8

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வருகைக்காக 800 இற்கும் மேற்பட்ட சிகை ஒப்பனையாளர்கள் சுமார் 3மணி நேரம் தமது தொழில்களையும் கைவிட்டு வந்து காத்திருந்தனர்.

3 மணித்தியாலத்துக்கும் மேலாக யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காத்திருந்த அவர்கள் அமைச்சர் வராமையால் சினமடைந்து அங்கிருந்து வெளியேறினர்.

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வுக்கு 7 கிளைச் சங்கங்களையும் சேர்ந்த 800 இற்கும் மேற்பட்ட சிகை ஒப்பனையாளர்கள் காலை 9 மணிக்கு நிகழ்வுக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

ஒன்றியத்தை அங்குரார்ப்பணம் செய்வதற்குப் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, ஏனைய விருந்தினர்களாக அழைக்கப்பட்ட யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, ஆணையாளர் பிரணவநாதன் உள்ளிட்டோர் நண்பகல் 12 மணிக்குப் பின்னரே நிகழ்வுக்கு வருகை தந்தனர்.

சிகை ஒப்பனையாளர்கள் அனைவருக்கும் நேற்றைய தினம் விடுமுறையாகக் கருதி கட்டாயம் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் 800 இற்கும் மேற்பட்டோர் தமது சிகை ஒப்பனை நிலையங்களை மூடிவிட்டு நிகழ்வுக்காக வருகை தந்திருந்தனர்.

காலை 8 மணிக்கே நிகழ்வுக்கு வருகை தந்த சிகை ஒப்பனையாளர்கள் பலர் சுமார் 3 மணித்தியாலங்கள் காத்திருந்தும் அமைச்சர் வருகை தராததால் பொறுமை இழந்தவர்களாக அங்கிருந்து வெளியேறினார்கள். (த-14)

# மின்சாரம் தாக்கி பணியாளர் சாவு

## திருத்த வேலையில் ஈடுபட்டவேளை விபரீதம்

யாழ்ப்பாணம், மே.8

திருத்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மின்சார சபை பணியாளர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் மல்லாகத்தில் இடம்பெற்றது.

பாரதிபுரம், விஸ்மடுவைச் சேர்ந்த செல்வராஜா செந்தூரன் (வயது -19) என்ற மின்சார சபையின் ஒப்பந்த அடிப்படையிலான பணியாளரே உயிரிழந்தார்.

நேற்று நண்பகல் மல்லாகப் பகுதியில் உள்ள வீதியில் மின் கம்பங்களில் திருத்தப் பணிகளில் செந்தூரன் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே மின் தாக்குக்கு இலக்கானார். உடனடியாக தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் சிகிச்சை பயனின்றி நேற்றிரவு உயிரிழந்தார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஙு-16-ரி-86)

# முன்னாள் போராளிகளுக்கு உதவி 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,மே 8

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க முன்னாள் போராளிகளுக்கு கடன் உதவி வழங்குவதற்காக இந்த வருடம் 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர் வாழ்வு அமைச்சின் மூத்த ஆலோசகர் எஸ்.சதீஸ்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இறுதிக்கட்டப் போரின் போது சரணடைந்த 12 ஆயிரம் பேர் வரையில் கட்டம் கட்டமாகப் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலைசெய்யப்பட்டுவருகின்றனர்.

விடுவிக்கப்படும் முன்னாள் போராளிகளுக்கு சுயதொழில் கடன் உதவிகள் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த வருடம் முன்னாள் போராளிகளுக்கு கடன் வழங்குவதற்காக 300 மில்லியன் ரூபா வரை ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வருடம் இந்த நிதி அதிகரிக்கப்பட்டு 500 மில்லியன் ரூபா வரை ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு , மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த முன்னாள் போராளிகளுக்கே முன்னுரிமை அடிப்படையில் இந்தக்கடன் வழங்கப்படவுள்ளது. கடன் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கும் முன்னாள் போராளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது-என்றார். (த-5)

# வலி.வடக்கில் ஆவணப் பதிவு 12 ஆம் திகதியுடன் நிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 8

வலி.வடக்கு காணி சுவீகரிப்பை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்வதற்காக மக்களின் ஆவணங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையுடன் நிறுத்தப்படவுள்ளது என வலி. வடக்குப் பிரதேச சபையின் தலைவர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

வலி.வடக்கில் 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படுவதை எதிர்த்து அந்தப் பகுதி மக்களால் வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக ஆவணங்களை உறுதிப்படுத்திப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் கடந்த ஒரு வாரகாலமாக மல்லாகத்தில் அமைந்துள்ள வலி.வடக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரையில் 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தங்களின் ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பதிவு செய்துள்ளனர். தொடர்ச்சியாக ஆயிரக்கணக்கான மக்கள் பதிவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

> இதுவரையில் 3 ஆயிரத்துக் கும் அதிகமானோர் தீங்களின் ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பதிவு செய்துள்ளனர். தொடர்ச் சியாக ஆயிரக்கணக்கான மக்கள் பதிவு செய்வதில் ஆர் வம் காட்டி வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்துக்கு வெளியேயுள்ள மக்களும் பதிவுகளை மேற்கொள்கின்றனர்.

மக்களின் வேண்டுகோளுக்கு அமையவே எதிர்வரும் 12 ஆம் திகதி வரை பதிவு நடவடிக்கைகள் நீடிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னர் பதிவு நடவடிக்கைகள் எக்காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாதெனவும் வலி.வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன் அறிவித்துள்ளார். (த-5)

# பிஜியில் இலங்கை நீதிவான்கள்

கொழும்பு, மே 8

பிஜி நாட்டில் இலங்கையர்களான பலர் நீதிவான்களாகவும், நீதியரசர்களாகவும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அங்கு சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

அவர்களில் மூன்று நீதியரசர்களும், மூன்று நீதிவான்களும் அடங்குவர். நீதியரசர் மத்தும பத்த பெண்டிகே சஞ்சீவ சுதர்ஷன டி சில்வா, நீதியரசர் கமல்குமார், நீதியரசர் ஜானக பிரசன்ன பண்டார, நீதிவான்கள் புயிமினி வீரதுங்க, ராஜகருணா கிரிஹ கம மற்றும் நடிமலே ரூபசிங்க ஆகியவர்களே சத்தியப்பிரமாணம் செய்து கொண்டவர்களாவர். (த-ப)

# வன்புணர்வுக்கு உள்ளான சிறுமி நீரில் மூழ்கிச்சாகவில்லை

யாழ்ப்பாணம், மே 8

கடந்த டிசெம்பர் மாதம் வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட 4 வயதுச் சிறுமி நீரில் மூழ்கி உயிரிழக்கவில்லை என இழையவியல் கூற்றுப் பரிசோதனையில் தெரிய வந்திருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி வீட்டிலிருந்து காணாமற் போன சிறுமி மறுநாள் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

மண்டைதீவு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த குணசேகரம் சுதாகினி (வயது- 4) என்ற சிறுமியே கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

வன்புணர்வின் பின்னரே சிறுமி கொலை செய்யப்பட்டதாக யாழ். போதனா வைத்தியசாலையின் உடற் கூற்றுப் பரிசோதனைகளில் இருந்து தெரிய வந்திருந்தது.

அத்துடன் சிறுமியின் உயிரிழப்பு தொடர்பில் சந்தேகம் இருந்தமையினால் சிறுமியின் உடற்பாகங்கள் இழையவியல் கூற்றுப் பரிசோதனைக்காகக் கடந்த டிசெம்பர் மாதம் கொழும்புக்கு அனுப்பப்பட்டிருந்தன.

இதனடிப்படையில் சிறுமி நீரில் மூழ்கி உயிரிழக்கவில்லை என இழையவியல் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5)

# கொழும்பால் வந்தவர் வீதியில் மயங்கிச் சாவு




யாழ்ப்பாணம், மே.8

கொழும்பிலிருந்து வந்தவர் மாரடைப்புக் காரணமாக வீதியில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் திடீரென திருநெல்வேலிச் சந்தியில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார் எனப் பொலிஸார் கூறினர்.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த செ.றஞ்சனாஸ் (வயது-56) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்.நீதிவான் பெ.சிவகுமார் விசாரணை மேற்கொண்டார். யாழ்.போதனா வைத்திய சாலையில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு அவர் உத்தரவிட்டார். (த-4)

# திருவிழாக்களை கவனித்து வடக்குத் தேர்தலை நடத்துக

## அரசிடம் இந்து மாமன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 8

எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் வடமாகாண சபைத் தேர்தலை நடத்தும்போது, ஆலய திருவிழாக் காலத்தை கருத்தில் கொண்டு அதற்கேற்ற வகையில் திகதியைத் தீர்மானிக்குமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் கோரியுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி வரையும்,

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரையும்,

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரையும் இடம் பெறவுள்ளது.

இந்தத் தினங்களைத் தவிர்த்துத் தேர்தல் தினத்தை நிர்ணயிக்குமாறு அரசிடமும், தேர்தல்கள் ஆணையாளரிடமும் அகில இலங்கை இந்து மாமன்றம் கோரியுள்ளது. (த-5)

# வெங்காயக் களஞ்சியம் பண்டத்தரிப்பில் திறப்பு

யாழ்ப்பாணம், மே.8

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வெங்காயக் களஞ்சியக் கட்டடம் நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கடந்த காலப் போர் அனர்த்தத்தினால் சேதமடைந்த இந்த வெங்காயக் களஞ்சியம் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் 3.5 மில்லியன் ரூபா நிதியிலும், சங்கத்தின் ஒரு மில்லியன் ரூபா நிதியையும் சேர்த்து மொத்தமாக 4.5 மில்லியன் ரூபா நிதியில் இந்தக் களஞ்சியக் கட்டடம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்தை ஐ.நா.அபிவிருத்தி திட்டத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.ஞானகணேசன் சங்கப் பொது முகாமையாளரிடம் நேற்றுக் கையளித்தார். (த-17)

# மது உயிரைக் குடித்தது

யாழ்ப்பாணம், மே.8

அளவுக்கு அதிகமாக மது அருந்தியவர் வீதியில் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அங்கு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் திருநெல்வேலியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த அந்தோனிராஜ் ஜோர்ஜ் (வயது- 53) என்பவரே உயிரிழந்தார். திடீர்மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கூட்டாகக் குரல் கொடுக்கும் வேளை எப்போது வரும்..?

நாட்டில் சட்டத்தின் ஆட்சி ஒன்று நடைபெறுகிறது என்பதற்கு அத்தாட்சியாக இருக்க வேண்டிய நீதி அமைச்சரான நானே அதற்கு உடன்பட முடியாத நிலையில் இருக்கிறேன்.

வவுனியாவில், றோயல் கார்டன் மண்டபத்தில், கடந்த ஞாயிற்றுக்கிழமை, தமது ஆதரவாளர்கள் மத்தியில்- அவர்களு டன் நடத்திய சந்திப்பின் போது; நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்ட கருத்தை- தனது அனுபவத்தை- உண்மையை- வெளிப்படுத்தி உள்ளார்.

* நீதி அமைச்சரான நான் அரசின் சகல நடவடிக்கைகளிலும் உடன்பாடாக இருக்க முடியாத அவஸ்தையில் உள்ளேன்.

* இந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது என்பதற்கு அத்தாட்சியாக இருக்க வேண்டியவன் நான்.

* அண்மைக்காலமாக, ஆள்கள் கைது செய்யப்படுவது குறித்துப் பல விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. எமது கட்சிக்காரர்கள் கூட, நான்கு ஐந்து வருடங்களாக வழக்குகளில் இருந்து விடுவிக்கப்படாத நிலைமை உள்ளது.

* நீதி அமைச்சராகப் பதவி வகிக்கும் நான், அரசின் சகல நடவடிக்கைகளுக்கும் உடன்பாடாக இருக்க முடியாத அவஸ்தையில் உள்ளேன். அஸாத் ஸாலி ஒரு பயங்கரவாதி, பயங்கர வாதத்தை தோற்றுவிக்க முயல்கிறார் என்றால், இதற்கு முன்னர் எத்தனையோ பேரை [பிரகிருதிகளை] கைது செய்திருக்க வேண்டும்.

* அமைச்சர்களில் ஒரு சிலருக்கு அதிகாரங்களை அபரிமிதமாகப் பயன்படுத்த இடமளிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு சில அமைச்சர்கள் அவ்வாறு செயற்பட முடியாது உள்ளது. அதற்கு அனுமதி கிடையாது.

* நாம் அரசுடன் இணையும்போது எவ்வாறான சூழ்நிலையில் இணைந்தோம் என்பதனை, எல்லோரும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

- இன்று கையாலாகாத நிலையில் இருக்கிறோம் என்று பேசும் நிலைமை இனியும் தொடரக் கூடாது.

* நான் இப்போது கூறும் கருத்துக்களுக்கு, விடயங்களுக்குப் பின்னர் மேலும் மோசமான எதிரியாகவே பார்க்கப்படுவேன். அதற்காக வாய்மூடி மௌனியாக இருக்க முடியாது.

நீதி அமைச்சர் வெளியிட்டுள்ள இந்தக் கருத்துக்கள் நாடு எங்கே சென்று கொண்டிருக்கிறது; ஜனநாயக அரசியலும் ஆட்சியும் எவ்வாறு படாப்பாடுபடுகின்றன என்பதனை மிகத் துல்லியமாக படம் பிடித்துக் காட்டுகிறது.

அதற்கும் ஒரு படி உயரச் சென்று, ஜனநாயகம், நீதி, சட்டம் மற்றும் பல வகையறாக்கள் எவ்வாறு சிதைக்கப்படுகின்றன என்பதனை நாட்டின் பிரசைகளால் இலகுவாகவும் ஆழமாகவும் புரிந்து கொள்ள இயலும்.

மேலும், இலங்கை நீதித்துறையின் சுயாதீனம் குறித்து அனைத்துலக நாடுகள் பலவும் சந்தேகம் தெரிவித்து வரும் வேளையில், இந்த நாட்டில் நீதி அமைச்சரே அதன் பலவீனங்களை வெளிப்படுத்தி இருப்பது அரசுக்கு மேலும் இக்கட்டுக்களை உண்டாக்கக் கூடும்.

இதேவேளை, கிழக்கு மாகாண சபைக்கு ஆட்சி அமைத்த போது, முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கிய உறுதி மொழிகளை அரசு நிறைவேற்றவில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஹசனலி குற்றஞ்சாட்டி உள்ளார். அதனைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது என்று எச்சரிக்கும் தொனியில் அவர் கருத்து வெளிப்படுத்தி உள்ளார்.

அரசு மீதான குற்றச்சாட்டுக்களை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் "கோபாவேசத்துடன்" முன் வைத்திருக்கும் இவ்வேளையில் அக்கட்சியின் முக்கிய கூட்டம் இன்று நடைபெற உள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் பதவி நீக்கம் அனைத்துலக மட்டத்தில் மனித உரிமை அமைப்புக்களாலும், அனைத்துலக நீதியாளர் அமைப்புக்களாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டது; கண்டிக்கப்பட்டது.

அப்போதே அமைச்சர் ஹக்கீம் தமது பதவியிலிருந்து விலக வேண்டும் என்ற கருத்துக்கள் இந்த நாட்டில் மேலெழுந்தன. அப்போது அரசின் கைதியாக இருந்த அவர் இப்போதாவது தமது மக்கள் சார்பில் பேச முற்பட்டிருப்பது ஏற்புடையதே.

எப்படியோ முஸ்லிம்- தமிழ் மக்களிடையே ஒற்றுமை மேலும் வளர்ந்து, இரு தரப்புகளும் இப்போதைய அரசினதோ எதிர்கால அரசினதோ ஜனநாயக உரிமை மறுப்புகளுக்கு எதிராக கூட்டாக இணைந்து குரல் கொடுக்கும் நிலைமை தோற்றுவிக்கப்பட வேண்டும். சந்தர்ப்பவாதம் தவிர்த்துச் செயற்பட இரண்டு தரப்புகளும் மனம் வைத்தால் அது ஆக முடியாத காரியம் என்ற எதிர்மறை எண்ண (Pessimist) நிலையையும் போக்கலாம்.

# தமிழ் மக்களின் விடுதலைக்காக தமிழ் கட்சிகள் ஒன்றுபட வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 8

தமிழ் மக்களின் விடுதலைக்கு தமிழ்க் கட்சிகளும் மக்களும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்று விரும்பியவர் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.



ரெலோ அமைப்பின் தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் மறைந்த 27ஆவது நினைவு தினம் கோண்டாவில் அன்னங்கை கோகுல வீதியில் நடைபெற்றது. கட்சி உறுப்பினரும் யாழ். மாநகரசபை உறுப்பினருமான விந்தன் கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் கலந்துகொண்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

ஒற்றுமை இல்லாது எமது விடுதலையை நாம் வென்றெடுக்க முடியாது. எம்மிடையே காணப்படும் கருத்து முரண்பாடுகளை விடுத்து ஒன்றுபடுவதனூடாகவே நாங்கள் எங்களது விடுதலையைப் பெறமுடியும். மக்களின் விடிவு சுதந்திரமான வாழ்க்கையிலேயே என்பதை எமது கட்சி வலியுறுத்துகின்றது. ஒற்றுமை என்ற பெரிய நிலைப்பாட்டின் மூலமே இழக்கப்பட்ட பல விடயங்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும். தமிழ் மக்களின் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கித் தமிழ்மக்களின் உரிமைக்காகப் போராடும் நாம் அந்த ஒற்றுமையை மேம்படுத்துவோம், தவறின் அழிவுகளைச் சந்திக்க வேண்டிவரும்- என்றார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் ஸ்ரீ சபாரத்தினத்தின் 27ஆவது ஆண்டு நிறைவுதினம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உரும்பிராய் அன்னங்கை வீதியில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினரும் யாழ்.மாநகர சபை உறுப்பினருமான விந்தன் கனகரத்தினம் தலைமையில் சபாரத்தினம் கொலை செய்யப்பட்ட இடத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

அரவது உருவப்படத்துக்கு நினைவுச் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து மலர் தூவியும் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஸ்ரீகாந்தா, எஸ்.கே.சிவாஜிலிங்கம், தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த சி.வீ.கே.சிவஞானம், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கோ.கருணாகரம் ஜனா, இந்திரகுமார், பிரசன்னா, வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன், மாநகரசபை உறுப்பினர்கள் விந்தன் கனகரத்தினம், அ.பரஞ்சோதி, இ.இராஜதேவன், எஸ்.கோ.கொர்னேலியஸ் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தமிழ் உணர்வாளர் தேவராஜனுக்கு மனித உரிமை காப்பாளர் விருது

வவுனியா,மே 8

நியூஸிலாந்து அனைத்துலக மன்னிப்புச் சபை நியூஸிலாந்தில் வாழ்ந்து வரும் மூத்த தமிழ்ப் பெரியார் ஆறுமுகம் தேவராஜனுக்கு மனித உரிமைக் காப்பாளர் விருதை வழங்கி அவரது சேவையைக் கௌரவித்துள்ளது.

தனியே நியூஸிலாந்து என்றல்லாமல் பசுபிக் பிராந்தியத்துக்குமாக இந்த விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. நியூஸிலாந்தில் இந்த விருதினைப் பெறும் நான்காவது பிரமுகர் இவராவார். இந்த விருதைப் பெறும் ஆசியரும், தமிழரும் என்ற பெருமை தேவராஜனுக்குக் கிடைக்கின்றது.

தமது தள்ளாத வயதிலும் தமிழர் உரிமை பற்றியும் புலம் பெயர் தமிழரின் வதிவிடக் கோரிக்கை தொடர்பாகவும் குறிப்பாக அகதி அந்தஸ்து கோரிக்கை விடுப்பவர்கள் விடயங்களில் நியூஸிலாந்து அரசு முதல் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் வரையில் தமது மின்னஞ்சலை என்றும் இணைத்தபடி தமது பணியைச் செய்து வருபவர் தேவராஜன். அதைவிடவும் பல தமிழ் அமைப்புக்களின் பெயரில் பல சமூக நிறுவனங்களைத் தாமே உருவாக்கி அவற்றின் மூலமும் ஈழத்தமிழர் விவகாரங்கள், மனித உரிமைகள் தொடர்பான சந்திப்புக்களை நடத்தி அவற்றின் பெறுபேறுகளை உரியவர்களுக்கு அடிக்கடி அனுப்பி வருபவர். ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றில் தேர்ச்சி மிக்க இவர் தொல்லியல் அரசியல் தொடர்பாக பரந்த அறிவினைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரான புலோலியைச் சேர்ந்த 79 வயதான தேவராஜனுக்கு நியூஸிலாந்தில் தமிழ் சமூகத்துக்கு ஆற்றிய சேவைக்காக 2011 ஆம் ஆண்டு மகாராணி விருது வழங்கப்பட்டது. (த)

# ஆவணங்களின்றி வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

தென்மராட்சி, மே 8

ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 16 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சாரதிய அனுமதிப் பத்திரம், வாகன வரி, காப்புறுதி ஆகியவை இன்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய நபருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது 4 குற்றச்சாட்டுக்களும் வாசிக்கப்பட்டன.

எதிரி குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு 16 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இதே வேளை மதுபோதையில் வாகனம் செலுத்திய இவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

# 'ரக்பி' போட்டியில் நடுவரைத் தாக்கினார் மஹிந்தவின் மகன்

கொழும்பு,மே 8

ரக்பி போட்டியின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் ரோஹித ராஜபக்ஷவினால் போட்டி நடுவர் பொதுமக்கள் முன்னிலையில் தாக்கப்பட்டுள்ளார்.



இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை, கொழும்பு ஹவ்லொக் மைதானத்தில் இடம்பெற்றுள்ளது.

இலங்கை ரக்பி ஒன்றியத்தினால் 7 அணிகள் பங்குபற்றும் ரக்பி சுற்றுத் தொடர் இடம்பெற்று வருகின்றது. இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைக் கடற்படை அணிக்கும், பொலிஸ் அணிக்குமிடையில் போட்டி இடம்பெற்றது.

இலங்கை கடற்படை அணிக்கு ஜனாதிபதியின் இரண்டாவது புதல்வர் யோஷித ராஜபக்ஷ வழமையாகத் தலைமை வகிப்பார். ஆனால் கடற்படையில் இல்லாத ரோஹித கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டியில் கடற்படை அணிக்குத் தலைமை தாங்கினார்.

பொலிஸ் அணியுடனான போட்டியில் கடற்படை அணி தோல்வியைத் தழுவியது. இதன்போதே போட்டி நடுவராகச் செயற்பட்ட திமித்தி குணசேகரவை, அவரது சட்டையின் கொலரைப் பிடித்து பொதுமக்கள் முன்னிலையில் ரோஹித தாக்கியுள்ளார்.

இதனால் போட்டிகள் இடை நிறுத்தி வைக்கப்பட்டது. நடுவர்களுடன் உயர்மட்ட அதிகாரிகள் கலந்துரையாடியதைத் தொடர்ந்து 45 நிமிடங்களின் பின்னர் போட்டி மீண்டும் ஆரம்பமாகியது. (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜுன் 1 முதல் ஆரம்பமாகின்றது

**கல்வி நிர்வாகசேவை தரம் IIIக்கான ஆட்சேர்ப்பு பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள்**

திறந்த போட்டி பரீட்சை, வரையறுக்கப்பட்ட போட்டி பரீட்சை ஆகியவற்றிற்கு உயர்ந்த தகுதியும் நிறைந்த அனுபவமும்கொண்ட ஆசிரியர் குழாமினர் சிறந்த முறையில் தேவையான அனைத்து உத்திகளுடனும் உங்கள் வெற்றிக்கு வழிகாட்ட உள்ளனர்.

**உங்கள் பெயர்களைப் பதிவு செய்ய**

School of Professional And Degree Studies (Pvt) Ltd
65, அம்மன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். Tel:021 2219793, 0777184410 www.spads.edu.lk, spads.edu@gmail.com


## CHUNDIKULI GIRLS' COLLEGE OLD GIRLS' ASSOCIATION SPECIAL MEETING

**On Saturday 11th May, 2013 at 4.00 p.m. in the college premises**

A special meeting of the O.G.A, will be held on Saturday, the 11th of May, 2013 at 4.00 p.m. in the college premises, regarding its forthcoming Centenary Celebrations to be held on the 13th, 14th and 15th of July 2013. **All members are requested to attend this meeting** as it is an important one.

Secretary


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் மருதடி வீதி இந்திய துணைத் தூதரகத் திற்கு அருகில் நல்லூர் சுற்றாடலில் 2¾ பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தரகர் தேவையில்லை.** நேரம் 3.30-6.30pm.
தொடர்பு:- 077 9006700

## வீடு வாடகைக்கு

யாழ் வைத்தியசாலைக்கும் பஸ் நிலையத்துக்கும் அருகில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
T.P.:- **021 567 2024**


## மரண அறிவித்தல்

### நாகமுத்து கதிரவேலு



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், கட்டுவனை வசிப்பிடமாகவும் தற்போது நாச்சிமார் கோயிலடியில் வசித்து வந்தவருமான நாகமுத்து கதிரவேலு நேற்று (07.05.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கண்மணியின் அன்புக் கணவரும், கனகரெட்ணத்தின் (தேவராசா) அன்புத் தந்தையும், புஸ்பதேவியின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.05.2013) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

596/6, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (37195)(16.14.9) தகவல்: குடும்பத்தினர். (தந்தையன்- மகன்)

## கொக்குவில் இந்துவின் கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி ச. குமாரராஜசர்மா அவர்களின் மாமனார்
**பிரம்மஸ்ரீ குமாரசாமி ஐயர் அமிர்தேஸ்வரசர்மா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய கழகம், கொக்குவில் இந்துக்கல்லூரி.

## நீங்கா நினைவுகளுடன்

### ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03.08.1931
மறைவு 26.04.2006

### அமரர் நாகலிங்கம் பரம்சோதி

திதி: சதுர்த்தசி
பரமனின் ஒளியாகி, பரிவுள்ள தந்தையாகி
பகலிரவு எண்ணாது உயர்ந்திட்ட உழைப்பாளியே!
வரம்பல வேண்டியே நீங்களும் நின்றதனால்
வாழ்வியலில் நாமிங்கு பிரகாசமாய் மிளிர்கின்றோம்!
உரமான முடிவோடு நீங்களிழந்த சில பலவும்
உண்மை அழியாமல் மீண்டுமெம் வசமானதே!
கரங்கூப்பி வணங்கிடும் தெய்வமாய் ஏழாண்டென்ன
குவலயம் உள்ளவரை மறவாது இருப்போமே!

**மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.**
**M.தர்மதா, M.மிதுன்பரிசித், M.நர்மதா, M.மேருஜன் பரதன்**
பறிஜின் டிசைன் குறூப், 100, அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.
(37182)(2.6.7)


RE

பரந்த சேவை வலையம்... பஜாஜ் ஒன்றையே கொள்வனவு செய்வதற்குரிய

# மற்றுமொரு காரணம்



...நாட்டில் எங்கு சென்றாலும் பஜாஜ் முச்சக்கரவண்டிக்கு திறமையான அனுபவமுள்ள 576 தொழிநுட்பவியலாளர்களைக் கொண்ட சேவை வலையமைப்பு
நாடுமுழுவதும் இருப்பது பஜாஜ் வாடிக்கையாளர்களாகிய எங்களுக்கு மிகப்பெரியதொரு சக்தியாகும்.

இந்த பரந்த சேவை வலையம், பஜாஜ் முச்சக்கரவண்டியொன்றை கொள்வனவு செய்ய எங்களுக்கு மிகச்சிறந்ததொரு காரணமானது...



விலை ரூ. 460,880/-
மேற்குறித்த விலை VAT உள்ளடக்கப்பட்டுள்ளதோடு முன்னறிவிப்பு எதுவுமின்றி மாறுபடலாம்.

பஜாஜ் முச்சக்கரவண்டியை கொள்வனவு செய்வதற்குரிய மற்றுமொரு காரணம்...

- 30 வருட காலமாக இலங்கையரின் நிலையான நம்பிக்கை.
- நாடுமுழுவதும் 564 அசல் உதிரிப்பாக வலையமைப்பு.
- மிகச்சிறந்த எரிபொருள் செயற்பாட்டினால் குடும்பத்தின் வாகனமாக திகழ்தல்.
- பயணிகளின் போக்குவரத்துக்காகவே உருவாக்கப்பட்டு, சிறந்த வடிவத்துடன் கூடிய, செலுத்தும் பணத்திற்கு உச்ச பெறுமதியை உடைய, மீள் விற்பனையின் போது கூடிய விலையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாகனமாக திகழ்தல்.

tradlanka

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம் PB270
த.பெ. 1909,75, ஹைட்பார்க் கோனர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: http://www.dpmco.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்தும் இலக்கு வைக்கும் இஸ்ரேலிய போர் விமானங்கள்

## 45 சிரிய இராணுவத்தினர் சாவு; நூற்றுக்கு மேற்பட்டோரைக் காணவில்லை



டமாஸ்கஸ், மே 8

சிரிய ஆயுத நிலைகள் மீது இஸ்ரேல் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் வான் தாக்குதல்களில் 45 இக்கும் மேற்பட்ட சிரிய இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்துடன் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களைக் காணவில்லை என்றும் கூறப்படுகிறது.

சிரியா தலைநகர் டமாஸ்கஸில் உள்ள இராணுவ முகாம், ஆயுதக் கிடங்கு மற்றும் போர் விமானப் பிரிவு ஆகிய மூன்று இடங்களில் இஸ்ரேல் இராணுவம் கடந்த இரு நாள்களாக வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதல்களில் இது வரை 45 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பலரைக் காணவில்லை என்றும் அங்குள்ள மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. எனினும் சிரிய அரசு எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்ற விவரங்கள் குறித்து எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. எனினும் இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்து ஐ.நா. சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ- மூன்,

''சிரியா மீதான இஸ்ரேல் தாக்குதல் குறித்த விவரம் கிடைக்கவில்லை. என்ன நடந்தது என தன்னிச்சையாக சரிபார்க்கும் நிலையிலும் ஐ.நா. இல்லை. எனினும், இருதரப்பும் மோதல் போக்கை கைவிட்டு அமைதி காக்க வேண்டும். உள்நாட்டுப் போர் காரணமாக ஏற்கனவே சிரியா கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பதற்றத்தைத் தணிக்க பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

எல்லா நாடுகளும் மற்ற நாடுகளின் இறையாண்மை மற்றும் எல்லைக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு மதிப்பு அளிக்க வேண்டும். பாதுகாப்பும் சபையின் தீர்மானங்களையும் கடைப் பிடிக்க வேண்டும்.''- என்று தெரிவித்தார். (ற)

# பதற்றத்தை தணிக்கவே இராணுவம் பின் நகர்வு

## விளக்கமளிக்கிறது சீனா

பீஜிங், மே 8

எல்லைப் பகுதியில் ஏற்பட்டிருந்த பதற்றத்தைத் தணித்து அமைதியை நிலைநாட்டுவதற்காகவே இராணுவம் திரும்ப அழைக்கப்பட்டது என்று சீனா தெரிவித்துள்ளது.

இந்திய எல்லைப் பகுதிக்குள் ஊடுருவியிருந்த தமது இராணுவத்தினரை திரும்பப் பெற்ற பின்னர் அதுகுறித்துக் கருத்து வெளியிட்ட போதே சீனா இவ்வாறு தெரிவித்துள்ளது.

''பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளும் வகையில் இந்தியாவும், சீனாவும் இணைந்து எடுத்த முடிவு இது. இரு தரப்புகளுக்கும் இடையே நல்லுறவு நீடிக்க வேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். அதனை மனதில் கொண்டும், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையிலும் எல்லையில் இருந்து இராணுவம் திரும்பப் பெறப்பட்டுள்ளது. எல்லைப் பகுதியில் தொடர்ந்து அமைதி நிலவ வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்'' இவ்வாறு சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஹுவா சூங்யிங் தெரிவித்தார்.

''எல்லையில் இருந்து இராணுவத்தினர் பின்நகர்வதால் பிரச்சினைகள் எதுவும் ஏற்படாதா?'' என்று கேட்கப்பட்டபோது,

''இரு தரப்பும் ஒரே நேரத்தில் இராணுவத்தினரைத் திரும்பப் பெற்றுள்ளன. எல்லைப் பகுதி தொடர்பாக இந்தியாவுடன் எப்போதுமே நல்ல தகவல் தொடர்பு உள்ளது. எல்லையில் படைகளை திரும்பப் பெறுவதால் பிரச்சினை ஏற்படும் என்ற உங்கள் கவலை எனக்குப் புரிகிறது. எனினும் இது இந்தியாவுடனான உறவை மேம்படுத்திக் கொள்ளும் ஒரு சாதகமான முயற்சி. இரு தரப்புமே அமைதியையும், சமாதானத்தையும் கடைப்பிடிக்கும்'' என்றார் சூங்யிங். (ற)

# ஏவுகணைச் சோதனையை கைவிட்டது வடகொரியா

பியாங்யாங், மே 8

நாட்டின் கிழக்கு கடற்கரைப் பகுதியிலுள்ள ஏவுதளத்தில் இருந்த இரண்டு ஏவுகணைகளை வடகொரியா அங்கிருந்து அகற்றியுள்ளது.

ஏவுகணைப் பரிசோதனையை மேற்கொள்வதற்கான தயார்படுத்தல்களை வடகொரியா மேற்கொண்டுள்ளதாக கடந்த மாதம் செய்திகள் வெளியாகியிருந்தன. அத்துடன் தென்கொரியா, ஜப்பான் மற்றும் பிராந்தியத்திலுள்ள அமெரிக்க தளங்கள் மீது தாக்குதல் நடத்தப் போவதாகவும் வடகொரியா எச்சரித்திருந்தது.

அணுப் பரிசோதனைக்கு எதிர்ப்பு வெளியிடும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை தடைகளை கடுமையாக்கியதை அடுத்து இவ்வாறான எச்சரிக்கைகளை வடகொரியா விடுத்திருந்தது.

அதையடுத்து ஏவுகணை சோதனைக்குப் பல்வேறு நாடுகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தன. இந்தநிலையிலேயே ஏவுதளத்தில் நிலைநிறுத்தப்பட்டிருந்த இரு ஏவுகணைகளை வடகொரியா அகற்றியுள்ளது என்று கூறப்படுகிறது.

வடகொரியாவின் இந்தச் செயற்பாடு கொரியாப் பிராந்தியத்தில் பதற்றம் தணிந்து வருவதை எடுத்துக் காட்டுகின்றது என்று அமெரிக்கா கருத்து வெளியிட்டுள்ளது. (ற)






# பங்களாதேஷ் கலவரம்: 16 பேர் சாவு

பங்களாதேஷில் முஸ்லிம் பழைமைவாதக் கட்சி நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்ததில் 16 பேர் உயிரிழந்தனர். இஸ்லாம் மதத்தை அவமதிப்பவர்களைத் தண்டிக்க வகை செய்யும் மத அவதூறுச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. அதில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். அதில் கலந்து கொண்டவர்கள் டாக்காவின் மோதிஜீல் பகுதியில் பெரும் வன்முறையில் ஈடுபட்டனர். அங்குள்ள ஆளும் கட்சி அலுவலகத்தின் முன்னால் 15 நாட்டு வெடிகுண்டுகள் வெடித்தன. அதைத் தொடர்ந்து அங்கு கடும் மோதல்கள் வெடித்தன. இந்த வன்முறை டாக்கா நகரின் மற்ற பகுதிகளுக்கும் வேகமாகப் பரவியது. இதில் 16 பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர். (ற)

# மீண்டும் மலேஷிய பிரதமராக ரசாக்



கோலாலம்பூர், மே 8

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களை வெற்றியீட்டியதைத் தொடர்ந்து மலேஷியப் பிரதம ராக நஜீப் ரசாக் மீண்டும் நேற்று பொறுப்பு ஏற்றுக் கொண்டார். மலேசிய நாடாளுமன்ற தேர்தலில், 222 தொகுதிகளில், ஆளும் பேரிசன் தேசியக் கூட்டணி 133 இடங்களை பிடித்து பெரும்பான்மை பெற்றது. இந்தக் கட்சி கடந்த 56 ஆண்டுகளாக மலேஷியாவில் ஆட்சியில் உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த முறை, எதிர்க் கட்சி தலைவரான அன்வர் இப்ராகிம் (65) தலைமையில், மூன்று எதிர்க்கட்சிகள் ஒன்றாக சேர்ந்து தேர்தலை சந்தித்தன. தேர்தலில் எதிர்க்கட்சி கூட்டணிக்கு 88 இடங்கள் மட்டுமே கிடைத்தது.

தேர்தலில் பெரும்பான்மை பெற்றதை தொடர்ந்து பேரிசன் தேசியக் கூட்டணியின் சார்பில், நஜிப் ரசாக் இரண்டாவது முறையாக நேற்று பிரதமர் பதவியை ஏற்றார். கோலாலம்பூரில் உள்ள நெகரா அரண்மனையில் நடந்த பதவியேற்பு விழாவில் மன்னர் துவான்கு அப்துல் ஹாலிம் முவாத் ஜாம் ஷா முன்னிலையில், நஜீப் ரசாக் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். பதவியேற்றபின்னர் கருத்துக் கூறிய ரசாக், '' எங்களுடைய கூட்டணியின் வெற்றியை பொதுமக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் வளர்ந்த ஜனநாயக நாட்டைச் சேர்ந்தவர்கள். இந்த வெற்றிக்கு எதிரான சில சக்திகளுக்கு இடம் அளித்து விடக்கூடாது'' என்றார். (ற)

# தொடரும் விபத்துக்களால் முதலீட்டாளர்கள் வெளியேற்றம்



டாக்கா, மே 8

பங்களாதேஷில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் தொழிற்சாலை விபத்துக்களால் வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள் வெளியேறத் திட்டமிட்டுள்ளன. சீனாவுக்கு அடுத்தபடியாக உலகிலேயே அதிக ஆயத்த ஆடைகளை பங்களாதேஷ் ஏற்றுமதி செய்கிறது.

பங்களாதேஷில் குறைந்த சம்பளத்தில் வேலை செய்ய ஆள்கள் கிடைப்பதால், பன்னாட்டு ஆயத்த ஆடை நிறுவனங்கள் ஆடைகளை தயாரிக்கின்றன. இந்தநிலையில் பங்களாதேஷில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் தொழிற்சாலை விபத்துக்களால் உயிரிழப்புக்கள் அதிகரித்து வருகின்றன. ஆறு மாதங்களுக்கு முன், ஆயத்த ஆடை நிறுவனமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 112 பேர் உயிரிழந்தனர். கடந்த மாதம், டாக்காவில் எட்டு மாடி கட்டடம் நொறுங்கி விழுந்ததில் 600க்கும் அதிகமான தொழிலாளர்கள் உயிரிழந்தனர். அந்தக் கட்டடத்தில் ஐந்து ஆயத்த ஆடை நிறுவனங்கள் இயங்கி வந்தன. பணியாற்றும் இடத்தில் போதிய பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தக் கோரி, தொழிலாளர்கள், டாக்காவில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். பங்களாதேஷில் சுமார் 36 இலட்சத்துக்கும் அதிகமான ஆயத்த ஆடை தொழிலாளர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு

## 15 பேர் சாவு: 70க்கு மேற்பட்டோர் காயம்



இஸ்லாமாபாத், மே 8

பாகிஸ்தானில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 15 பேர் உயிரிழந்தனர். 70க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பழங்குடியின பகுதியான குர்ராமில் உள்ள மதரஸாவில் ஜமியத் உலேமா-இ இஸ்லாம்-பாசல் கட்சியின் பிரசார கூட்டத்திலேயே குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. அதில் 15 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர்.

மேடையில் இருந்த ஜமியத் கட்சித் தலைவர் முனீர் கான், கட்சியின் வேட்பாளர் உள்ளிட்ட கட்சியினர் பலர் லேசான காயங்களுடன் உயிர் தப்பினர். காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

பாகிஸ்தானில் எதிர்வரும் 11 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் அறிவிப்புக்குப் பின் பயங்கரவாதிகள் நிகழ்த்தியுள்ள மிகப் பெரிய தாக்குதல் இதுவாகும். பாகிஸ்தான் அதிபர் ஜர்தாரி உள்ளிட்ட தலைவர்கள் பலர் இந்த சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் மோதிலால் நேருவின் பிறந்த நாளையொட்டி, நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா, சபாநாயகர் மீராகுமார், சமாஜ்வாடி கட்சி தலைவர் முலாயம் சிங் யாதவ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### சரப்ஜித் சாவின் எதிரொலி:

## தர்காவுக்கு பிரார்த்தனைக்கு வரும் பாகிஸ்தானியருக்கு உதவமாட்டோம்

### ஆஜ்மீர் தர்கா மத குருக்கள் தீர்மானம்

ஜெய்ப்பூர், மே.8
ஆஜ்மீர் தர்காவில் இனி மேல் பாகிஸ்தானியர்கள் பிரார்த்தனைக்கு வரும்போது உதவுவதில்லை என்று மத குருக்கள் தீர்மானம் எடுத்துள்ளனர்.
ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஆஜ்மீரில், குவாஜா மொய்னுதீன் சிஷ்டி என்ற முஸ்லிம் மதகுருவின் சமாதி உள்ளது. இங்கு வந்து வேண்டுவோருக்கு, அவர்களின் பிரார்த்தனைகள் நிறைவேற அங்குள்ள மத குருக்கள் வேண்டுவார்கள். அண்மையில் வரும் பாகிஸ்தானின் பொதுத் தேர்தலில் கூட, வேட்பாளர்களுக்காக இங்கு பிரார்த்தனைகள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.
பாகிஸ்தான் சிறையில் சரப்ஜித் மற்ற கைதிகளால் கொடூரமாகத் தாக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்தார். இதனால் வலுப் பெற்று வரும் பாகிஸ்தான் எதிர்ப்புப் போராட்டத்தில் மதகுருமார்களும் இணைந்து கொள்ள முடிவு செய்துள்ளனர். எனவே, இனி இங்கு வரும் பாகிஸ்தானியர்களுக்காக தர்காவில் வேண்டுவதில்லை என மத குருக்கள் முடிவெடுத்துள்ளனர்.
எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மொய்னுதினின் 801 ஆவது தின விழாவில் கலந்து கொள்ள, 640 இற்கும் மேற்பட்ட பாகிஸ்தான் யாத்திரிகர்கள் இந்தியா வரவுள்ள சூழ்நிலையில், அப்போது வரும் பாகிஸ்தானியர்களுக்கான பிரார்த்தனைக் கூட்டத்தில் மதகுருக்கள் கலந்து கொள்வதில்லை என்று முடிவெடுத்துள்ளனர்.
இந்திய அரசு, இனிமேல் பாகிஸ்தானில் இருந்து வரும் யாத்திரிகர்களுக்கு விசா அளிப்பதை தடை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நீதிமன்றில் மன்னிப்பு கோரினார்

### சி.பி.ஐ. இயக்குநர்

நிலக்கரிச் சுரங்க விவகாரம் தொடர்பில் உச்ச மத்திய புலனாய்வுத்துறை இயக்குநர் ரஞ்சித் சின்கா உச்ச நீதிமன்றத்தில் மன்னிப்புக் கேட்டார்.
நிலக்கரிச் சுரங்க ஊழல் தொடர்பான விசாரணை அறிக்கையை சட்ட அமைச்சருடன் பகிர்ந்து கொண்டது ஏன்? என்று சி.பி.ஐ. இயக்குநரிடம் உச்ச நீதிமன்றம் விளக்கம் கேட்டிருந்தது.
இதற்கான விளக்கத்தை உச்ச நீதிமன்றத்தில் சி.பி.ஐ. இயக்குநர் ரஞ்சித் சின்கா உச்ச நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்தார். கடந்த மார்ச் மாதம் 6 ஆம் திகதி சட்ட அமைச்சர் அஸ்வனி குமாரை சந்தித்த போது அவரது அறிவுறுத்தலின் பேரில் வரைவு அறிக்கையில் மாற்றம் செய்யப்பட்டது உண்மை தான் என்று சி.பி.ஐ. சார்பில் ரஞ்சித் சின்கா விளக்கம் அளித்தார்.
9 பக்கம் கொண்ட பிரமாண பத்திரத்தில் விளக்கம் அளித்துள்ள சி.பி.ஐ. வரைவு அறிக்கையில் சில மாற்றங்கள் செய்யப்பட்ட போதிலும் மூல அறிக்கையில் விசாரணை தொடர்பான விவரங்கள், குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் பெயர்கள் தொடர்பாக எந்த திருத்தமும் செய்யப்படவில்லை என கூறப்பட்டுள்ளது. இவ்விவகாரத்தில் என்னால் ஏற்பட்ட திருத்தம் மற்றும் நீக்கம் ஆகியவற்றுக்கு உச்ச நீதிமன்றத்திடம் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோருகிறேன். நிலக்கரி சுரங்க முறைகேடு தொடர்பான சி.பி.ஐ.யின் விசாரணை சுதந்திரமாக நடைபெறும் என்ற உறுதியையும் அளிக்கிறேன்- என்றார்.

# போராட்டம் தொடரும்

### கூடங்குளம் போராட்டக் குழுத் தலைவர் அறிவிப்பு

கூடங்குளம், மே 8
கூடங்குளம் அணுமின் நிலையம் குறித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு எங்களைக் கட்டுப்படுத்தாது என்று அணு உலைக்கு எதிரான மக்கள் சக்தி இயக்க ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் தெரிவித்தார். அணு உலை மூடும் வரை போராட்டம் தொடரும் என்றும் அவர் கூறியுள்ளார்.
கூடங்குளம் திட்டத்துக்கு தடை இல்லை என்று நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கும் அணு உலைக்கு எதிரான மக்கள் சக்தி இயக்கத்துக்கும் எந்த வித தொடர்பும் இல்லை. இந்தத் தீர்ப்பு சட்டப்படி எங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. தரமில்லாத கட்டுமானங்கள், கொதிகலங்கள் இயந்திரங்களால் உருவாக்கப்பட்ட இந்த அணுமின் நிலைய வளாகத்தில் பல ஆயிரம் கோடிக்கு ஊழல் நடைபெற்றுள்ளது. தரமற்ற கேபிள் இணைப்புகளால் மின் கசிவு, வாயு கசிவு ஏற்பட்டு 6 பேர் இதுவரை இறந்துள்ளனர். சுற்றுச்சூழல் மாசு கூடங்குளம் அணுமின் நிலையத்தால் மன்னார் வளைகுடா பகுதியே மாசுபடும் என்று சுற்றுச்சூழல் அமைப்புகள் தெரிவித்துள்ளன.
இதன் பின்னரும் அணு கழிவுகள் எங்கே புதைப்பது, அதிலிருந்து வெளியாகவும் அணு வீச்சின் தன்மை என்ன என்பதை தெரிவிக்காமல் உள்ளனர்.
இந்தப் பகுதி மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அது எந்த அளவு ஏற்படும், இதற்கு அரசின் செயற்பாடு, இழப்பீடு என்ன என்பது குறித்து தீர்ப்பில் சொல்லப்படவில்லை. அணுமின் நிலையம் மூடும் வரை எங்களது போராட்டம் தொடரும்-என்றார்.



#### கடவுச்சீட்டு மீண்டும் முடக்கம்

இதேவேளை உதயகுமாரின் கடவுச்சீட்டு மீண்டும் முடக்கப்பட்டுள்ளது. அணுமின் நிலையத்துக்கு எதிராக போராடி வரும் உதயகுமார் மீது பல்வேறு வழக்குகள் பதிவானதைத் தொடர்ந்து, அவரது கடவுச் சீட்டு சில மாதங்களுக்கு முன் முடக்கி வைக்கப்பட்டது
இதை எதிர்த்து அவர் உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார்.
சரியான காரணங்கள் இன்றி கடவுச் சீட்டை முடக்கி வைக்கக் கூடாது என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதால், அது மீண்டும் உதயகுமாரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
அதையடுத்து, உங்கள் கடவுச் சீட்டை ஏன் முடக்கி வைக்கக் கூடாது எனக் கேட்டு, அவருக்கு அறிவித்தல் அனுப்பப் பட்டது.
அதற்கு அவர் பதிலளிக்காததால், மீண்டும் அவரது கடவுச் சீட்டை முடக்கி வைக்க அதிகாரிகள் உத்தர விட்டனர்.

## கூடலூரில் பிரமிக்க வைத்த வாசனை திரவிய தாஜ்மஹால்



கூடலூரில் விளையும் வாசனை திரவியப் பொருள்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கண் ணைக்கவரும் தாஜ்மஹால் ஒன்று கண்காட்சியில் வைக்கப்பட்டது.
நீலகிரி மாவட்டம், கூட லூரில் கோடைவிழாவின் ஒரு பகுதியாக வாசனைத் திரவியக் கண்காட்சி நடை பெற்றது. இதில், கூடலூர் பகுதியில் விளையும் வாசனைத் திரவியங்களான ஏலக்காய், மிளகு உள்ளிட்ட பல்வேறு பொருள்களால் உருவாக்கப்பட்ட தாஜ்மஹால் காண்போரை பிரமிக்க வைத்தது.
தோட்டக்கலை அரங்கில் மிளகு மற்றும் கிராம்புகளால் உருவாக்கப்பட்ட மீன்கள், சீரகத்தால் செய்யப்பட்ட காளான்கள், கசக சாவால் செய்யப்பட்ட விமானம், ஜாதிபத்திரியால் உருவாக்கப்பட்ட முயல், சோம்பு கொண்டு செய் யப்பட்ட பறவை உள்ளிட்ட கைவண்ணங்கள் இக்கண்காட்சியை வண்ணமயமாக மாற்றின.

## ஹெலி ஊழலில் தேடப்படும் குற்றவாளியாக முன்னாள் தளபதி

### லோக்சபாவில் அந்தோனி தகவல்

டில்லி, மே.8
ஹெலிகொப்டர் பேர ஊழல் வழக்கில், இந்திய விமானப் படை முன்னாள் தளபதி தியாகியை தேடப்படும் குற்றவாளியாக புலனாய்வுத்துறை அறிவித்துள்ளதாக நாடாளுமன்ற லோக்சபாவில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்தார்.
இது குறித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மக்களவையில், எழுத்து பூர்வமாக அவர் அளித்த பதிலில் கூறியுள்ளதாவது:
ஹெலிகொப்டர் பேர ஊழல் வழக்கில் தேடப் படும் குற்றவாளியாக ஏராளமானோரை சி.பி.ஐ. அறிவித்துள்ளது. இத்தாலியில் இருந்து பெறப்பட்ட முதற்கட்ட ஆவணங்கள் மூலம், தியாகி மீதான குற்றச் சாட்டை சி.பி.ஐ. உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளது. அதில் இந்திய விமானப்படை முன்னாள் தளபதியும் ஒருவர்.



ஆனால், தியாகி என்ற பெயரை அமைச்சர் தமது பதிலில் குறிப்பிடவில்லை. இத்தாலியில் இருந்து வாங்கப்பட்ட ஹெலிகொப்டர் ஊழல் வழக்கு தொடர்பாக தியாகியின் வங்கிக் கணக்கை சி.பி.ஐ. அதிகாரிகள் அண்மையில் முடக்கிய நிலையில், தற் போது அவரை தேடப்படும் குற்றவாளியாக அறிவித்துள்ளனர்.

## காவிரி மேலாண்மை வாரியம்: அரசுக்குப் பதிலளிக்குமாறு உத்தரவு

காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பது குறித்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்குள் பதிலளிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கவேண்டும் என்ற காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசு செயற்படுத்த வேண்டும் என்று தமிழக அரசு, உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தது. இதுதொடர்பாக கர்நாடகா, கேரளா, புதுச்சேரி மற்றும் மத்திய அரசுகளிடம் விளக்கம் கேட்டு கடந்த 22ஆம் திகதி உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது.
அதற்கு கடந்த வாரம் பதில ளித்த கர்நாடக அரசு, மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின் போது பரிந்துரையாகச் சொல்லப்பட்டதே தவிர, கட்டாயமில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.
மத்திய அரசு தாக்கல் செய்திருந்த பதில் மனுவில், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும் பணி, ஆரம்பித்து விட்டதாகவும் கர்நாடகாவில் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருப்பதால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறியிருந்தது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சார வயர்களை கம்பங்களில் பொருத்துக

கொழும்புத்துறை,மே 8

மணியந்தோட்டம் பகுதியில் வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள மின்சார இணைப்பு 'வயர்கள்' நீண்டகால மாக தற்காலிக மரக் கம்பங்களில் பொருத்தப் பட்டவாறு உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொங்கிறீற் மின் கம்பத் தூண் கள் நிறுத்தப்பட்டு பல மாதங் களாகியும் மரக் கம்பங்களில் உள்ள வயர்கள் தூண்களுக்கு மாற்றப்படவில்லை.

இந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங் கப்பட்டபோது மீள்குடிய மர்ந்த மக்களுக்கு அவசரமாக மரக்கம்பங்களின் உதவியு டன் மின்சாரம் வழங்கப்பட்டது.

தற்போது இந்த தற்காலிக மரங்கள் உக்கி முறிவடையும் நிலை ஏற்பட்டால் மக்கள் மின்சாரத்தால் பாதிப் படையும் ஆபத்து ஏற்படலாம்.

எனவே வீடுகளுக்குச் செல்லும் இணைப்பு வயர்களை நடப் பட்டுள்ள நிரந்தர மின் கம்பங் களுக்கு விரைவுபடுத்தி மாற்றம் செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-135)

# உதிரவேங்கை ஆலயக் காணி தொடர்பாக நீதிமன்றினால் இடைக்காலத் தடையுத்தரவு

கிளிநொச்சி உதிரவேங்கை வைரவர் ஆலயக் காணி தொடர் பாக கிளிநொச்சி மாவட்ட நீதி வான் நீதிமன்றினால் இடைக் காலத் தடை உத்தரவு விதிக் கப்பட்டது.

கிளிநொச்சி 155 ஆம் கட்டை யில் உள்ள உதிரவேங்கை வைரவர் ஆலயத்துக்குரிய காணி பெரும்பான்மை இனத்தை சேர்ந்த ஒருவருக்கு சட்டத்துக் குப் புறம்பான வகையில் வழங் கப்பட்டுள்ளதாக ஆலய நிர் வாகத்தினர் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு தெரிவித்திருந்தனர். ஆனால் இந்த முறைப்பாடு தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் மேற் கொள்ளப்படவில்லை. இத னால் பொதுமக்களால் கவன ஈர்ப்புப் போராட்டம் மற்றும் உண்ணாவிரதப் போராட்டம் என்பன முன்னெடுக்கப்பட்டன. இது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்திலும் முறைப் பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த வெள் ளிக்கிழமை ஆலயத்தின் கதவு கள் உடைக்கப்பட்டு சூறையா டல் சம்பவமும் இடம்பெற்றது.

இதனையடுத்து நேற்று முன் தினம் 6 ஆம் திகதி ஆலய நிர்வாகத்தினரால் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் இந்தக் காணி அபகரிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய் யப்பட்டது. மனுதாரர் சார்பாக குறித்த வழக்கை சட்டத்தரணி திருமதி எஸ்.விஜயராணி தாக் கல் செய்திருந்தார்.

குறித்த வழக்கில் ஆதன அட்ட வணையில் விவரிக்கப்படும் ஆதனத்தின் ஆட்சி உரிமையை எதிர்வாதி குழப்பியதுடன் அமைதிக் குப் பங்கம் ஏற்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ள தாக மனுதாரரின் சட்டத்தரணி யால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனைக் கவனத்தில் கொண்ட நீதிமன்றம் இந்த வழக்கில் அக்கறையுள்ள ஆள் எவரே னும் இது தொடர்பாக உரிமை யைக் கோரும் சத்திய கடதாசி கள் மற்றும் ஆவணங்களுடன் எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு மன்றில் சமுகம் கொடுக்குமாறும் அதுவரை எந்தவிதமான வேலை களையும் இந்தக் காணிக்குள் மேற்கொள் ளக்கூடாது எனவும் இடைக்கால உத்தரவு பிறப்பித் துள்ளது.

இந்த நிலையில் நீதிமன்ற இடைக்காலத் தடை உத்தர வையும் மீறி இந்தக் காணிக் குள் தொடர்ந்தும் நேற்றுமுன் தினம் மாலை 6 மணி வரை வேலைகள் இடம்பெற்றதாகத் தெரிய வருகின்றது.

குறித்த வழக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன் னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-6)

> “ நேற்று முன்தினம் 6ஆம் திகதி ஆலய நிர்வாகத்தினரால் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் இந்தக் காணி அபகரிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய் யப்பட்டது.

## 'காற்றிடை வெளியே' கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,மே 8

யாழ்.பல்கலைக்கழக மூன் றாம் வருட இசைத்துறை மாண வனாகிய க.யோகேஸ்வரனின் மூன்றாவது மூன்றாவது தொகுப் பான காற்றிடை வெளியே கவிதை நூல் வெளியீடு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் நுண்கலைப் பீடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் கலாநிதி தர்சனன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நூல் வெளி யீட்டு விழாவில் கௌரவ விருந்தினராக மகரகம தேசிய கல்வி நிறுவன அழகியற்றுறை உதவி விரிவுரையாளர் ராகினி திருக்குமரன் கலந்துகொள்ள வுள்ளார். நூலின் நயப்புரையை வேலணையூர் தாஸ்-ம், விமர் சன உரையை நெடுந்தீவு நேதா வும், வெளியீட்டுரையை கலாநிதி தர்சனனும் நிகழ்த்தவுள்ளனர். (ஒ-ரி-400)

## வெட்டுக் காயங்களுடன் குடும்பஸ்தர் சடலம் அடம்பனில் மீட்பு

மன்னார்,மே 8

மாந்தை மேற்கு பிரதேச செய லர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் முள்ளிக்கண்டல் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கி ழமை காலை வெட்டுக் காயங் களுடன் குடும்பஸ்தர் ஒருவரு டைய சடலம் மீட்கப்பட்டுள்ள தாக விடத்தல்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் அடம் பன் முள்ளிக்கண்டல் பகுதி யைச் சேர்ந்த மூன்று பிள் ளைகளின் தந்தையான வேத நாயகன் யூட் சீலன் என அடை யாளம் காணப்பட்டுள்ளதாக வும் பொலிஸார் தெரிவித்துள் ளனர். முள்ளிக்கண்டல் பகுதி யில் அமைந்துள்ள பனங் கள்ளு விற்பனை நிலையத்தில் இருந்து சுமார் 35 மீற்றர் தொலைவில் குறித்த சடலம் மீட்கப்பட்டுள் ளது. தகவல் கிடைத்து சம்பவ இடத் துக்கு வந்த விடத்தல்தீவு பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டனர்.

நேற்று முன்தினம் மாலை சம் பவ இடத்துக்கு வந்த மன் னார் நீதிவான் ஆனந்தி கனகரட்னம் சடலத்தைப் பார்வையிட்டதோடு அதனை மன்னார் வைத்தி யசாலையில் பிரேத பரிசோத னைக்கென ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

உயிரிழந்தவரின் மனைவி மத்திய கிழக்கு நாடு ஒன்றில் பணிபுரிவதாகவும் தெரிய வந் துள்ளது. மேலதிக விசாரணை களை விடத்தல்தீவு பொலி ஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (க-12)

## சொற்பொழிவு

கோப்பாய் தெற்கு ஸ்ரீ வீரமா காளியம்பாள் ஆலய வரு டாந்த அலங்காரத் திருவிழா கடந்த 26 ஆம் திகதி ஆரம்ப மாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

திருவிழாக் காலத்தில் தினமும் மாலை 6 மணி முதல் 7 மணி வரை ஆசிரியர் காரை எம்.பி. அருளானந்தன் 'மகாபாரதம்' எனும் விடயத்தில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வரு கின்றார். (ந)

# குடாநாட்டில் 'சண்டித்தனம்' கடந்த வாரம் 27 பேர் கைது

யாழ்ப்பாணம், மே 8

பல பகுதிகளிலும் பிறருடன் முரண்பட்டு அடித்துக் காயப் படுத்தும் சம்பவங்கள் யாழ். குடாநாட்டில் தொடர்ந்து கொண்டிரு க்கின்றன.



இந்தக் குற் றச் சாட்டில் பல இடங் களையும் சேர்ந்த 27 பேர் கடந்த வாரம் மாத் திரம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித் தனர்.

சில மாதங்களாக இத்தகைய சம்பவங்கள் அதிகரித்துள்ள தோடு அதனுடன் தொடர் புடைய சந்தேகத்தில் கடந்த வாரத்தில் 27 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இது தவிர வாகன விபத்து ஏற் படக் காரணமாக இருந்த குற்றச்சாட்டில் 3 பேரும், மது போதையில் வாகனம் செலுத் திய குற்றச் சாட் டில் ஒருவரும், மது போதை யில் கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் ஒருவரும், பொது இடத் தில் மது அருந் திய குற்றச்சாட் டில் 2 பேரும், களவெடுத்தனர் என்ற குற்றச்சாட்டில் 8 பேரும், போக்குவரத்துக்கு இடை யூறாக நின்ற குற்றச்சாட்டில் 14 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்த னர். (ஒ-4)

### ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயத்தில்

# ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு நடத்த அனுமதி வழங்குமாறு மனு

அச்சுவேலி, மே 8

ஆவரங்கால் நடராச இராம லிங்க வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு நடத்து வதற்கு அனுமதி வழங்குமாறு பாடசாலைச் சமூகம் கோரி யுள்ளது.

ஆவரங்கால் நடராச இரா மலிங்க வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பை இந்த வருடம் இரண்டாம் தவணை யில் இருந்து ஆரம்பித்து நடத் துவதற்கு அனுமதி வழங்கு மாறு பாடசாலை அபிவிருத் திச் சபை வடக்குமாகாண கல்வி அமைச்சுக்கு மனு ஒன்றை யும் அனுப்பி வைத்துள்ளது.

அதேசமயம் பாடசாலைச் சமூ கத்தினரை உள்ளடக்கிய தூதுக் குழு கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளையும் மாகாண கல்விப் பணிப்பாளரையும் நேரில் சந்தித்து இது தொடர் பில் கலந்துரையாடியும் உள்ளது.

இந்த வருடம் வெளியான ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சை பெறு பேறு களின் அடிப்படையில் 20 மாண வர்கள் மட்டில் ஜி.சீ.ஈ. உயர்தர கலைப்பிரிவில் இணைந்து கற்பதற்கு தயாராக இருப்பதாக கூறப்படுகின்றது.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி இசுறுப் பாடசாலைத் திட்டத்திலும் ஆயிரம் பாட சாலை திட்டத்திலும் உள்ளீர்ப் புச் செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும். ''வண்ணர் ஏ.பி.'' பாடசாலையாக இருக்கும் அதே வேளையில், புத்தூருக்கு அண் மையில் இருக்கும் ஆவ ரங் கால் நடராச இராமலிங்க வித்தி யாலயத்தை ''வண் சீ'' பாட சாலையாக தரம் உயர்த்தி ஜி.சீ.ஈ. உயர்தரம் கலை. வர்த் தக வகுப்புக்களை நடத்துவ தற்கு அனுமதி வழங்குவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தயக்கம் காட்டுவதாகக் கூறப் படுகின்றது. (ஒ-11)

### கரவெட்டிப் பிரதேச சபைக்குட்பட்ட

# வீதிகளுக்கு இன்னும் இல்லை விமோசனம்

கரணவாய்,மே 8

கரவெட்டிப் பிரதேச சபைக்குட் பட்ட பல வீதிகள் நீண்டகால மாகப் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப் படுவதால் வீதிகளில் பயணம் செய்வோர் பெரும் அசௌ கரியங்களை எதிர்நோக்கி வரு கின்றனர்.

குஞ்சர்கடை-சோளங்கன்-மண்டான்வீதி, மூத்தவிநாயகர் சந்தி, செல்வாபுரம் வீதி, கரண வாய் வல்லியாவத்தை திரு மகள் சனசமூக நிலைய வீதி, குஞ்சர்கடை, உடுப்பிட்டி வீதி மற்றும் கலட்டி வீதி என்பனவே நீண்ட நாள்களாகப் புனர மைக்கப்படாது குன்றும் குழியு மாகக் காணப்படுகின்றன.

வடமராட்சிப் பகுதிகளிலுள்ள பல வீதிகள் வடக்கின் வசந் தத்தின் மூலம் காபற் வீதிக ளாக மாற்றம் அடைந்து வரும் இந்தச் சூழ்நிலையில் கூட இந்த வீதிகளுக்கு விடிவு இன் னும் கிடைக்கவில்லை.

இதற்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என பாதசாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதிகளின் இருமருங்குகளும் மழை வெள்ளத்தால் அரிக்கப் பட்ட நிலையில் காணப்படுவ தால் ஒரே நேரத்தில் இரண்டு கனரக வாகனங்கள் போக்கு வரத்து மேற்கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

இந்த வீதிகளில் மின் விளக்கு கள் பொருத்தப்படாததால் இர வில் பயணம் செய்வோர் பெரும் அசௌகரி யங்களை எதிர்நோக்கி வருவதுடன் விபத் துக்கள் ஏற்படுவதாகவும் பாதசாரிகள் தெரிவிக்கின்ற னர்.

குறிப்பாக இந்த வீதிகளினால் போக்குவரத்தை மேற்கொள் ளும் பாடசாலை மாணவர் களே பெரிதும் பாதிக்கப்படுவ தாகக் கூறுப்படுகிறது.

எனவே இந்த வீதிகளில் பய ணம் செய்யும் பாடசாலை மாண வர்கள் மற்றும் பாதசாரிகளின் நலன்கருதி இவற்றைப் புனர மைப்பதற்கு சம்பந்தப்பட்ட வர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ந-400)



காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் விழிப்புலனற்றோரின் வாழ் வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக ஒன்பது குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. ஆலய [illegible] குருக்கள் நூலகத்தில் ஆலய பரிபாலகர் [illegible] தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கலந்துகொண்டு வாழ்வாதார உதவிகளை வழங்கினார். (ஓ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலிழந்த மின் நிலையம் மீண்டும் நேற்று வழமைக்கு



கொழும்பு,மே 8
நுரைச்சோலை அனல்மின் நிலையம் மீண்டும் செயலிழந்து நேற்று வழமைக்குத் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.
நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 8.42 மணிக்கு நுரைச்சோலை அனல்மின் நிலையம் செயலிழந்தது.
எனினும் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணிக்கு மின்நிலைய செயற்பாடுகள் வழமை நிலைக்குத் திரும்பியுள் ளதாக அனல்மின் நிலைய பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.
இதற்கு முன்னரும் பல தடவைகள் நுரைச்சோலை அனல்மின் நிலையம் செயலிழந்தது.
இதேவேளை, நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய கால நிலையால் பல பகுதிகளுக்கான மின் விநியோகம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

# நாடாளுமன்ற அமர்வுகள் நேரடி ஒலி, ஒளிபரப்பு

## சகல விடயங்களையும் மக்கள் நேரடியாக அறிவதற்கு வாய்ப்பு என்கிறார் சபாநாயகர்




கொழும்பு,மே 8
நாடாளுமன்றத்துக்கு தம்மால் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்படுகின்ற பிரதிநிதிகள் அங்கு என்ன செய்கிறார்கள் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். அதற்காக சபை அமர்வுகளை மக்கள் எவ்வித தடையுமின்றி தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடாக நேரடியாகப் பார்ப்பதற்கும், கேட்பதற்குமான வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க கவனம் செலுத்தி வருகின்றோம்.

இவ்வாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

''நாடாளுமன்றம் மற்றும் ஊடகங்களுக்கிடையில் செயற்திறனுடனான நல்லுறவைக் கட்டியெழுப்புதல்'' என்ற தொனிப் பொருளில் நாடாளுமன்ற குழு நிலை அறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செயலமர்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடாளுமன்ற சபை நடவடிக்கைகளை ஒளி, ஒலி ஊடகங்களினூடாக மக்கள் நேரடியாகப் பார்ப்பதற்கும் கேட்பதற்குமான ஏற்பாடுகளை நாம் செய்து வருகிறோம். வானொலியூபாக இந்த நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இந்திய லோக் சபாவின் அமர்வுகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. எனவே அங்கிருந்து உதவிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டு வருகிறோம்.
நாடாளுமன்றத்தில் நடைபெறும் விடயங்களை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். தம்மால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் எப்படிப்பட்டவர்கள் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். தமது தலைவர்கள் நாடாளுமன்றத்தில் என்ன பேசுகின்றார்கள் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

செய்திகளை அறிக்கைப் படுத்துவதில் ஊடகங்களின் பங்கும் மிக முக்கியமானதாகும். தாம் நாடாளுமன்றத்தில் எவ்வளவுதான் பேசினாலும் அவை ஊடகங்களில் வெளியாவதில்லை என்று சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னிடம் கூறுகின்றனர். எனவே, இவற்றைக் கருத்திற்கொண்டு ஊடகங்கள் நடுநிலையாகச் செயற்படல் வேண்டும் -என்றார். (ச)

## 2,800 பேர் மாத்திரம் ஹஜ் யாத்திரைக்கு



கொழும்பு,மே 8
இலங்கையிலிருந்து 2,800 பேர் மாத்திரமே இந்த வருடம் ஹஜ் யாத்திரையை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
ஹஜ் யாத்திரை தொடர்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று சவூதி அரேபியாவில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
இந்த ஒப்பந்தத்தில் ஹஜ் விவகாரங்களுக்கான சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி மற்றும் சவூதி அரேபிய ஹஜ் விவகார அமைச்சர் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.
சவூதி அரேபியாவிலுள்ள புனித நகரங்களான மக்கா மற்றும் மதீனா ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக இலங்கையிலிருந்து 2,800 யாத்திரிகர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பௌசி தெரிவித்தார்.
கடந்த 2012ஆம் ஆண்டும் 2,800 பேர் மாத்திரமே இலங்கையிலிருந்து ஹஜ் யாத்திரையை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



ஹற்றன் நகரத்திலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகளவான பனிமூட்டம் காணப்பட்டது. அதனால், ஹற்றன் நகரத்துக்குள் பிரவேசிக்கும் கொழும்பு - ஹற்றன், நுவரெலியா - ஹற்றன், பொகவந்தலாவை - ஹற்றன் ஆகிய வீதிகளில் அதிகளவான பனி சூழ்ந்து காணப்படுகின்றது.

## ஹெரோயின் வைத்திருந்த இருவருக்கு சிறை

கொழும்பு,மே 8
அங்குலான பகுதியில் வீதியில் பயணித்த ஓட்டோ ஒன்றை நிறுத்தி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சந்தேகநபர்கள் இருவரிடமும் இருந்து, ஒரு கிராம் 310 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. அவர்கள் பயன்படுத்திய ஓட்டோவைத் தடுத்து வைத்துள்ளதுடன் அதன் சாரதியும் பொலி



ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
ஹெரோயின் வைத்திருந்த இரண்டு சந்தேகநபர்களும் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட பின்னர், எதிர் வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர். (ச)

# தமிழ் மொழியைப் படிக்க அன்று பணமில்லை; இன்று நேரமில்லை

## விரைவில் சரளமாகப் பேசுவேன் என்கிறார் சட்டமா அதிபர்

கொழும்பு,மே 8
''அன்று தமிழ் மொழியைக் கற்பதற்கு 50 ரூபா பணம் இருக்கவில்லை. இன்று பணம் இருக்கிறது. ஆனால், படிப்பதற்கு நேரம் இல்லை. இருப்பினும் விரைவில் தமிழ் மொழியை சரளமாகப் பேசுவதற்கு முயற்சிப்பேன் ''
- இவ்வாறு சட்டமா அதிபர் சரத் பாலித பெர்னாண்டோ தெரிவித்தார்.
'நாடாளுமன்றம் மற்றும் ஊடகங்களுக்கிடையில் செயற்றிறனுடனான நல்லுறவைக் கட்டியெழுப்புதல்' என்ற தொனிப் பொருளில் நாடாளுமன்ற முதலாம் குழுநிலை அறையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற விசேட செயலமர்வில் கலந்துகொண்டு, சில நிமிடங்கள் தமிழில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

**அடுத்த முறை அமர்வில் நிச்சயம் தமிழ்மொழியில் சரளமாகப் பேசுவேன்.**

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-
தமிழ் மொழியைச் சரளமாகப் பேசமுடியுமாக இருந்திருந்தால் நான் சந்தோசமடைந்திருப்பேன். எனினும், தமிழ் மொழியை நன்கு பேச முடியாததையிட்டு நான் கவலையடைகின்றேன்.
நான் பாடசாலை மாணவனாக இருக்கும்போது தமிழ் படிக்க முயற்சித்தேன். வகுப்புக்கு 50 ரூபா கட்டணம் செலுத்த வேண்டும். அந்தத் தொகையை அன்று செலுத்துவதற்கு போதியளவு வசதியிருக்கவில்லை.
ஆனால், இன்று பணம் இருக்கின்றது. தமிழ் படிப்பதற்கு நேரம் இல்லை. இருப்பினும் எனக்கு கொஞ்சம் தமிழ் மொழியில் கதைக்க முடியும். அடுத்த முறை இந்த அமர்வு இடம்பெற்றால் அதில் தமிழ் மொழியில் சரளமாகப் பேசுவேன். மொழி காரணமாகத்தான் நாட்டில் எல்லாவித பிரச்சினைகளும் உருவாகின.- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நல்லிணக்கத்துக்காக ஈழத்தமிழர் இரத்தம் சிந்தியுள்ளனர்

## கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே.8
இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்பதற்காக விலைமதிப்பற்ற உயிர்த் தியாகங்களை ஈழத்தமிழர் செய்துள்ளனர். 1940 களிலிருந்து இன்று வரை தமிழர் சிந்திய இரத்தம் தான் இலங்கையிலும் உலகிலும் சிங்கள மக்களுக்கு வாழ்வைக் கொடுத்திருக்கிறது என்று கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் சு.தயாபரன் தெரிவித்துள்ளார்.

கனடா மறுவாழ்வு அமைப்பின் உதவியுடன் கடந்த 2012 ஆம் ஆண்டு ஆவணி மாதம் வன்னேரிக் குளத்தில் ஆரம்பிக்கப்பட்ட தையல் பயிற்சி நிலையத்தில் நிறைவு விழாவும், தைத்த ஆடைகளின் கண் காட்சியும் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன.



இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று எங்கள் நிலத்தில் நாம் வாழ முடியாதுள்ளது. இந்த நிலையத்துக்குக் கூட பிரசுரம் ஒட்டி அடாத்தாகப் பிடிக்கும் ஓர் அநியாயமான சூழலில் நாம் வாழ்கிறோம். எம்மில் 4 பேர் ஒன்று கூடி பேச முடியவில்லை. எங்கள் பிள்ளைகளைக் கூட எங்களால் காப்பாற்ற முடியாத இக்கட்டான நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இதற்கு முடிவாக தமிழன் தன்னைத் தான் ஆளுகின்ற நிலை வேண்டும். இந்த நாள் தான் எங்கள் இனத்துக்கான நிம்மதியான நாளாகவும் அமையும் - என்றார்.

வன்னேரிக்குளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கிளிநொச்சி மாவட்ட கிளையின் செயலாளரும் ஓய்வுநிலை கிராம அலுவலருமான சு.பசுபதிப்பிள்ளை, கட்சியின் அக்கராயன் பிரதேச அமைப்பாளர் சர்வானந்தன், கட்சியின் செயற்பாட்டாளர் மகேஸ்வரன் உட்பட தையல் பயிற்சி ஆசிரியை, பயிற்சி நெறியை முடித்துக் கொண்ட மாணவர்கள், வன்னேரிக் குளம் மாதிரிக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ)

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள்

வவுனியா, மே 8
வவுனியா பொது வைத்தியசாலையில் பிறக்கும் குழந்தைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை தாமதமின்றி வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தற்போது இவற்றைப் பெறுவதில் தாமதங்கள் காணப்படுவதால் தாம் பல்வேறு வகையிலும் பாதிக்கப்படுவதாக குழந்தைகளின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக அக்ரஹாரா காப்புறுதிக் கொடுப்பனவுகளைப் பெறுவதில் சிக்கல்கள் ஏற்படுவதாகத் தெரியவந்துள்ளது.

ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு வைத்தியசாலையில் பிறக்கின்ற குழந்தைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைத் தாமதமின்றி வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-402)

## வவுனியா சுத்தானந்தாவுக்கு புதிய நிர்வாகிகள்

நெளுக்குளம்,மே 8
வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் 5 ஆம் திகதி காலை நா.சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின்போது புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக நா.சேனாதிராஜாவும், செயலாளராக க.தர்மதேவனும், பொருளாளராக இ.திருமேனியும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் உப தலைவர்களாக ச.சுப்பிரமணியம், நா.தர்மராஜா, க.முருகையா, இ.வையாபுரிநாதன் ஆகியோரும் உப செயலாளராக சி.நாகராஜாவும், உப பொருளாளராக எஸ்.சத்தியசீலனும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக க.சிவபாலன், ஐ.திருவிளங்கம், இ.கனகரத்தினம், கா.ஜெயராசா, நா.வில்வராஜா, கே.தியாகலிங்கம், சி.கே.இராசலிங்கம், ஏ.செல்வராசா, எஸ்.கோகுலன், எஸ்.சத்தியநாதன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

சுத்தானந்தா இந்து இளைஞர் மன்றம் 1952 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-402)

# வவுனியாவுக்கு தாமதமாக கிடைக்கும் கடிதங்கள்

## மக்கள் விசனம் தெரிவிப்பு

வவுனியா, மே 8
வவுனியா பிரதம தபாலகத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும் கடிதங்கள் உரிய வகையில் பொதுமக்களை சென்றடைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியா பிரதம தபாலகத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும் கடிதங்கள் குறைந்தது ஒருநாளுக்குள் குறிப்பிட்ட முகவரி உடைய நபருக்கு கிடைத்துவிட வேண்டும். மாறாக மூன்று, நான்கு தினங்களின் பின்னர் கிடைப்பதாகவும் சில கடிதங்கள் தமக்கு வந்து சேராது இருப்பதாகவும் வேப்பங்குளம், குட்செட்வீதி, முருகனூர், நெளுக்குளம் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

> “ வவுனியா பிரதம தபாலகத்தில் இருந்து எடுத்து செல்லப்படும் கடிதங்கள் குறைந்தது ஒருநாளுக்குள் குறிப்பிட்ட முகவரி உடைய நபருக்கு கிடைத்துவிட வேண்டும்.



இவ்வாறு தமக்கு கிடைக்காத கடிதங்களுக்குள் பல்வேறு முக்கியமான கூட்டக் கடிதங்கள் உட்படுவதாக அந்தப் பகுதி மக்களால் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து வவுனியா தபாலக வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது கடிதம் காலதாமதமாகக் கிடைப்பது குறித்து பொதுமக்களின் முறைப்பாடுகள் நேரடியாக தமக்கு கிடைக்கவில்லை எனவும் உரிய வகையில் முறைப்பாடுகள் தலைமை அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும் பட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கின்றனர். (வ-402)

## இளைஞர் நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்கள் தெரிவு

மன்னார், மே 8
இளைஞர் நாடாளுமன்றத்துக்கு மன்னார் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாகாணப் பணிப்பாளர் என்.எம். முனவ்பர் இதனை வெளியிட்டார்.

கடந்த சனிக்கிழமை மன்னார் மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஒரு உதவி அரச அதிபர் பிரிவிலும் இந்தத் தேர்தல் நடத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மன்னார் பிரதேச செயலர் பிரிவில் இருவர் போட்டியிட்டனர். இதில் மன்னார் பேசாலை காட்டாஸ்பத்திரி திரீரோசஸ் இளைஞர் கழகத்தைச் சேர்ந்த செல்வராஜா சுகேந்திரன் அதிகூடிய வாக்குகளைப்பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் இருவர் போட்டியிட்டனர். இதில் வங்காலை பஸ்ரியன் இளைஞர் கழகத்தைச் சேர்ந்த அருள் காந்தி அமல்ராஜ் குரூஸ் அதிகூடிய வாக்குகளைப்பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

முசலி பிரதேச செயலர் பிரிவில் இருவர் போட்டியிட்டனர். இதில் ஹமீடியா இளைஞர் கழகத்தைச் சேர்ந்த யூனைட் முஹமட் ஜரீத் என்பவர் அதிகூடிய வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றுள்ளார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் நான்கு பேர் போட்டியிட்டுள்ளனர். இதன் போது மாந்தை மேற்கு சுடரொளி இளைஞர் கழகத்தைச் சேர்ந்த ஏ.எம்.தேஸ்மன் அதிகூடிய வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

மடு உதவி அரச அதிபர் பிரிவில் எஸ்.கே.றொலைக்ஸன் குரூஸ் என்பவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை முசலிப் பிரதேச செயலர் பிரிவில் தேர்தல் இடம் பெற்றுக் கொண்டிருந்த போது இரு வேட்பாளர்களுடைய ஆதரவாளர்களுக்கிடையில் மோதல் இடம் பெற்றதாகவும் சிலாபத்துறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட பொலிஸார் விரைந்து சென்று பிரச்சினையைத் தீர்த்து வைத்ததாகவும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாகாணப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (க-12)



யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்த கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவர்கள் உதயன் அலுவலகத்துக்கு வந்த போது...

## ஓமந்தை தேவாலய உண்டியல் திருட்டு முயற்சி கைகூடவில்லை

மாங்குளம்,மே 8
வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரிக்கு அருகில் ஏ-9 வீதியில் அமைந்துள்ள தேவாலயத்தின் உண்டியல் உடைத்து பணத்தை திருட முயன்ற கும்பலின் செயல் பயனளிக்கவில்லை. இந்தச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

ஏ-9 வீதியில் அமைந்துள்ள குறித்த தேவாலயத்தின் உண்டியல்அமைக்கப்பட்டு அந்த உண்டியலுக்கு மேல் மாதா சொரூபம் ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியினூடாகச் செல்லும் வாகனச் சாரதிகள் உண்டியலில் பணம் போட்டுச் செல்வது வழக்கம். அதேபோல் குறிப்பிட்ட சில காலத்துக்குப் பின்னர் அந்தப் பணத்தை தேவாலய அருட்தந்தை பொறுப்பேற்றதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை உடைக்க கல்தூண் பெரிய ஆயுதங்களை பயன்படுத்தியதால் மாதா சொரூபம் அமைக்கப்பட்ட இடம் பல துண்டுகளாக உடைக்கப்பட்டுள்ளது. அண்மையில் கனகராயன் குளப்பகுதியில் உள்ள பிள்ளையார் சிலையும் திருட்டுப் போயுள்ளது.

எனவே தற்போதுள்ள திருடர்கள் ஆலயங்களை குறிவைத்து திருட்டை மேற்கொள்வதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## ஆறுமுகம் இராசையா

**மண்ணுலகில்**
**21.04.1936**
**விண்ணுலகில்**
**19.04.2012**



**அப்பா!** ஆண்டு ஒன்று சென்றதப்பா
ஆறவில்லை எம் துயரம்
அப்பா உங்களின் உடல்தான் இல்லை
அப்பா ஆனால் உயிர் எங்களுடன்தான்
அப்பா உடலை எங்கே தேடுவோம்,
தேடிப்பார்க்கின்றோம் கிடைக்கவில்லை
ஆசைக்கனவுகளை நிறைவேற்றிய
எங்கள் அன்புத் தெய்வமே
இப் பாரினில் நாம் வாழும்வரை
எம் இதயத்தில் இருத்தி
எந்நாளும் மலர்களால் பூசிக்கின்றோம்
நீங்கள் எங்களுடன் இருப்பீர்கள் என்று
நிதம் உங்கள் பிரிவால் புலம்புகின்றோம் **அப்பா!**

இன்று (08.05.2013) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

**(இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

உங்கள் பிரிவால் துயருறும்

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன், பேர்த்தி, உற்றார், உறவினர்.**

**"வீரப்பதிராயன்",**
**கரணவாய் தெற்கு, கரவெட்டி.**

தொடர்புகளுக்கு:-
ஆனந்தசிறி (சிறி - மகன்) T.P. 077 949 9992,
உதயன் (மருமகன் - கனடா) T.P. 0016 476 480072
e-mail:- uthayan2520@yahoo.com

(35981)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வழி நாடு

குழந்தைகள் ஏழு, எட்டு வயதுக்குள்ளாகவே நல்ல பண்புகளை, நல்ல பழக்க வழக்கங்களைப் பெற்றோரிடமிருந்தும், ஆசிரியரிடம் இருந்தும் கற்றுக்கொள்ள வேண்டும்.

இளம் வயதில் கற்றுக்கொண்ட நல்ல பாடங்கள் மனதில் ஆழமாகப் பதிகின்றன. பின் அவை ஆயுள் வரை கை கொடுக்கின்றன.

'இளமையில் கல்' என்று ஆன்றோர்கள் சொன்னது கல்வியை மட்டுமல்ல; நல்ல பழக்க வழக்கங்களையும்தான்.

தீய வழிக்குச் செல்ல மனதாலும் எண்ணக்கூடாது.

உலகில் நன்மை, தீமை இரண்டும் கலந்ததுதான் வாழ்க்கை.

நீ தீமைகளை விலக்கிவிட்டு நன்மைகளை கெட்டியாகப் பிடித்துக்கொள்.

அன்னப் பறவை பற்றி அறிந்திருக்கிறாயா?

அது, பாலோடு கலந்த நீரைத் தனியே பிரித்து, பாலை மட்டும் உட்கொள்ளும் என்று சொல்வார்கள்.

அதுபோல் நீ நன்மைகளைக் கிரகித்துக் கொண்டு தீமைகளை விலக்கிவிடு.

தீய எண்ணங்களுக்கு மனதில் இடம் கொடாதே!

தீய பழக்க வழக்கங்களுக்கு, உடம்புக்கு இடம் கொடாதே!

அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆக்கத்துக்கு மட்டுமல்ல. அழிவுக்கும் வழி வகுக்கிறது.

அத்தகைய கண்டுபிடிப்புகளுள் மிக முக்கியமான, இன்றைய சூழ் நிலையில் இன்றியமையாத ஒன்று கணிப்பொறி. அந்தக் கணிப்பொறி ஆக்கப்பூர்வமான விடயங்கள் பலவற்றுக்காகப் பயன்பட்டாலும் அதனால் சில தீமைகளும் இருக்கின்றன. அதில் குறிப்பிடத் தகுந்த ஒன்று இணையத்தளம்.

இணையத்தளம் உலகின் அத்தனை விடயங்களையும் நம் கண்முன் படைக்கக்கூடியது. அது உன் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகிறது. ஆனால் அதிலும், உன் மனத்தைச் சிதைக்கக்கூடிய, கெடுக்கக்கூடிய விடயங்களும் உண்டு. நீ தனியறையிலே, இரவிலே, பெற்றோர் அறியாமல் அந்தத் தீய விடயங்களைத் தேடி கெட்டுப் போகாதே!

நல்ல விடயங்களைத் தேடு. பெற்றோர் துணையுடன் தேடு. அவர்கள் மூலமாகவோ அல்லது ஆசிரியர்கள் மூலமாகவோ சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்.

தனியறையில், இரவெல்லாம் இணையத்தளத்தைப் பார்க்கின்ற மாணவர்களால் பெற்றோர் மனமும் வேதனையடைகிறது. குழந்தைகளே!

தீமை மனதில் விரைவாகப் பதிந்துவிடும். ஆனால் நன்மை பதிவதற்கு நீண்ட நாள்களாகும்.

நீங்கள் தீமையை மனத்தில் பதித்தீர்கள் என்றால் உங்கள் வாழ்வு துன்பமயமாக, கேடு விளைவிப்பதாகவே அமையும்.

நன்மையைப் பதிய வையுங்கள். நாளெல்லாம் மகிழ்ச்சி பொங்கும். அடுத்ததாக, பெரிதும் துன்பம் தரக்கூடியவை தீய பழக்கங்கள்.

இன்றைய சூழலில், மாணவப் பருவத்திலேயே புகை, மது, போதைப் பழக்கங்களுக்கு அடிமையாகி தானும் கெட்டு பெற்றோருக்கும் மன வேதனையைத் தருகிறார்கள்.

நீங்கள் இதுபோன்ற தீய பழக்கங்களுக்கு இடமளிக்காதீர்கள். என்னிடம் பல பெற்றோர்கள் வந்து அழுது புலம்புகிறார்கள்.

என்மகன் புகைப்பழக்கத்துக்கும், மதுப்பழக்கத்துக்கும் அடிமையாகி விட்டான். அவன் மனம் திருந்த வேண்டுமே என்று ஏங்கி, அழுது கண்ணீர் விடுகிறார்கள்.

நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

உங்கள் உடம்புக்கும், மனதுக்கும் தீங்கு விளைவிக்கும் இந்தப் பழக்கங்கள் தேவையா?

கனவிலும் அந்தப் பழக்கங்களைப் பழகிக்கொள்ள நினைக்காதீர்கள். அதற்கு அடிமையாகிவிட்டால், பின் அதிலிருந்து மீள்வது இயலாத காரியம் ஆகிவிடும்.

புகை, உங்கள் உயிருக்குப் பகை.

மதுவை நீ குடிக்கிறாய். மதுவோ உன் உயிரைக் குடிக்கிறது.

போதை உன் அழிவுக்கான பாதை.

நீ அழிவுப் பாதையில் செல்லப் போகிறாயா?

சிந்தித்துப்பார்.

மனிதன் இன்பமாக வாழ வேண்டும் என்று தான் இறைவனும் எண்ணுகிறான்.



ஆனால், மனிதன் தனக் குத் தானே துன்பத்தை ஏற்படுத்திக் கொள்கிறான். இது தான் உண்மை.

நல்ல பாதை, நல்ல பழக்கம், நல்ல பண்புகள் ஆகியவை நிரந்தர இன்பத்தை நல்கக் கூடியவை. மன அமைதியைத் தரவல்லவை. ஆதலால் நீ நல்வழியையே நாடு.

அது நல்கும் பேரின்ப வீடு.

பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# புனரமைப்பு பணிகாணும் மயிலைப்புலம் ஐயனார்



(தொடர்ச்சி.....)

லக்ஸ்மன்

18 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கோயிலின் தென் பகுதியில் இரு குளக்கரைகளில் நெற் செய்கையும் அயலில் உள்ள நிலங்களில் புகையிலைச் செய்கையும் கணிசமான பயனைத் தந்தாலும் மக்கள் கல்வியிலும் வளர்ச்சியடையக் கூடியதாக இறையருள் கிடைத்தது என்பது உறுதியாக உள்ளது.

ஆலய தரிசனத்திற்காகக் கூடும் மக்கள் கோயிலுக்கு தினமும் பூசைகளை மேற்கொள்வதற்கு குருக்கள் ஒருவர் தேவை எனவும் ஊரில் புரோகிதர் இல்லாத குறையைக் நீக்க வேண்டும் என்றும் சிந்தித்தனர். இதனை நோக்காகக் கொண்டு அந்தக் காலத்தில் செல்வாக்குப் பெற்ற மனிதராக விளங்கிய முத்து மணியகாரருடன் ஆலோசித்து அவரின் அனுசரணையுடன் அராலியில் இருந்து செல்லையாக் குருக்களைத் வருவித்து கோயிலின் பூசகராக நியமித்தனர்.

பெரிய அளவில் ஊதியமின்றி ஊர்ப்புரோகிதமே வருவாயாக வழங்கப்பட்டிருந்தது. 1890 அளவில் இங்கு வந்து பணியாற்றிய இந்தக் குருக்களும் கோயில் வரலாற்றுடன் நெருக்கமானதாக பின்னாளில் விளங்கினார் என்று கூறப்படுகிறது.

நோயுற்றோருக்கு மந்திர நீறணிந்து குணப்படுத்தல், நூற்காப்பு கட்டுதல், சிறுவர்களுக்கு வித்தியாரம்பம் செய்தல், தமது இல்லத்தில் பிதிர்க் கடன்களை நிறைவேற்றல் போன்ற செயற்பாடுகளால் ஆலயத்துக்கு அதிகமான மக்கள் வரத் தொடங்கினர்.

1900 ஆண்டில் நிகழ்ந்த கடும் காற்று, கடும் மழையால் வீடுகளை இழந்து ஆலயத்தில் தஞ்சமடைந்த மக்களை ஐயரே ஆதரித்து உபசரித்திருந்தார். செல்லையாக் குருக்களின் சேவை ஆலயத்துக்கு நிறைவாகக் கிடைத்ததில் மக்கள் மனநிறைவு கொண்டவர்களாகக் காணப்பட்டனர். ஆலயத்தின் பொங்கல் நிகழ்வுகளில் பெருமளவானோர் கலந்து கொண்டனர். அவருக்குப் பின் அவரது மகன் கணபதி ஐயர் ஆலய பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார். வேதாகமப் பண்டிதராக குருக்கள் பட்டம் பெற்று வந்த இவரது காலத்திலும் கோயில் புதுப்பொலிவும் , மேன்மையும் பெற்றுள்ளது. புராணபடனம், பயன் கூறுதல் போன்றவைகளால் மக்கள் சமய விழுமியங்களில் கூடுதல் அக்கறை காட்டத் தொடங்கினர்.

1952 இல் குருக்களின் விடா முயற்சியாலும் மக்களின் ஒத்துழைப்பும் அப்போது ஆலய முகாமையாளராக இருந்த வே.கெங்காதரம்பிள்ளையின் அனுசரணையாலும் மடாலயமாக இருந்த கோயில் மூலஸ்தானம் பண்டிகையும் முடியும் சூடிய ஆகமக் கோயிலானது. இதனை அடுத்து பொங்கலுக்கு முந்திய எட்டு தினங்களும் அலங்காரத் திருவிழாவாக நடைபெறத் தொடங்கியது.

இந்தக் காலத்தில் ஆடு, கோழி பலியிடலும் இடம்பெற்றுள்ளன. பலர் நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற பலிப் பொருள்களைக் கொண்டு வந்தனர். எனினும் கணபதிக் குருக்களின் கண்டிப்பினால் பலியிடுதல் நிறுத்தப்பட்டு நேர்த்திக்கென எடுத்துவரும் ஆடு, கோழிகள் ஏலத்தில் விடப்பட்டன. இந்த வழக்கம் சிறிய அளவில் நடப்பதாக உள்ளது.

கோயில் தேவைகளுக்கு நல்ல தண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமத்தை தவிர்க்கக் கூடியதாக பண்டிதர் கா.பொ.இரத்தினம் தொகுதிக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து கிணறு ஒன்றை அமைக்க உதவியிருந்தார். 1970 இல் முகாமையாளரிடம் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு ஐயர் வெளியேறிச் சென்றார். அதன்பின்னர் ஊரைக் கூட்டிய முகாமையாளர் கோயிலின் நிர்வாகத்தைப் பொது மக்களிடம் கையளித்தார்.

> வேலணை வடக்கின் மேற்கு எல்லையாக சரவணை கிழக்கில் இருக்கும் இந்தக் கோயில் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் நாவல், வேம்பு, இலுப்பை, புளி போன்ற பெரிய விருட்சங்களும் இலந்தை, நொச்சி, காரை, காண்டைப் புதர்களும் நிறைந்த காடாக இருந்துள்ளது.

1991 இல் தீவுப்பகுதியில் ஏற்பட்ட போராலும் அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளும் ஆலயம் பெருமளவு சேதமடையவும் ஆலயச் சுற்றாடல் பற்றைக் காடுகளாக மாறவும் காரணமானது. போரில் ஆலயத்தின் பெருமளவுப் பகுதிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

ஆலயத்தை மீளப் புனரமைத்து அந்தப் பிரதேசத்தில் மீண்டும் ஒளி பிறக்க ஐயனார் வழிபாடு அவசியம் என்பதை மீளக்குடியமர்ந்த மக்கள் நினைவு கூருகிறார்கள்.

ஆலய புனரமைப்புக்கான பணிகள் தற்சமயம் வேகமாக இடம்பெற்று வருகின்றன. திருப்பணிச் சபை உருவாக்கப்பட்டு பொ.ஜெகதீஸ்வரன் தலைமையில் செயலாளர் சு.மகேந்திரன் பொருளாளர் கு.சரவணபவன் ஆகியோர் ஆலய புனரமைப்புப் பணியைக் கவனித்து திருக்கிறார்கள். புனரமைப்புப் பணிகளுக்கு பெருமளவு நிதி தேவையாக உள்ளன.

எப்படியும் ஆலயப் புனரமைப்புப் பணிகளை விரைவாக்கி மகா கும்பாபிஷேகத்தை நடத்தி முடிக்க திருப்பணிச் சபையினர் கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். நிர்வாக சபைத் தலைவர் இ.கதிரவேற்பிள்ளை தற்போது இடம்பெற்று வரும் கட்டுமானப் பணிகளைக் கவனித்து வருகின்றார்.

ஒல்லாந்தர் காலத்தில் இந்தப் பிரதேசத்தில் உள்ள பல்வேறு ஆலயங்கள் உடைக்கப்பட்ட போதும் இந்த ஆலயம் தப்பிக் கொண்டது ஐயனாரின் அற்புதமே என்கின்றனர். ஆலயக் கட்டுமானப் பணிகள் பூரணப்படுத்தப்பட்டு எதிர்வரும் ஆனி மாதத்தில் கும்பாபிஷேகத்தை நடத்த வேண்டும் என்பதில் அந்தப் பகுதி மக்கள் அக்கறை கொண்டிருப்பதாக நிர்வாக சபைத் தலைவர் கதிரவேற்பிள்ளை தெரிவித்தார். கட்டுமானப் பணிகளில் அராலியைச் சேர்ந்த சிற்பக் கலைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.அருள்.[illegible],
3 ஆம் வருடம், மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# அஸ்மா நோய்

அஸ்மா என்பது சுவாசத்தொகுதியுடன் தொடர்புடைய ஒரு நோயாகும். இந்த நோய் எமது உள்ளெடுக்கும் வெளிவிடும் சுவாச செயற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தி சுவாசக் குழாயிலும் அழற்சியை உண்டு பண்ணுகிறது. எனவே இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் சுவாசிக்க கஷ்டப்படுவார்கள். இந்த நோய் சிறு பிள்ளைகளில் அதிகம் ஏற்படுகின்றது. இதனால் உறக்கம் மாத்திரமன்றி கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்படலாம்.



உலக அஸ்மா தினம் உலகம் பூராகவும் மே மாதம் ஏழாம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அஸ்மா விழிப்புணர்வு சிறுவர்களில் அஸ்மா நோயை இனங்காண உதவியுள்ளது. அதிர்ஷ்டவசமாக இளவயதில் அஸ்மா நோய் இனங்காணப்படுவதனால் வயதாகும் போது நோயின் தாக்கத்தைக் குறைக்கலாம். அஸ்மா நோயின் பொதுவான அறிகுறிகளாக இருமல் (பெரும்பாலும் இரவில்), இளைப்பு, நெஞ்சில் அழுத்த உணர்வு மற்றும் நெஞ்சுக்குள் உள் மூச்சு ஒலி என்பன காணப்படும்.

அஸ்மா நோய் ஒரு தொற்று நோயல்ல. பல்வேறு காரணிகளின் விளைவாக சுவாசக்குழாய் வீங்கி, ஒடுங்குவதால் அஸ்மா ஏற்படுகிறது. அஸ்மா நோய்க்கான காரணங்களாக ஒவ்வாமை, பூக்களின் மகரந்தப்பொடி, வைரஸ் மற்றும் பக்றீறியாவினால்ஏற்படும் ஒவ்வாமை, புழுதி மற்றும் தூசு, புகை பிடித்தல், சிலவகை உணவுகள் மற்றும் மருந்துகள், வீட்டுப் பிராணிகளின் உரோமம் என்பன காணப்படுகின்றன.

பெற்றோர் ஒருவருக்கு அஸ்மா இருந்தால் பிள்ளைகளுக்கு நோய் ஏற்படுவதற்கான நிகழ்தகவு 25% ஆகும். பெற்றோர் இருவருக்கும் அஸ்மா இருந்தால் பிள்ளைகளுக்கு 50% நோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு உண்டு. சிறு பிள்ளைகளுக்கு ஒரு வாரத்துக்கு 3 தடவைகளுக்கு மேல் பழங்கள் உட்கொள்ளக் கொடுப்பதால் அஸ்மா நோய் வருவதற்கான சாத்தியக்கூறு குறைவடைகிறது. அதேநேரம் துரித உணவு (Fast Food) சாப்பிடுவதனால் அஸ்மா நோய் வருவது 3 மடங்கு அதிகம். மேலும் உடற் பருமன் அதிகரிப்பும் (Increased Body Mass Index) அஸ்மா நோயில் செல்வாக்குச் செலுத்துகிறது. ஒரு நாளைக்கு 5 மணித்தியாலங்களுக்கு மேல் தொலைக்காட்சி பார்த்தல், இணையப்பாவனை என்பனவும் அஸ்மா நோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறை அதிகரிக்கிறது.

அஸ்மா நோய்க்கு இரண்டு வகையான சுவாச உறுஞ்சிகள் (Inhalers) பயன்படுத்தப்படுகின்றன. அதில் ஒன்று வீங்கி ஒடுங்கும் சுவாசக் குழாயை விரிவடையச் செய்து மூச்செடுப்பதை இலகுவாக்கி நோய் நிலைமையிலிருந்து விடுபட உதவுகிறது. இதற்காக சல்பியூட்டமோல், டெர்பியூட்டலின் போன்ற மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. அஸ்மா மீண்டும் மீண்டும் ஏற்படுவதை தடுப்பதற்கு நோய் நிலைமையை நீண்ட காலத்துக்கு கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியம். இதற்காக உட்சுவாச ஆவி மருந்தாக ஸ்டீரொய்ட்ஸ் (Steroids) வகையை சேர்ந்த மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

வைத்திய ஆலோசனையைச் சரியாகப் பின்பற்றினால், சுவாசப்பைக்கு அவசியமான அளவு மருந்தை மட்டும் பாவித்து நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதோடு, பக்க விளைவுகளையும் குறைக்க முடியும். இச் சிகிச்சை முறை நோயாளியை மருந்திற்கு அடிமையாக்கிவிடும் என்று கூறுவதில் எவ்வித உண்மையுமில்லை. மாறாக அஸ்மா நோய் ஒருவரை வாழ்நாள் முழுவதும் பாதிக்கக்கூடியது. இதனை மருந்துகள் மூலமும் தூசு போன்ற பீறபொருள்களை விலத்துவதன் மூலமும் கட்டுப்படுத்தலாம்.

### சிறுவர்களில் அஸ்மாநோய்

சிறுவர்களில் ஏற்படும் பொதுவான நாட்பட்ட நோய் அஸ்மா நோயாகும். இது பெரும்பாலான குழந்தைகளைப் பாதிக்கின்றது. இது வழமையான மீள மீள ஏற்படும் இருமலாக, முட்டாக, மூச்செடுத்தல் கடினமானதாக அமையும். இதற்குக் காரணம் சுவாசப்பையில் மீள் தன்மையுடைய சுருக்கத்தில் ஏற்படும் மாற்றமாகும்.

குழந்தைகளில் அஸ்மா நோய் உண்டென்பதை மீள மீள வரும் இருமல், இரவு நேரத்தில் ஏற்படும் இருமல், அடிக்கடி மூச்செடுக்க கஷ்டப்படல் மற்றும் நெஞ்சு இறுக்கமாகுதல் என்பன உறுதிப்படுத்தும்.

### வளர்ந்தோரில் அஸ்மா

வளர்ந்தவர்களில் அஸ்மா நோய் அவர்களின் அன்றாட வேலையினைப் பாதிக்கலாம். சிறப்பாக மருந்துகளை உள்ளெடுப்பதனால் எவ்வித சிரமமுமின்றி தமது கருமங்களை ஆற்ற முடியும். சுவாசம் மூலம் உள்ளெடுக்கும் மருந்துகளால் அஸ்மா நோயினை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். சமூகத்தில் ஒவ்வொரு ஐந்து பேரில் ஒருவருக்கு அஸ்மா நோய்த் தாக்கம் உள்ளது. எனவே அஸ்மா நோயினைச் சமூக வாழ்வில் புறந்தள்ள ஆகாது.

### கர்ப்பிணிகளில் அஸ்மா

தாய்மை அடைந்தவர்களில் அஸ்மா நோய் பாதிப்பினை ஏற்படுத்தாது இருப்பதற்கு சிறந்த மருத்துவ சிகிச்சை அவசியம். நோய்க்குச் சிகிச்சை அளிக்காது விடின் ஒட்சிசன் குறைபாட்டினால் கருவின் வளர்ச்சி பாதிக்கப்படும். எனவே கற்பிணிகள் தமக்கு அஸ்மாநோய் இருப்பின் ஒழுங்காக மருத்துவ ஆலோசனைப்படி சுவாசமூலம் உள்ளெடுக்கும் மருந்துகளை உள்ளெடுத்தல் வேண்டும்.

### முதியவர்களில் அஸ்மா

முட்டு வருத்தம் அல்லது தொய்வு நோய் அல்லது அஸ்மாநோய் பொதுவாக முதியவர்களில் காணப்படும் நோயாகும். இது அழற்சி அல்லது ஒவ்வாத்தன்மை காரணமாக ஏற்படும். இருமலுடன் கூடிய சளி, மூச்செடுக்க கஷ்டப்படல், மூச்சு விடும் போது சத்தம் ஏற்படல் மற்றும் நெஞ்சு இறுக்கமாகுதல் என்பன இந்த நோயின் பிரதான அறிகுறிகளாகும். முதியவர்களுக்கு தொய்வு நோயிற்குரிய மருந்துகளில் அளவிடப்பட்ட திரவ உறுஞ்சிகள் (Metered Dose Inhalers) சிறந்தவை. மேலும் உலர்துகள் உறிஞ்சிகளையும் (Dry Powder Inhalers) உபயோகிக்கலாம்.

### அஸ்மா தொடர்பான சில முக்கிய குறிப்புகள்

★அஸ்மா தொற்றுநோய் எண்ணம் தவறானது.

★இது ஒரு பரம்பரை நோயாகும். எனவே பெற்றோர், உறவினர்களுக்கு இருப்பின் பிள்ளைகளுக்கும் ஏற்படும்.

★இருமல் பாணிகளால் முற்றாக கட்டுப்படுத்தலாம் என்பது தவறு. இது பண வீண் விரயத்தை ஏற்படுத்தும்.

★சுவாசமூலம் உள்ளெடுக்கும் மருந்துகளால் உயிராபத்து ஏற்படலாம் என்பது தவறு.

★அஸ்மா நோய் நிலை வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் என்பதால் வாழ்நாள் முழுவதும் மருந்து பாவிக்க வேண்டும். இது மருந்துக்கு அடிமையாதல் என்று பொருளல்ல.

# தள்ளிப்போடும் பழக்கத்தை தள்ளிப்போடுங்கள்

போட்டி நிறைந்த உலகத்தில் மாணவர்கள் எந்த எந்த வகையில் முன்னேறலாம் என்று யோசித்துக் கொண்டு இருக்க வேண்டும். தன்னுடைய திறமை என்ன? எந்த துறை யில் நுழைந்தால் வெல்ல முடியும் என்று நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

வெற்றிக்கு தடைக்கல்லாக இருக்கும் தள்ளிப்போடும் பழக்கத்தை கொஞ்சம் தள்ளி வைக்கலாமே.....

பரீட்சை தான் முடிந்து விட்டதே, அதோடு அடுத்த வருடமோ அடுத்த தவணையோ அல்லது பரீட்சை ஆரம்பிக்கும்போதோ படிக்கத் தொடங்கினால் போதும் பரிட்சையை வெற்றிகரமாக எழுதி விடலாம் என்ற எண்ணம் மாணவர்களிடையே தோன்றுவது இயல்பு தான். ஆனால் அந்த எண்ணத்தை இன்றோடு கைவிடுங்கள். இதனால் இழக்கக்கூடிய விடயங்கள் என்ன என்று சிந்தித்து பாருங்கள்.

தொழில்நுட்பத்தை நோக்கி முன்னேறி கொண்டிருக்கும் உலகத்தில், மாணவர்கள் படித்து பட்டம் பெற்றால் போதும், வேலை தானாகவே கிடைத்து விடும் என்று கண்முடித்தனமாக நம்பிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அது தவறான எண்ணமாகும்.

பள்ளி பருவத்தில் இருந்தே மாணவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். படிப்பு, பொது அறிவு, கணினி அறிவு, சரளமாக ஆங்கிலம் பேசும் திறமை என்று அனைத்திலும் சிறந்து விளங்கினால் தான், ஒரு துறை இல்லையென்றால் வேறொரு துறைக்குள் கால் பதிக்க முடியும்.

தற்போது எந்த துறைக்குச் சென்றாலும் போட்டி தான். படிக்கும் மாணவர்கள் அதிகமாகி விட்டதால் போட்டியும் அதிகமாகி விட்டது. போட்டியில்லாமல் ஏதேனும் துறை உண்டா? என்றால் இல்லையென்று தான் கூற முடியும்.

போட்டி நிறைந்த உலகத்தில் மாணவர்கள் எந்த எந்த வகையில் முன்னேறலாம் என்று யோசித்துக் கொண்டு இருக்க வேண்டும். தன்னுடைய திறமை என்ன? எந்தத் துறையில் நுழைந்தால் வெல்ல முடியும் என்று நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

உங்களின் வெற்றி உங்களின் விருப்பப்படி தான் அமைய வேண்டுமே தவிர மற்றவர்களின் ஆலோசனையோ, கட்டாயமோ இருக்க கூடாது. எந்தச் செயலை எடுத்தாலும் நாளை பார்த்துக் கொள்ளலாம், நாளை பார்த்துக் கொள்ளலாம்...என்று தள்ளிப் போடுவதை விட இன்றைக்கு முடித்து விட்டு, நாளைக்கு புதிதாக என்ன செய்யலாம் என்று நினைக்க வேண்டும்.

நாளை என்று தள்ளிப்போடுவதால், உங்களின் வெற்றியும் உங்களை விட்டு ஒதுக்கி தள்ளிப் போய் கொண்டே இருக்கும். எனவே மாணவர்கள் பாடசாலையில் படிக்கும் பாடங்களை அன்றைய தினமே படித்து முடிக்க வேண்டும். படிப்பதென்றால் அரை குறையாக படித்து விட்டு, மறந்து போவது அல்ல. முழு மனதுடன் புரிந்து படிப்பதாகும். ஒரே நாளில் ஒரு வருடப் பாடத்தை மூளை சுமக்காது. எனவே அன்றைய [illegible] நல்லது. [illegible] பார்த்தால் எளிதில் மறந்து போகமாகல் இருக்கும்.பரீட்சை நேரத்தில் சுமை குறைவதோடு, சுலபமாகப் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியும்.

தள்ளிப்போடும் மனப்பான்மையேத் தள்ளிப் போடுவோம், வெற்றி பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
ஏ - 9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
கொடிகாமம் வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா மொபைல்ஸ்' - மானு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொபைல் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'ஜோதி புக் சென்ரர்' - மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி வலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

## கண்ணுக்குத் தெரியாத களவு

அவசரமாக ஒரு தொலைபேசி அழைப்பை எடுக்கவேண்டும். பரபரப்போடு எண்களை பதிவு செய்து, கைத்தொலைபேசியை காதருகே வைத்து விட்டு மறுமுனைக் குரலுக்காக காத்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் எதிர்பார்த்த குரலுக்குப் பதிலாக, ஒரு குறுஞ்செய்தி வந்து சேர்ந்தமைக்கான ஒலி ஒன்று உங்கள் காதுகளில் விழுகிறது.

வந்த செய்தி என்னவென்று அறியும் ஆவலில் அதைப் படித்த உங்கள் முகம் அடுத்த கணமே இருண்டுபோகிறது.

''வெற்றிகரமாக இந்தப் பாடலை உங்கள் அழைப்பு ஒலியாக பதிவேற்றி விட்டீர்கள். இதற்குரிய கட்டணமாக 35ரூபா உங்கள் கணக்கிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது.'' என்பதே அந்தச் செய்தி. நீங்கள் பயன்படுத்தும் தொலைத் தொடர்பு வசதியை ஏற்படுத்தித் தரும் நிறுவனமே அந்தச் செய்தியை உங்களுக்கு அனுப்பியிருக்கும்.

குறித்த பாடல் உங்களுக்குப் பிடித்தமானதோ இல்லையோ அதை உங்கள் அழைப்பு ஒலியாக அவர்கள் மாற்றியிருப்பார்கள். இதற்கு உங்களிடமிருந்து அனுமதி பெறாமல் அதற்குரிய கட்டணத்தையும் கறந்துவிடுவார்கள். சரி, போனால் போகிறது என்றும் விட்டு விட முடியாது. சரியாக ஒரு மாதத்தால் உங்களுக்கு இன்னொரு நினைவூட்டல் குறுஞ்செய்தியை உங்கள் தொலைத் தொடர்பு நிறுவனம் மறக்காமல் அனுப்பி வைக்கும்.

''தங்கள் அழைப்பு ஒலியாக உள்ள பாடல் தொடர்ந்தும் நீடிக்கவேண்டும் என்றால் குறித்த எண்ணோடு தொடர்புகொள்க. அல்லது இந்தப் பாடலை நிறுத்திக்கொள்ள விரும்பினால் குறித்த எண்ணை அழுத்துக'' என்ற செய்தியை நம்பி, 'தொலைந் தது சனியன்' என்று அந்தப்பாடலை நிறுத்துவதற்கான இலக்கத்தை ஒரே மூச்சில் அழுத்திவிடுவீர் கள். என்றாலும் அந்த நிம்மதி ஒரிரு வாரங்களுக்குத்தான். மீண்டும் ஒரு தருணத்தில் உங்கள் தொலைபேசிக்கு இன் னொரு பாடலை பதிவேற்றி விட்டு, அதற்குரிய கட்டணத்தை அறவிட்டிருப்பார்கள்.

பெரும்பாலான தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் இத்தகைய கண்ணுக்குத் தெரியாத களவில் இறங்கியுள்ளன. வாடிக்கையாளரின் அனுமதி எதுவும் பெறாமலே ஆனால், வாடிக்கையாளரே விரும்பி பதிவேற்றிக்கொண்டதுபோல பாடல்களை அனுப்பி, குறுக்கு வழியில் நிறுவனத்துக்கு பொருளீட்டுகிறார்கள்.

இதைவிட மாதாந்தக் கட்டண வசதிகொண்ட ''சிம்''களுக்கு ஏற்கனவே சொல்லப்பட்டதைவிட வும் அதிக கட்டணத்தை அறவிடுகிறார்கள். அத்தோடு இந்த மாதாந்தக் கட்டண வாடிக்கையாளர்களுக்கு குறிப்பிட்டளவு நிமிடங்கள் இலவச தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ள முடியும் என்று சொல்லப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு எண்ணிக்கை குறிக்கப்பட்ட நிமிடங்களை விடவும் குறைந்தளவு நிமிடங்கள் இத்தகைய இலவச அழைப்புகளை மேற்கொள்ள முடிவதாக அனேகர் குறைபட்டுக்கொள்கிறார் கள்.

ஆனாலும் வாடிக்கையாளர் நலனே தமது உயிர்மூச்சு என்று மார் தட்டிக்கொள்ளும் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தமது கண்ணைப் பொத்தி அடிக்கும் களவுகளை தொடர்ந்து செய்தே இருக்கின்றன. கேட்பார் தான் யாரும் இல்லை.

# மஹிந்தவை இந்தியா பாதுகாத்தது எப்படி?

கொமன்வெல்த் அமைச்சரவை நட நாள்கள் முன்னதாக, மிகவும் எதிர்பார்ப்புக்குரிய வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் பற்றிய சிறப்பு அறிவிப்பை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டிருந்தார்.

வரும் செப்டெம்பரில் தேர்தல் நடைபெறும் என்று திட்டவட்டமாக அறிவித்த அவர், தனது சோதிடர்கள் அதற்கான நல்ல நேரத்தை தெரிவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறியிருந்தார்.

கொமன்வெல்த் அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டத்துக்கு சில நாள்கள் முன்னதாக, இலங்கை பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ஷ விடுதலைப் புலி களின் முன்னாள் முக்கியஸ்தரான தயா மாஸ்டரை யாழ்ப்பாணத்தில் சந்தித்திருந்தார்.

பெரும் ஆரவாரத்துடன் நடத்தப்பட்ட இந்தக் கூட்டம், வடக்கு மாகாண சபைத் தேர் தலில் முதல்வர் வேட்பாளராக முன்னாள் போராளியான தயா மாஸ்டர் நிறுத்தப்படலாம் என்ற உணர்வை ஏற்படுத்தியது.

அந்தக் கூட்டம் கணிசமானளவு விளம்பரத்தைத் தேடிக் கொடுத்தது என்பதை சொல்லிக் கொள்ளத் தேவை யில்லை.

அதேவேளை- நிச்சயமாக வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும், அதற்கான வேட்பாளர்களை நாம் தெரிவு செய்ய வேண்டிய தேவை உள்ளது என்று அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அறிக்கை ஒன்றை வெளி யிட்டார்.

உடனடியாகவே, கொமன்வெல்த் பொதுச்செயலர் கமலேஸ் சர்மா, கொமன்வெல்த் தலைவர்களின் மாநாடு இலங்கையில் திட்டமிட்டபடி நடக்கும் என்று உறுதிப்படுத்தினார்.

கொமன்வெல்த் அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெறத் திட்டமிடப் பட்டிருந்த பின்னணியிலேயே ராஜபக்ஷ சகோதரர்கள் வடக்கு மாகாணசபைத் தேர்தல் பற்றிய அறிவிப் புக்களை வெளியிட்டனர்.

இந்த இரண்டு முன்னேற்றங்களுக்கும் இடையில், சந்தேகத்துக்கு இடமற்ற இணைப்பு ஒன்று இருந்தது.

அந்த வேலையில் இந்தியாவின் கை இருந்தது. வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் அதனை வெளிப்படுத்தின.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் வரும் செப்டெம்பரில் நடத்தப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டால், கொமன்வெல்த் அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தில் இருந்து இலங்கை பாதிப் பின்றி வெளியே வரும் என்று இந்தியா உறுதி அளித்தது.

இந்த விடயத்தில் கொமன்வெல்த் அமைச்சரவைக் குழுவின் தலைவரான பங்களாதேசின் வெளிவிவகார அமைச்சரின் ஒத்துழைப்புடன், இந்தியாவின் செயற்திறன் பெரிதாகவே இருந்தது.

கனடாவும், ஏனைய உறுப்பு நாடுகள் சிலவும் கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும், செயலர் கமலேஸ் சர்மா மற்றும் கொமன்வெல்த் அமைச்சரவைக் குழுவின் தலைவரான பங்களாதேஸ் வெளிவிவகார அமைச்சர் மூலம் திசைதிருப்பி, அந்தக் கூட்டத்தில் இலங்கைக்கு சாதகமான நிலையை இந்தியா ஏற்படுத்தியது.



> வடக்கு மாகாணசபைத் தேர்தல் வரும் செப்டெம்பரில் நடத்தப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டால், கொமன்வெல்த் அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தில் இருந்து இலங்கை பாதிப்பின்றி வெளியே வரும் என்று இந்தியா உறுதி அளித்தது.

அடுத்த கொமன்வெல்த் தலைவர்களின் மாநாட்டுக்கு முன்னதாக, வரும் செப்டெம்பரில் அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டம் நடைபெறவுள்ளது.

வாக்குறுதி அளித்தபடி செப்டெம்பரில் தேர்தலை நடத்துவதற்கு இலங்கையின் மீது செல்வாக்குச் செலுத்தி, அதனை வாக்குறுதிப்படி நடந்து கொள்ள வைப்பதற்கு இந்தியா போதிய கால அவகாசத்தைப் பெற்றுள்ளது.

அதிலிருந்து விலகும் எந்த முயற்சியும் செப்டெம்பரில் நடக்கவுள்ள அடுத்த கொமன்வெல்த் அமைச்சரவைக் கூட்டத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

கொமன்வெல்த்துடன் நேரடியாகத் தொடர்புடைய ஏனைய சந்தர்ப்பங்களிலும் கூட, கமலேஷ் சர்மாவை இந்தியா புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக் கொள்கிறது.

இந்தியாவில் நடைபெற்ற கொமன்வெல்த் போட்டிகளின் முடிவில், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் நிறைவு நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அதில் அவர் வகித்த பங்குக்காக சர்மா தான் ஊடகங்களால் விமர்சிக்கப்பட்டார். சர்மா ஒரு சிறந்த இந்திய இராஜதந்திரி. முன்னர் பிரித்தானியாவுக்கான தூதுவராகப் பணியாற்றியவர். காந்தி குடும்பத்துக்கு நெருக்கமான நண்பர்.

கொமன்வெல்த் செயலகத்தில் சர்மாவையும், ஐ.நாவில் பான் கீ- மூனின் தலைமை அதிகாரி விஜய்கே நம்பியாரையும் தனது நலன்களுக்காக இந்தியா பயன்படுத்திக் கொள்கிறது என்பது நன்கு தெரிந்த இரகசியமே.

போரின் இறுதிக்கட் டத்தில் ஐ.நா பொதுச் செயலர் பான் கீ-மூன் தனது தூதுவராக விஜய் நம்பியாரை இலங்கைக்கு அனுப்பினார்.

அவரது எதிர்ப்பாளர்களும் மனிதஉரிமை செயற்பாட்டாளர்களும் பொதுமக்களின் இழப்புகள் அதிகரிப்பதாக குற்றம்சாட்டிக் கொண்டிருந்த வேளை, அவர் எதுவும் செய்யாமல் கொழும்பில் தங்கி யிருந்தார்.

அந்த நேரத்தில், எஞ்சியுள்ள விடுதலைப்புலிகளை வெள்ளைக்கொடி ஏந்தியவாறு இலங்கை அரச படைகளிடம் சரணடையும்படி ஐ.நா அறிவுறுத்தல் வழங்கியது.

நம்பியார் தம்மைப் புறக்கணித்து விட்டதாகவும், இந்தியாவின் தூண்டுதலால் மௌனமாக இருந்து இலங்கைக்கு உதவினார் என்றும் புலம்பெயர் விடுதலைப்புலிகள் குற்றம்சாட்டினர்.

விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்பதற்காக, எந்தவொரு ஐ.நா தலையீட்டையும் தடுப்பதற்காக நம்பியாரை இந்தியா பயன்படுத்தியது என்பதே அவர்களின் கருத்து.

கொமன்வெல்த் தலைவர்களின் மாநாடு இலங்கையில் திட்டமிட்டபடி நடக்கும் என்று அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தின் பின்னர் உறுதியளிக்கப்பட்டதை யடுத்து, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இழுத்தடித்து வந்த, இந்தியாவினால் மேற்கொள்ளப்படவுள்ள சம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்துக்கான தனது அனுமதியை வழங்கினார்.

இறுதியில் இந்தியாவின் மகத்தான உதவியுடன், கொமன்வெல்த் மாநாட்டை நடத்தும் மிகப்பெரிய வெளிநாட்டுப் பரிசை இலங்கை பெற்றுக் கொண்டுள்ளது.

*(நன்றி - தினக்குரல்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன அனுமதிப்பத்திரக் கட்டணம் மேல் மாகாணத்தில் 10 வீதத்தால் உயர்வு

கொழும்பு, மே 8

மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடும் மோட்டார் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் 10 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்தஆண்டின் வரவு-செலவுத்திட்ட யோசனைகளுக்கு அமைவாகவே இந்தக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாகனங்களின் எடைகளுக்கு அமைவாக இந்தக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவதாக மேல்மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய பெற்றோலில் இயங்கும் மோட்டார் வாகனங்களுக்கான கட்டணம் ஆயிரத்து 300 ரூபாவிலிருந்து 2 ஆயிரம் ரூபாவாகவும், டீசலில் இயங்கும் மோட்டார் வாகனங்களுக்கான கட்டணம் 2 ஆயிரத்து 800 ரூபாவிலிருந்து 3 ஆயிரத்து 100 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மேலும் இரண்டு வீதமான பயன்பாடுகளைக் கொண்டுள்ள பெற்றோல் வாகனங்களுக்கு ஆயிரத்து 300 ரூபாவிலிருந்து 2 ஆயிரம் ரூபா வரையிலும், இத்தகைய டீசல் வாகனங்களுக்கு 3 ஆயிரத்து 200 ரூபாவிலிருந்து 3 ஆயிரத்து 200 ரூபாவாகவும் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மேலும் முச்சக்கர வண்டிகளுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் 500 ரூபாவிலிருந்து 750 ரூபா வரையிலும், மோட்டார் சைக்கிள்களுக்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் 450 ரூபாவிலிருந்து 700 ரூபா வரையும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் துறை பஸ் வண்டிகளின் கட்டண அறவீடுகள் ஆசனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். ஆசனமொன்றுக்கு 150 ரூபா வரையில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (க-22)

## 36 இலட்சத்து 61 ஆயிரம் பேர் பிறந்த மாவட்டத்தை விட்டு வெளியேற்றம்

கொழும்பு, மே 8

இலங்கையின் சனத்தொகையில் 36 இலட்சத்து 61 ஆயிரம் பேர் வரையிலானோர் தாம் பிறந்த மாவட்டத்தை விட்டு வெளியேறிச் சென்றுள்ளனர்.

அவர்கள் வேறுமொரு மாவட்டத்துக்கோ அல்லது வெளிநாடொன்றுக்கோ இடம் பெயர்ந்துள்ளனர்.

ஆறு மாதங்களோ அல்லது அதற்கு மேற்பட்ட காலமாகவோ ஏதோவொரு பிரதேசத்தில் தொடர்ச்சியாக வசித்து வந்துள்ள அல்லது தற்போதும் வசித்துவரும் நபர்களிடையே குடிசன மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடொன்றின் மூலம் இந்த விடயம் வெளிப்பட்டுள்ளது.

திருமணத்தின் காரணமாக தாம் வாழ்ந்து வந்துள்ள அல்லது வாழ்ந்து வரும் பிரதேசத்தை விட்டு நீங்கி வேமொரு பிரதேசத்துக்கு வாழச் சென்றோரின் தொகை 10 இலட்சத்து 69 ஆயிரங்களாகும்.

7 இலட்சத்து 10 ஆயிரம் பேர்

**அவர்கள் வேறுமொரு மாவட்டத்துக்கோ அல்லது வெளிநாடொன்றுக்கோ இடம் பெயர்ந்துள்ளனர்.**

தொழில் நிமித்தம் தமது வாழ்விடப் பிரதேசத்தை மாற்றிக் கொண்டுள்ளதோடு, 6 இலட்சத்து 59 ஆயிரம் பேர் தமது குடும்பத்தின் தேவைகளை முன்னிட்டுத் தாம் வாழ்ந்து வரும் பிரதேசத்தை மாற்றிக் கொண்டுள்ளனர்.

இடம்பெயர்ந்து சென்றிருந்து மீள் குடியமர்த்தப்படுதல் காரணமாகத் தமது வாழ்விடத்தை மாற்றிக் கொண்டோரின் தொகை 3 இலட்சத்து 69 ஆயிரமாகும்.

இந்த நிலைப்பாடுகளை விட, கல்வி சம்பந்தப்பட்ட காரணங்களாலும் ஒரு லட்சத்து 86 ஆயிரம் பேர் தாம் வாழ்ந்த பிரதேசங்களை விட்டு வேறுமொரு பிரதேசத்துக்கு வாழச் சென்றுள்ளனர். (ம-22)

## அனுமதியில்லாது இறக்குமதி செய்யப்பட்ட மோ.சைக்கிள்களை பதிவு செய்ய ஒரு மாத கால அவகாசம்

கொழும்பு, மே 8

அனுமதி பெறாது இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்வதற்கு ஒரு மாதகால அவகாசத்தை வழங்குவதென போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு பதிவு செய்யப்படும் மோட்டார் சைக்கிள்களுக்கு சிலிண்டர் கொள்ளளவுக்கு அமைவாக மேலதிகக் கட்டணமொன்றை அறவிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 50 சென்ரிமீற்றர் அளவுள்ள மோட்டார் சைக்கிள்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும், 51 தொடக்கம் 100 வரைக்கும் 20 ஆயிரம் ரூபாவும், 101 தொடக்கம் 250 வரை 30 ஆயிரம் ரூபாவும், 251 தொடக்கம் 450 வரை 50 ஆயிரம் ரூபாவும் மேலதி கக் கட்டணமாக அறவிடப் படவுள்ளது.

சட்டரீதியான நடைமுறைகளுக்கு முரணான வகையில் இறக்குமதி செய்யப்படும் மோட்டார் சைக்கிள்களால் வீதிப் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்துவதால் போக்குவரத்து அமைச்சு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

மோட்டார் வாகனச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதி நியமங்களுக்கு அமைவாக உள்ள மோட்டார் சைக்கிள்களுக்கு மாத்திரமே இந்தச் சலுகை ஏற்புடையதாக இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-22)

## ஆள் பதிவுத் திணைக்களத்திலும் போலி அடையாள அட்டைகள்

கொழும்பு, மே 8

கொழும்பு-ஜாவத்தையில் உள்ள ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் 20 போலி அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த 20 அடையாள அட்டைகள் தொடர்பான விசாரணைகள் இரகசியப் பொலிஸ் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுவரும் சட்டபூர்வமான அட்டைகளுடன் போலி அடையாள அட்டைகளும் தயாரிக்கப்படும் மோசடி நடவடிக்கை இடம்பெற்று வருவதாகக் கிடைத்த தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது இந்த 20 போலி அடையாள அட்டைகளும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய போலி அடையாள அட்டைகளைத் தயாரிப்பதற்கு ஆள்பதிவுத் திணைக்களத் தில் பணியாற்றும் சில ஊழியர்கள் உதவி புரிந்து வந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

மேலும், போலி அடையாள அட்டை களைத் தயாரித்து வழங்கும் இந்த மோசடிக்கு சில கிராம உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பும் கிடைத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-22)

## தப்பிய கைதி சிக்கினார்

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து தப்பி யோடியதாகக் கூறப்படும் கைதி ஒருவர் 3 மாதங்களின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று மட்டக்களப்பு மாவட்ட விசேட பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர். மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து கடந்த பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி இந்த கைதி தப்பியோடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)


### நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 08.11.1938
இறப்பு 08.05.2009
திருமதி ஆதிபுவனேஸ்வரி செல்வராசா
(முன்னாள் ஆசிரியை)

ஆண்டுகள் நான்கு கடந்து விட்டதம்மா
கண்ணீர் இன்னும் காயவில்லை
சித்திரைப் பூரணை நன்நாளில்
பூத் தூவி கண்ணீர் சிந்தி அர்ச்சிக்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
குடும்பத்தினர்.

### ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11.11.1982
மறைவு 08.05.2007

கண்ணிமைக்கும் கணப்பொழுதினைவிட
கடுகதியாய் கரைந்ததுவோ ஆண்டுகள் ஆறு
மலரும் நினைவுகள் தேக்கிவைத்து
எவரும் காணாத உலகம் சென்றுவிட்டாய்
எம் அன்புச் செல்வமே..........
ஆறவில்லை எம் நெஞ்சம்!
தவிக்கின்றோம் உன் நினைவால்....
உம ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி
நிற்கின்றோம்.

அமரர்
கந்தையா பிறேம்நாத்

தந்தை - கந்தையா,
தாய்- ஞானேஸ்வரி
தம்பி- சுரேஷ்குமார்(லண்டன்)
வரணி இயற்றாலை, வரணி.

### 90 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 07.06.1964
மறைவு 08.02.2013

அமரர்
கி.அன்பழகன்
(கண்ணன்)

முத்திங்கள் கடந்தாலும் கண்ணா நீ
மறைந்தாய் என எண்ண முடியவில்லையே
முற்றத்தில் நின்று அப்பா என்று
அழைக்கும் குரல் கேட்கிறதே
இல்லையில்லை நீ இறைவனடியில்
இருந்தே அழைக்கிறாய் அவன் தாளில்
அமைதியடைவதற்காய்
உன் மடியில் நாளும்
முல்லை மலர் வைத்துப் பிரார்த்திக்கின்றேன்.

244/4, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
- அப்பா அருகில்
அம்மா, சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
வேலன்
தெய்வேந்திரம் (பட்டு)
தோற்றம்:- 09*02*1959
மறைவு :- 08*04*2013

அன்பு நிறை தெய்வமே! எங்கள் குலவிளக்கே!
அவனியோர் போற்றிடவே பண்புடன் வாழ்ந்தவரே!....
ஆறுதல் நீரென்றே அக மகிழ்ந்தோம் இன்றுவரை
ஆறாத துயரதனில் எமையெல்லாம் ஆழ்த்திவிட்டு
அமைதிதேடிச் சென்றதெங்கே?....
திங்களொன்றும் ஆனதையா திக்கற்றுத் தவிக்கின்றோம்
விரைந்து நீர் வாருமையா.....

கடந்த 08.04.2013 ஆம் திகதி இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் செய்தியறிந்து நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள், அமரர் நோயுற்றிருந்தவேளை வைத்திய உதவிகள் புரிந்த Dr.த.துரைராசா அவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட நேசத்துக்குரிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(37089)(2,6)

"மடத்துக்கடவை",
அல்வாய் வடமேற்கு.
குடும்பத்தினர்.

### வீடு வாடகைக்கு

இரண்டு பரப்பு காணியினுள் 3 அறை கொண்ட, தரிசி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
இடம்-உரும்பிராய் சந்தி
தொடர்பு: 077 515 9348 (35163) (6,11)

### வேலையாள்கள் தேவை

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 18-55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம், வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.
தொடர்பு: 077 303 2004 அனுராதபுரம்.

### பணியாள்கள் தேவை

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை.
தொடர்பு: 077 3033 803 அனுராதபுரம்.
(35182) (6,11)

### தேவை

25000/= - 28000/= சம்பளத்துக்கு PVC தயாரிப்பு கம்பனியில் வேலைவாய்ப்புக்கு 18-50 வயது வரையான ஆண்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்டு யானைகள் அட்டகாசத்தால் வகுப்பறையில் தூங்கும் மாணவர்

### மொறவேவா பிரதேசத்தில் அவலம்



திருகோணமலை,மே 8

காட்டு யானைகளின் அட்டகாசத்தால் இரவெல்லாம் தூங்காது விழித்திருக்கும் மொறவேவா பிரதேச அவ்வை கிராம மாணவர்கள் வகுப்பறைகளில் தூங்குவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

மொறவேவா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அவ்வை நகர் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

அந்தக் கிராமத்திலுள்ள மக்கள் இரவு முழுவதும் கண் விழிக்கும் நிலை காணப்படுகிறது. கடந்த போர் காலத்தில் அகதி முகாம்களில் தங்கியிருந்த இந்தக் கிராம மக்கள் அண்மையில் மீள் குடியேறிய போதிலும் காட்டு யானைகளின் தொல்லைகளினால் பயிர்கள் நாசமாக்கப்படுவதுடன் வீடுகள் சேதமாக்கப்படுகின்றன.

இரவு வேளைகளில் யானைக்கு காவல் காக்க வேண்டிய அவல நிலையில் பிள்ளைகள் கண் தூங்காதுள்ளனர். அதனால் பாடசாலை வகுப்பறைகளில் மாணவர்கள் தூங்கும் நிலை காணப்படுகிறது. இதனால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுகிறது என்று பெற்றோர் தெரிவித்தனர். மின் வேலியோ, பாதுகாப்பு வேலிகளை அமைத்துத் தரும்படி மொற வேவா பிரதேச சபையிடம் கோரிக்கை விடப்பட்டு, ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டபோதும் பிரதேச சபை, எந்தவித கவனமும் செலுத்தவில்லை என்று மக்கள் கவலை தெவிக்கின்றனர். (ச)

# பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம்

### மண்முனைப்பற்றில் வீதியில் காத்திருந்தனர் ஊழியர்கள்



மட்டக்களப்பு,மே 8

மட்டக்களப்பு, மண்முனைப் பற்று பிரதேச செயலரை இடமாற்றம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை நிறுத்தக்கோரி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்பட்டது.

மண்முனைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட பெண்கள் அமைப்புகள் இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்தியுள்ளன.

நேற்றுமுன்தினம் காலை முதல் பிரதேச செயலக அலுவலக கதவை பூட்டிவிட்டு யாரும் அலுவலகத்துக்குள் நுழையாத வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அண்மைக்காலமாக காத்தான்குடி நகரசபையால் தமது பகுதிகளுக்குள் மேற்கொள்ளப் பட்டுவரும் தலையீடுகள் மற்றும் பிரதேச செயலரை அச்சுறுத்தும் செயற்பாடுகளை அரசியல்வாதிகள் நிறுத்தவேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கோரிக்கை விடுத்தனர்.

முற்றுகை போராட்டம் காரணமாக பிரதேச செயலக ஊழியர்கள் நீண்ட நேரம் வீதியில் காத்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோரிடம் போராட்டத்தை நிறுத்தி அலுவலகத்தினை திறக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டபோதும், அதனை ஏற்றுக்கொள்ளாது தமது கோரிக்கை நிறைவேறும் வரையில் போராட்டம் தொடரும் என்று தெரிவித்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

**பிரதேச செயலரை அச்சுறுத்தும் செயற்பாடுகளை அரசியல்வாதிகள் நிறுத்த வேண்டும்.**

## போஷாக்கு 'பிஸ்கட்' வழங்கும் நிகழ்வு

திருகோணமலை,மே 8

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பாட்டாளிபுர கிராமத்தைச் சேர்ந்த நிறை குறைந்த குழந்தைகளுக்கு போஷாக்கு பிஸ்கட் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்தநிகழ்வு திருகோணமலை றோட்டரிக் கழகத்தின் தலைவர் பி.ஆர். ஜெயகுமார் தலைமையில் பாட்டாளிபுர மத்திய மருந்தகக் கட்டடத்தில் இடம் பெற்றது.

இந்தநிகழ்வில் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ. எம்.சுக்ரி, திருகோணமலை றோட்டரிக் கழகத்தின் முக்கியஸ்தர்களான ராஜராம் மோகன், ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ச)

## கல்முனை தமிழ்ப் பிரிவு செயலகத்தை தரம் உயர்த்துவதற்கு வழி விடுங்கள்

### கிழக்கு மாகாண சபை உறுப்பினர் வேண்டுகோள்



அம்பாறை,மே8

கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்படுவதற்கு இனிமேலும் முஸ்லிம் அரசியல்வாதிகள் முட்டுக்கட்டையாகவோ தடையாகவோ இருக்கக் கூடாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.இராஜேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் 19 ஆவது மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம் கடந்த பல வருட காலமாக உப- பிரதேச செயலகமாகவே இயங்கி வருகின்றது.

கல்முனை தமிழ்ப் பிரிவுப் பிரதேச செயலகம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சன செறிவிலும், இடப்பரப்பிலும் குறைந்த பல பிரதேசங்களுக்கு அம்பாறை மாவட்டத்தில் முழுமையான பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சாய்ந்த மருது, இறக்காமம் உட்பட சில சிங்களப் பிரதேசங்களிலும் இவ்வாறு முழுமையான பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆனால் கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்தை மட்டும் தரமுயர்த்துவதில் புறக்கணிப்புக் காட்டப்பட்டு வருவதுடன் முட்டுக்கட்டைகளும் போடப்பட்டு வருகின்றன.

நாம் இத்தமிழ்ப் பிரிவு, பிரதேச செயலகப் பிரிவுக்கு எல்லைபோடவில்லை. தமிழ்ப் பிரிவு என்றும் கோரவில்லை. கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்னும் பெயரில் முழுமையான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட வேண்டும் என்றே கோருகின்றோம். - என்றார். (ச-30)

## அமெரிக்க சுற்றுலா பயணிகளைப் புல்லுமலைக்கு வரவழைக்க வேண்டும்

### மட்டு. இணையத்தின் தலைவர் கோரிக்கை

மட்டக்களப்பு,மே 8

கடல் சார்ந்த சுற்றுலாவுக்கு அறுகம்பே போல், வனம் சார்ந்த சுற்றுலாவுக்காக புல்லுமலைக்கு அமெரிக்க சுற்றுலாப் பயணிகள் தினசரி வந்து செல்வதற்கு ஆவன செய்து தரவேண்டும்.

இவ்வாறு அமெரிக்க நாட்டு தூதர் மிச்சேல் சிசெனிடம் மட்டக்களப்பு மாவட்ட இணையத்தின் தலைவர் வி.கமலதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இருநூறு வருடங்களுக்கு முன்னர் இயேசு சபையினர் காலியிலும், யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் கால்பதித்து கல்விமூலமாக இந்த நாட்டின் சுதந்திர சிந்தனையையும் பொருளாதார மேம்பாட்டையும் ஏற்படுத்த அடித்தள மிட்டனர் என்று அவர் கூறினார்.

அவர்கள் இந்த புல்லுமலையிலே பட்டுநூல் பண்ணையையும், நெசவு நிலையத்தையும் உண்டாக்கி 1985 ஆம் ஆண்டுகள் வரை இயக்கி வந்தனர். ஆனால், வன்செயல்களால் அனைத்தையும் அழித்து விட்டன என்று அவர் தெரிவித்தார்.

கடல்சார்ந்த சுற்றுலாவுக்காக அருகம்பேவுக்கு அமெரிக்க சுற்றுலாப் பயணிகள் செல்வதுபோல வனம் சார்ந்த சுற்றுலாவுக்காக புல்லுமலைக்கு அமெரிக்க சுற்றுலாப் பயணிகள் தினசரி வந்து செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## தென்மராட்சி கல்வி வலயக் குழு சம்மாந்துறையில்...



யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள தென்மராட்சி கல்வி வலய [illegible] 58 பேர் கொண்ட குழுவினர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை [illegible]

## மஹிந்த அரசுக்கு 'ஒஸ்கார் விருது'

### கிண்டலடிக்கிறது ஐ.தே.க.

பாரிய அளவில் உயர்த்தப்பட்ட மின்கட்டண அதிகரிப்பை முழுமையாகத் தடைசெய்யாத இந்த அரசு, அப்பாவி மக்களை ஏமாற்றுவதற்காக அதை சொற்ப அளவில் மட்டுமே குறைத்து மே தினத்தன்று பெரும் நாடகமொன்றையே ஆடிவிட்டது.

தொடர்ந்தும் மக்களைப் பெரும் கஷ்டத்துக்குட்படுத்தி அபிவிருத்தி எனும் போர்வையில் கண்கட்டி வித்தையைக் காட்டிக் கொண்டிருக்கும் இந்த அரசின் செயற்பாடுகளுக்கு ஒஸ்கார் விருதையே கொடுத்துப் பாராட்டலாம் - என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

ராஜகிரியவிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்க பணிமனையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசு, மக்களை மென்மேலும் கஷ்டத்தில் தள்ளி அபிவிருத்தி, ஆசியாவின் அதிசயம் எனக் கூறி நாடகமாடிக் கொண்டிருக்கிறது.

இதுபோன்ற அரசின் தொடர் செயற்பாடுகளுக்கு ஒஸ்கார் விருதையே கொடுத்து கௌரவிக்கலாம். மக்களை ஏமாற்றி வந்த இந்த அரசை தற்போது மக்கள் உணர்ந்து விட்டார்கள். இதன் பிரதிபலன் சீக்கிரத்தில் தெரியவரும் எனத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

தருவது வித்தியா

## உங்களுக்கு எப்படி?

**மேடர்:** எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தி யோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.

**இடபர்:** வியாபாரத்தில் இருந்து வந்த சிக்கலுக்கு முடிவு கட்டுவீர்கள். நீண்டநாள் ஆசைகளைப் பூர்த்தி செய்துக்கொள்வீர்கள். வெளியூர் பயணங்களால் சந்தோஷமடைவிர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.

**மிதுனர்:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சகோதரர்கள் உதவுவார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலை மாறும்.

**கடகர்:** பிள்ளைகளை நல்வழி படுத்துவீர்கள். அவர்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**சிங்கர்:** மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**கன்னி:** புதிய எண்ணங்கள் தோன்றும். பணவரவு உண்டு. உத்தி யோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். வியாபாரத்தில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். பால்ய நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மனநிறைவு கிட்டும்.

**நாளை**

*சித்திரை-26 வியாழக்கிழமை 09.05.2013*
*திதி: அமாவாசை முழுவதும்*
*நட்சத்திரம்: அச்சுவினி கா.06.44 வரை*
*சுபநேரம்:07.24- 08.54 வரை*
*இராகுகாலம்: 01.24- 02.54 வரை*

**துலார்:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலி ருந்துபணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்வுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகர்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். விருந்தினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.

**தனுசு:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

**மகரர்:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கும்பர்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். குழந்தைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதர வகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.

**மீனர்:** வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்து போகும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் பிரச்சினைகள் ஏற்படும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 7 | | | | | | 1 |
| | 3 | | 2 | 1 | | 9 | 5 | 7 |
| | | 2 | | | | | 8 | |
| | | | | 6 | 5 | | 9 | 2 |
| 8 | | | 4 | | 2 | | | 6 |
| 6 | 2 | | 1 | 9 | | | | |
| | 9 | | | | | 7 | | |
| 2 | 8 | 5 | | 4 | 7 | | 3 | |
| 1 | | | | | | 5 | 6 | |

### நேற்றைய சுடோக்கின் விடை...

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 7 | 4 | 6 | 1 | 8 | 3 | 2 |
| 4 | 2 | 8 | 3 | 9 | 5 | 1 | 7 | 6 |
| 1 | 3 | 6 | 7 | 2 | 8 | 9 | 5 | 4 |
| 3 | 6 | 4 | 2 | 8 | 7 | 5 | 1 | 9 |
| 8 | 9 | 2 | 5 | 1 | 4 | 6 | 8 | 3 |
| 5 | 8 | 1 | 9 | 3 | 6 | 2 | 4 | 7 |
| 8 | 7 | 9 | 6 | 5 | 3 | 4 | 2 | 1 |
| 2 | 4 | 5 | 1 | 7 | 9 | 3 | 6 | 8 |
| 6 | 1 | 3 | 8 | 4 | 2 | 7 | 9 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்கு [illegible] இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்கு [illegible] ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். [illegible] நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்ட [illegible] 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [illegible] 'தனி எண்' என்பதாகும். 1986 இல் [illegible] 'நிகோலி' இதனை [illegible] வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக [illegible]



இலங்கைக்கு வந்த ஜப்பானின் உதவி நிதி அமைச்சர் திருமதி யுகோ ஓபுச்சி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை அமைச்சில் சந்தித்துப் பேச்சுநடத்தியபோது...

# மாதம் ரூ. 7 லட்சம் கொடுப்பனவு சபை ஒன்றின் தலைவருக்கு

கொழும்பு, மே 6

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் மாதமொன்றுக்கு 7 லட்சத்துக்கு மேற்பட்ட கொடுப்பனவுகளைப் பெற்று வருவதாக கணக்காய்வாளர் நாயகத்தினால் நாடாளுமன்றத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர், சபையின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் என்ற வகையில் பணியாற்றுவதால் திறைசேரியின் அனுமதியைக் கூடப்பெறாது சுற்றறிக்கைகளுக்கு முரணான வகையில் கொடுப்பனவுகளைப் பெற்று வருகின்றார்.

இவருக்கு மாதமொன்றுக்கு 180 லீற்றர் பெற்றோலுடன் 30 ஆயிரம் ரூபா கொடுப்பனவாகப் பெறுவதற்கு உரிமையுள்ளது. ஆனால் இவர் ஒவ்வொரு மாதமும் தலா 2 லட்சம் ரூபா வீதம் போக்குவரத்துக் கொடுப்பனவொன்றைப் பெற்றுக் கொள்கிறார்.

உபசரிப்புக் கொடுப்பனவைப் பெறுவதற்கு இவருக்கு உரிமையில்லை. ஆனால் இதற்கும் மாதமொன்றில் 2 லட்சம் ரூபாவை இவர் பெற்றுக் கொள்கின்றார்.

இவற்றைத் தவிர பணிப்பாளர் சபைக் கூட்டமொன்றுக்குச் சமூகமளிப்பதற்கு ஒரு தடவைக்கு 16 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையிலும் கொடுப்பனவைப் பெற்று வருகின்றார்.

இத்தகைய கூட்டம் மாதாந்தம் ஐந்து தடவைகளுக்கும் மேலாக இடம்பெறுவதாகவும் தெரியவந்துள்ளது.

இதை விடவும் இவர் ஊக்குவிப்புப் படியாக இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட தொகையொன்றைப் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை - நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழுள்ள முகாமைத்துவ சேவைகள் திணைக் களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகமான அசங்க தயாரத்னவினால் விடுக் கப்பட்டுள்ள அறிவித்தலொன்று இங்கு முக்கியத்துவம் பெறு கிறது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளை வழங்குவதற்கு திறைசேரியினால் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படமாட்டாது என அறிவிப்பொன்றை விடுத்துள்ளதாக சிங்கள வார இதழொன்று தெரிவிக்கின்றது. (க-22)

# வாக்காளர் இடாப்பு திருத்தப் பணிகள் 15 இல் ஆரம்பம்

கொழும்பு,மே 8

2013 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்பு திருத்தப் பணிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கிராம உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நடைபெற்று வருகிறது என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

முதற்கட்டமாக எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் வாக்காளர் இடாப்புத் திருத்தப் பணிகளுக்கான படிவங்கள் வீடுகளுக்கு விநியோகிக்கப் படவுள்ளன என்று அவர் கூறினார். வாக்காளர் இடாப்பு திருத்தப் பணிகள் தொடர்பில் மக்களையும் தெளிவுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் முதலாம் திகதி வரை மக்களை தெளிவூட்டுவதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன் ஓர் அங்கமாக அடுத்த மாதம் முதலாம் திகதியை வாக்காளர்களின் தினமாக பிரகடனம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். நிரப்பப்பட்ட படிவங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் சேகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பாதுகாப்புக்கு உத்தரவாதத்தை வழங்கினால் விமானங்களை சேவையில் ஈடுபடுத்த தயார்

## சிவில் விமான சேவை அமைச்சர் கூறுகிறார்



இந்தியப் பொலிஸார் இலங்கையரின் பாதுகாப்பை உறுதி செய்துள்ளனர்.

கொழும்பு,மே 8

இலங்கையரின் பாதுகாப்பை இந்திய அரசு உறுதிப்படுத்தினால் முன்னர் போன்று ஸ்ரீலங்கன் விமானங்களை சென்னைக்கு சேவை யில் ஈடுபடுத்தலாம் என்று சிவில் விமானச் சேவை அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்தார்.

சென்னைக்கான நாளாந்த விமானச் சேவைகள் குறைந்தது விமான நிறுவனத்துக்கு நஷ்டம் தான். எனினும் பிரயாணி களைப் பலியாக்கி நிறுவ னத்தை முன்னேற்றுவது அரசின் நோக்கம் அல்ல என்று அவர் கூறினார்.

பிரயாணிகளின் பாதுகாப்பு விவகாரம் சீராகும் வரை யாத்திரிகர்கள் மற்றும் பிரயாணிகள் சென்னை செல்வது குறைக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியப் பொலிஸார் இலங்கையரின் பாதுகாப்பை உறுதி செய்துள்ளனர். அதனால் சென்னை வருமாறு கோரிக்கை விடுப்பதாக சென்னை பொலிஸ் ஆணையாளர் ஜோசப் செபஸ்தியன் தெரிவித்தார்.

இதேவேளை இந்திய வர்த்தக சமூகம் சென்னையிலுள்ள மகாபோதி நிலையத்துக்கு வந்து தம்மைச் சந்தித்ததாகவும், இலங்கை வர்த்தகர்களை சென்னைக்கு வரச் செய்யுமாறும் கோரிக்கை விடுத்ததாகவும் மகாபோதி நிலையத்தைச் சேர்ந்த கலவானே மஹாநாம தேரர் தெரிவித்தார்.

# முகாமைத்துவ உதவியாளர் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு

தென்மராட்சி, மே 8

வடக்கு மாகாண திணைக்கள அலுவலகங்களுக்கு நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளுக்கு முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் I ஐச் சேர்ந்த உத்தி யோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உடனடியாக செயற்படும் வண்ணம் மாகாண பிரதம செயலாளர் செயலகத்தால் நியமனக் கடிதங்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் கடமையாற்றிய திருமதி க.கணேசலிங்கம் சாவகச்சேரி நகர சபைக்கும், மு.நடராட்ணசிங்கம் வல்வெட்டித்துறை நகர சபைக்கும் நிர்வாக அலுவலர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் பல இடங்களில் மழை

## கொழும்பில் 4 அடிக்கு மேல் வெள்ள நீர் தேக்கம்; 2,212 பேர் இடம்பெயர்வு



கொழும்பு.மே 8
கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் தொடர்ச்சியாககடும்மழைபெய்கின்றநிலையில் பல வீதிகளில் சுமார் நான்கு அடிக்கு மேல் வெள்ள நீர் தேங்கி நிற்கிறது.அதனால் தாழ் நிலப்பகுதிகளில் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் பல பகுதிகளில் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.சில தாழ் நிலப்பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறான வீதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் பல இடங்களில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

வளிமண்டலத்தில் ஏற்பட்டிருக்கும் குழப்பநிலை மற்றும் இடப்பெயர்ச்சி காரணமாக நாடு முழுவதும் அடைமழை பெய்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக மேல் மற்றும் தென் மாகாணங்களிலேயே கூடுதல் மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது என்று திணைக்களத்தின் கடமை நேர அதிகாரி கூறினார்.

கடந்த சில நாள்களாக மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வந்த அடை மழை காரணமாக வத்தளை பிரதேச செயலகப் பிரிவின் சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாக 479 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 212 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் 81 குடும்பங்களைச் சேர்ந்த 331 பேர் தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கென வத்தளை பிரதேச செயலகப் பிரிவுக்குள் நான்கு தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் சரத் லால் குமார கூறினார்.

இதேவேளை மேல் மற்றும் தென் மாகாணங்களில் நாள் முழுவதும் இடைக்கிடை இடி மின்னலுடன் கூடிய மழையை எதிர்பார்க்கலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடும் மழை பெய்யக்கூடிய சந்தர்ப்பங்களில் அதிக மின்னல் தாக்கமும் மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வேகத்தில் காற்றும் வீசக்கூடும். எனவே பொதுமக்களை அவதானத்துடன் இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

புத்தளம், ஹம்பாந்தோட்டை ஊடாக திருகோணமலை வரை கடல் அவ்வப்போது கொந்தளிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதனால் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் விழிப்புணர்வுடன் இருத்தல் அவசியம் என்று நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (ச)

## கா்ஸ் விலை அதிகரிக்காது



கொழும்பு.மே 8
காஸ் விலை ஒருபோதும் அதிகரிகப்பட மாட்டாது என்று பாவனையாளர் அதிகார சபைத் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

லிட்ரோ, லாப் காஸ் விலைகளை அதிகரிக்க அனுமதி கோரப்பட்ட போதும், வர்த்தக அமைச்சர் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருளாக காஸ் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் விலை மாற்றங்கள் அதிகார சபையின் அனுமதியின் பேரிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த முறை விலையை அதிகரிக்க அரசு அனுமதி வழங்கவில்லை என்று அவர் மேலும் கூறினார்.

விலைகள் தொடர்பாக அதிகார சபையின் அதிகாரிகள் பேச்சு நடத்துவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)



தொழிற்சங்க ஒருங்கிணைப்புக்கான ஏற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிரான போராட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால் இடம்பெற்றது. இந்தப் போராட்டத்தில் அரசியல்வாதிகள், தொழிற்சங்கவாதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (பி)

# அரசமைப்பில் திருத்தம் மறுக்கிறது இலங்கை

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு



கொழும்பு.மே 8
இலங்கை ஜனாதிபதி மற்றும் தலைமை நீதியரசரின் பதவிக் காலங்களைக் குறைக்கவும், மாகாணங்களிடம் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறிக்கவும் அரசமைப்பில் 19 ஆவது திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று வெளியான செய்திகளை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

இவ்வாறு அரச முக்கிய அமைச்சரான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

அரச மட்டத்திலோ, அமைச்சரவையிலோ 19 ஆவது திருத்தம் குறித்து விவாதிக்கப்படவில்லை.

ஊடகங்களில் செய்திகள் வெளியான போதிலும் இத்தகைய முயற்சிகள் ஏதும் இடம்பெறவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள கட்சிகள் மத்தியில், பல்வேறு சந்தர்ப்பங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், கூட்டணியில் பிளவு ஏற்படும் சூழல் இல்லை.

எந்தவொரு கட்சியும் அரசில் இருந்து விலகப் போவதும் இல்லை. -என்றார். (ச)

# மனித உரிமைகள் தொடர்பான செயற்பாட்டுத் திட்டம் தயாரிப்பு

## மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை

கொழும்பு.மே 8
மனித உரிமைகள் தொடர்பான செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

சிவில் அமைப்புக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு அதில் அதிக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என்று அதன் ஆணையாளர் பிரதிபா மஹானாமஹேவா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதேச மட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளது.

பிரதேச மட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் கண்டி மாவட்டத்தில் முதலில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்டி மாவட்ட கிளையின் ஊடாக சிவில் அமைப்புக்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுடன் கலந்துரையாடப்படவுள்ளது. -என்றார். (ச)

## புதுவித தண்டனை:

# 300 மணித்தியாலங்கள் கட்டாய சமூக சேவை

கொழும்பு,மே 8
அரச காணியில் சட்ட விரோதமாக இரத்தினக்கல் அகழ்ந்த நபருக்கு பிபிலை நீதிவான் நீதிமன்றம் 300 மணித்தியாலங்கள் கட்டாய சமூக சேவையில் ஈடுபட வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது.

பிபிலையைச் சேர்ந்த ஒருவருக்கே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பிபிலைப் பகுதியின் அரச காணியொன்றில் சட்ட விரோதமாக இரத்தினக் கல் அகழ்வதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

அதனையடுத்து பிபிலைப் பொலிஸார் குறிப்பிட்ட [illegible] செய்து [illegible] இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அஸாத் ஸாலியின் கைது ஜனநாயக விரோத செயல்

## மலையக மக்கள் முன்னணி செயலர் தெரிவிப்பு

கொழும்பு.மே 8
போலிக் குற்றச்சாட்டுகளை சுமத்தி, அஸாத் ஸாலி தடுத்து வைத்திருப்பதானது ஜனநாயக விரோதச் செயலாகும். எனவே, தடுப்பிலுள்ள அஸாத் ஸாலி உடன் விடுதலை செய்யப்பட வேண்டும். இவ்வாறு மலையக மக்கள் முன்னணி செயலர் அ.லோறன்ஸ்வலியுறுத்தியுள்ளார்.

அஸாத் ஸாலி கைது செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் பெருந்தேசிய இனவாதிகள் குறிப்பாக ஹெல உறுமய, பொது பல சேனா போன்ற இனவாத அமைப்புக்கள் தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் எதிராக இன வாதரீதியாக குரல் எழுப்புவதோடு, அண்மைக்காலங்களில், முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்களை பரவலாக நடத்தின.

ஆனால், இவ்விதமாக மோசமான இனவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் சுதந்திரமாகவும், எந்தவித கட்டுப்பாடுமில்லாமல், எவ்வித சட்ட நடவடிக்கைகளுக்கும், உட்படாமல் சுதந்திரமாக நடமாடுகின்றனர். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி, மே 8

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆங்கில உதவிக் கல்விப்பணிப்பாளர் ந.சோமஸ்கந்தராஜாவும் சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிறீஸ்கந்தராஜாவும் கலந்துகொள்வர். (ந)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

af

Learn French The French Way

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

பிரான்ஸ், கனடாவுக்கு செல்வோர், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்களும் இங்கு படிக்கிறார்கள்).

France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. சர்வதேச நிறுவனமொன்றில் French கற்றிட இது ஓர் அரிய சந்தர்ப்பம். உடன் பதிவுசெய்யுங்கள்

புதிய வகுப்பு: சனி, ஞாயிறுகளில்... 2pm-4pm

61, Kachchery-Nallur Road, Jaffna T.P.021.222.8093

கச்சேரி பஸ்தரிப்பு நிலை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்




**முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள் ஆரம்பம்**

**வழங்குபவர் பேராசிரியர் விவேகானந்தம் அவர்கள்**

**எளியமுறை உடற்பயிற்சிகள்**
நோய்களைத் தீர்க்க
நோய் எதிர்பாற்றல் பெருக
80 வயதுடையவர்களும்
செய்ய இலகுவானது.

**சித்தர் அருளிய காய கல்பம்**
உயிராற்றலைப் பெருக்கி
முதுமையைத் தள்ளிப்போட்டு
உடலை வலுப்பெறச் செய்யலாம்

**தியானப் பயிற்சிகள்**
அலையும் மனம் அமைதி பெற
மன அழுத்தம், கோபம், கவலை தீர
மனநிறைவோடு வாழ

**மாணவர்களுக்கு:-**
சோம்பலை நீக்கி சுறுசுறுப்பை உண்டாக்குகின்றது.
ஞாபக சக்தி கூடி நன்கு படிக்க உதவுகிறது. கண்பார்வை சீர்படும்.
**14 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்/ பெண்கள் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.**
ஏற்கனவே பயிற்சிகளை முடித்தவர்களுக்கான அகத்தாய்வு I,II,III பயிற்சிகள் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் நடைபெறும்.
**மீள் பயிற்சி பெற விரும்புவோர் (கட்டணமில்லை) பயிற்சி அடையாள அட்டையைக் கொண்டு வரவும்.**

**இடம்:-**
அருளகம் 14/4, முதலாம் ஒழுங்கை, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி வீதி U.S.Restaurant OPP)
திகதி:- 10.05.2013 வெள்ளிக்கிழமை 3.45 p.m.
பயிற்சி முன்பதிவு மற்றும் தொடர்புகளுக்கு:- 021 320 2286, 077 452 8839

(37180)(2.6.7)

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெகசோதி சுந்தரலிங்கம்



சாவகச்சேரி, மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகசோதி சுந்தரலிங்கம் 06.05.2013 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், ஸ்ரீரஞ்சனா, கலாரஞ்சினி (சுவிஸ்), கிருஷ்ணமோகன், காலஞ்சென்ற குலேந்திரமோகன் மற்றும் சுரேந்திரன் (சுவிஸ்), காலஞ்சென்ற சுதர்சினி ஆகியோரின் அன்புத் தாயும், மேனகா-தேவசகாயம், செந்தில்செல்வன் (ஜேர்மனி), காலஞ்சென்ற கோகுலதாசன் மற்றும் நந்த கோபன், துஷ்யந்தி (பின்லாந்து), தமயந்தி (லண்டன்), கார்த்திகா (கனடா), உதயன், வேணுகோபன் (மலேசியா), பிருந்தா, யதுநந்தன் (பின்லாந்து), ஸ்ரீரங்கன் (U.K) ஆகியோரின் பெரிய தாயும், காலஞ்சென்ற பூபதி விசாலாட்சி (நுணாவில் நன்னடத்தைத் திணைக்களம்) மற்றும் தேவமலர் (பின்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சாம்பசிவம், கிருபாகரன் மற்றும் நடேஸ்வரன் (சுவிஸ்), தேவசகாயம் (நன்னடத்தைத் திணைக்களம்), திருமதி சிவஞானசோதி (ஆசிரியை-யா/கைதடி முத்துக்குமார சுவாமி.வித்), திருமதி மைதிலி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், நிஜிதா, சஞ்சிகா, துவாரகன், யதுஷா, தாரகன், விதுரா, யதுனா, யனோ, சாம்பவி, விருதை ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 3 மணியளவில் மட்டுவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம், சாவகச்சேரி.
0772473002

(35019)(10,8)

தகவல்:
குடும்பத்தினர்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 8

திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத கலையக கோகன சுவாமிகள் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ந-7)

★ ★ ★

கோப்பாய் தெற்கு ஸ்ரீ வீரமாகாளியம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா இன்று புதன் கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது. நாளை மாலை 7 மணிக்கு ஆலயத்தில் சமய அறிவுப் போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும், உற்சவ காலங்களில் 15 தினங்களும் மகா பாரத சொற் பொழிவு நிகழ்த்தி வரும் காரை எம்.பி. அருளானந்தன், உற்சவ பிரதம குரு சிவஸ்ரீ ரவீந்திரராஜக் குருக்கள் ஆகியோரின் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.(ந)

## நூல் வெளியீடு

தி.தவரத்தினம் எழுதிய 'மானிடமும் சோதிடமும்' என்னும் நூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது. இந்த வெளியீட்டு விழா வட்டுக்கோட்டை அடைக் கலம் தோட்டம் ஸ்ரீ கந்த சுவாமி ஆலயக் கல்யாண மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். அராலி இந்துக் கல்லூரி ஆசிரியர் கைலநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும் சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதனும் கலந்து கொள்வர். (ந-28)

**விற்பனைக்கு**

நல்லூர் ஜேசி இவா பு ரினையா வ்
விற்பனைக்குண்டு.
தொ.பே. 077 519 3493, 077 918 4646.
(37166)(40.6.7)

**அலுவலக உதவியாளர் தேவை**

வழுமலையில் உள்ள பிரபல
கனிவி கல்வி நிலையத்திற்கு
அலுவலக உதவியாளர்
தேவை.
5Km இற்கு உட்பட்ட பெண்கள்
மட்டும் விண்ணப்பிக்கவும்.
(வயது: 20-26)
தகைமை: A/L, Ms Office
தொடர்பு: 077 239 5823
(37163)(45.6.7)

## சுவாமி சின்மயானந்தரின் ஜெயந்தி தினம் இன்று

யாழ்ப்பாணம், மே 8

சுவாமி சின்மயானந்தரின் ஜெயந்தி தினம் இன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் இல.09, செட்டித்தெரு ஒழுங்கையில் அமைந்துள்ள சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் ஜாக் கிரத் சைத்தன்ய தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-14)

**வாகனம் விற்பனைக்கு**

மகேந்திரா மக்சிமோ வடி
PS-XXXX வாகனம்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 894 7527
(37098)(46.6.7)

**மணமக்கள் தேவை**

இந்து, கிறிஸ்தவர்கள் அனைத்து இனத்தவர்களிலும் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், SLAS, அரச நிர்வாகத்துறை, விரிவுரையாளர், சட்டவல்லுநர், ஆசிரியர், வங்கியாளர், அனைத்துத்துறை சார்ந்தவர்கள், சைவபோசனர், வெளிநாடு, விவாகரத்து, மறுமணம் தொடர்பு கொண்டு மணமக்களின் விபரங்களுக்கு உடன் அணுகவும்.
S.K. சிவநேசன் (அமைப்பாளர்)
சிவாலய சர்வதேச திருமண நிலையம்,
42/11, இராமலிங்கம் வீதி, நெடுங்குளம், நீராவியடி,
யாழ்ப்பாணம். 077 969 4009, 077 145 0599
Shivaalaya@yahoo.com.
(37097)(45.6.7)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லாச்சி வைத்திலிங்கம்



யாழ்ப்பாணம், மணல்தறை ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லாச்சி வைத்திலிங்கம் (04.05.2013) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், விஸ்ணுகாந்தனின்(கனடா) அன்புத் தாயும், ஜெயமணிதேவியின் (கனடா) அன்பு மாமியும், லக்ஸ்மனின் (கனடா) அன்பு பேர்த்தியும், காலஞ்சென்ற Dr.தில்லைச்சந்திரன் (கனடா) மற்றும் குமுதச்சந்திரவதி, கிருஸ்ணபாலச்சந்திரன்(கனடா), இராதாசந்திரவதி (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்-யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்), நாகசந்திரபூசணி ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2013) புதன்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.10, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021-3214338

(37161)(10,6)

தகவல்:
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 ★ 12 ★ 1929
மறைவு 01 ★ 05 ★ 2011

திதி:- திருதியை

### கதிரேசு கந்தையா

(ஓய்வு பெற்ற அதிபர்)



ஆண்டுகள் இரண்டு சென்றதப்பா
ஆறவில்லை எம் துயரம்
அப்பா உங்களின் உடல்தான் இல்லை
அப்பா ஆனால் உயிர் எங்களுடன் தான்
அப்பா உடலை எங்கே தேடுவோம்,
தேடிப்பார்க்கின்றோம் கிடைக்கவில்லை
ஆசைக் கனவுகளை நிறைவேற்றிய
எங்கள் அன்புத்தெய்வமே
இப் பாரினில் நாம் வாழும் வரை
எம் இதயத்தில் இருத்தி
எந்நாளும் மலர்களால் பூசிக்கின்றோம்
நீங்கள் எங்களுடன் இருப்பீர்கள் என்று
நிதம் உங்கள் பிரிவால் புலம்புகின்றோம்.

[37765][2.6.7]

கந்தரோடை மேற்கு.
சுன்னாகம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் கிழக்கில் கைவிடப்பட்ட மலக்குழியில் எலும்புக்கூடு

வலி. வடக்கு, மே 8

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மாதகல் கிழக்கு ஜே/152 கிராம அலுவலர் பிரிவில் உள்ள கைவிடப்பட்ட மலசல கூடக் குழியில் இருந்து இனம் தெரியாத ஒருவரின் எலும்புக் கூட்டுப் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மாலையில் மாதகல் பகுதியில் உள்ள உதய தாரகை சனசமூக நிலையத்துக்கு அருகில் உள்ள தூர்ந்து போன நிலையில் காணப்பட்ட மலசல கூடக் குழியை துப்புரவு செய்யும் நடவடிக்கையை வீட்டு உரிமையாளர் மேற்கொண்டிருந்தார். அவ்வேளை மண்டையோடு வாயின் பற்கள் உள்ளடக்கிய தாடைப் பகுதி, காலின் துடை எலும்பு என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக இளவாலைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறிப்பிட்ட இடத்துக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க என். பண்டார தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் குறித்த எலும்புக்கூட்டை மீட்டுள்ளனர்.

பொலிஸர் தெரிவித்த தகவலைத் தொடர்ந்து மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிபதி ஜே.தம்பித்துரை சட்டவைத்திய அதிகாரியுடன் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று பார்வையிட்டதுடன் சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி, மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும்படி கட்டளையிட்டுள்ளார்.

(வ-86)

# சிறுவனின் தொடையை பதம்பார்த்த தோட்டா

வலி வடக்கு மே 8

உறவினர் வீட்டுக்குச் சென்ற வேளையில் அங்கு வெடிக்காத நிலையில் உள்ள துப்பாக்கித் தோட்டாவை எடுத்து வந்து கல்லால் குத்தி சோதனை மேற்கொண்ட பாடசாலை சிறுவன் அது வெடித்ததால் தொடையில் காயத்துக்கு உள்ளாகிய நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை சேர்க்கப்பட்டார்.

பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த குறிப்பிட்ட சிறுவன் கிளாலியில் உள்ள உறவினருடைய வீட்டுக்கு கடந்த திங்கட்கிழமை சென்று வந்துள்ளார். அந்தவேளையில் அந்தப் பகுதியில் காணப்பட்ட வெடிக்காத நிலையில் உள்ள தோட்டா ஒன்றை எடுத்து வந்து நேற்றுமுன்தினம் பிற்பகல் கல்லால் குத்தி சோதனை செய்துள்ளார்.

அந்த வேளையில் துப்பாக்கித் தோட்டா வெடித்த போது சிறுவனின் தொடைப் பகுதியில் அதன் அடிப்புறம் உள்ள உலோகத் துண்டு தாக்கியுள்ளது.

(வ-86)

# சுன்னாகம் பொதுநூலகத்தில் புத்தக தின நிகழ்வு



சுன்னாகம் பொது நூலகத்தின் உலக புத்தக தின நிகழ்வுகள் வலி.தெற்கு பிரதேசசபைத் தவிசாளர் தி.பிரகாஷ் தலைமையில் நடை பெற்றது.

இந் நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக அறிவுமிகு சமுதாயத்தில் புத்தகப் பயன்பாடு அதிகரித்துச் செல்கின்றதா? அருகிச் செல்கின்றதா? என்னும் தலைப்பில் விவாத அரங்கு இடம்பெற்றது. நடுவராக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் வே.சிவராசாவும், புத்தகப் பயன்பாடு அதிகரித்துச் செல் கின்றது என்னும் அணியின் பேச்சாளர்களாக சுன்னாகம் பொது நூலகத்தின் ஓய்வுபெற்ற பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி. குமரன் ஆகியோரும் புத்தகப் பயன்பாடு அருகிச் செல்கின்றது என்னும் அணியின் பேச்சாளர்களாக வலி. மேற்கு சுழிபுரம் பொது நூலகத்தின் நூலகர் பா. விஜயகுமார், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் சிவகரன், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியர் எஸ். ரி.அருள்குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கைலாசபிள்ளை விக்னேஸ்வரன்**

விருதுபெற்ற விக்கியண்ணை

(சமூகத் திலகம்)

யாழ். கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட புத்தாண்டு விழாவில் 'சமூகத்திலகம்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையைச் சேர்ந்த வாடிக்கையாளர் விசாரணைப் பிரிவு அதிகாரி கைலாசபிள்ளை விக்னேஸ்வரனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கீத்தா றேடர்** யாழ்ப்பாணம்.

# ஜெயந்தி தினத்தில் இரத்ததானம்

வடமாகாண சின்மயாமிஷன் நிலையத்தின் ஏற்பாட்டில் சுவாமி சின்மயானந்தரின் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு இரத்ததான முகாம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு இல.9 செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்புவோர் ஆச்சிரமத்துக்கு வருகைதந்து இரத்ததானம் செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

## ஆத்மீய யாத்திரை

ஆத்மீய யாத்திரை வானொலி நிகழ்ச்சியானது புதன்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரையிலான தினங்களில் இரவு 7 மணி தொடக்கம் 7.15 மணிவரை Medium Wave 1548 Khz (MW 1548 Khz) அலைவரிசையில் ஒலிபரப்பாகின்றன.

நேயர்களே! இந்நிகழ்ச்சியைச் செவிமடுத்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அருட் தந்தை லால்வெண்ட் போல். 011 223 7474 (37175)(6.2.7)

# விளையாட்டுக் கழகத்துக்கு காணிகொள்வனவு

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு 66 லட்சம் ரூபா செலவில் மைதானத்துக்கான காணி அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி நாவலடி புலம்பெயர் அன்பர்களால் உடுப்பிட்டி பத்திரகாளி அம்மன் ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள 33 பரப்புக் காணியே மைதானத்துக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

(ந-422)

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் உள்ள கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யும் நிறுவனத்துக்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு பொறுப்புகளற்ற கணவன், மனைவி உடன் தேவை. தொடர்பு: 071 867 6424

(46.6.7)

## கோயம்புத்தூர் எலும்பு மற்றும் மூட்டு மருத்துவமனை

வைத்தியர்களை இலங்கையில் இருந்து சந்தித்து ஆலோசனை பெற அரிய வாய்ப்பு

1. கை, கால், முதுகு, தோள், இடுப்பு, முழங்கால், வலிகள் உள்ளவர்கள்
2. 40வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படும் மூட்டுவலி, மூட்டு தேய்மானம் ஆலோசனைகள், நோய் சம்பந்தமான தெளிவு பெறலாம்.

மருத்துவ ஆலோசனை முற்றிலும் இலவசம்



பெயர்களை பதிவு செய்ய

0750 252 141
0777 262 932

Langaa Medical Mission

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரிக்கு அருகில் சுற்றிவர மதில் கட்டியபடி கிணற்றுடன் ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

T.P.077 131 9939

## லொறி விற்பனைக்கு

47- XXXX இலக்கமுடைய Ashok Leyland Ten wheel லொறி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 971 8621/021 739 0250

(35700) (45.6.7)

## Dolphin Van விற்பனைக்கு

57- XXXX தொடரிலக்கமுடைய Dolphin Van 172 Model Seat Original Full Set Doul A/c நல்ல நிலையில் உள்ள வான் விற்பனைக்குண்டு.

(தனிப்பாவனை, லீசிங் மாற்றிக் கொடுக்கப்படும்)

தொடர்பு: 021 221 3200

(மாலை 6 மணிக்குப் பின் தொடர்புகொள்ளவும்.

(37169) (45.6.7)

## மரண அறிவித்தல்

### கந்தையா நல்லையா

(விஷகடி வைத்தியர்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்துவந்தவருமான கந்தையா நல்லையா (06.05. 2013) திங்கட்கிழமை காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அப்புத்துரை ரகுநாதன் (மருமகன்), சுதுமலை.

"நாதன்'ஸ் ஆயுள்வேத மருந்துக்கடை", கிளிநொச்சி. (2.6.7)(37176)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11 . 11 . 1926 | 04 . 05 . 2008 |



அமரர் **கந்தையா செல்லையா**

திதி: அபரபட்ஷ சதுர்த்தசி (08.05.2013)

''நெஞ்சில் திடம்
நேர்மைத் திறன்
வஞ்சனைகளை விரட்டியடிக்கும் செயல்''
ஆண்டு ஐந்தில் விழிகள் நிறைந்து வழிந்தோடுகின்றன
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கின்றோம்

''சித்தம்பாதி''
கரணவாய் தெற்கு, கரவெட்டி. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா பொன்னையா



நல்லூரைப் பிறப்பிடமாகவும் துன்னாலை கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னையா (06.05.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்மணி தம்பதியரின் ஏகபுதல்வனும் காலஞ்சென்றவர்களான இளையவி -சீதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கோவிலாள் (காவேரி)இன் அன்புக் கணவரும் சிவபாதம் (முன்னாள் பனை அபிவிருத்தி சபை தலைவர்), அச்சுதம்பிள்ளை (முகாமையாளர் சனச அபிவிருத்தி வங்கி யாழ்ப்பாணம்), சதாசிவம் (கனடா), உதயகுமார் (கனடா), தவமணி, பர்வதகல்யாணி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராசா, காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் யோகமணி, ரஞ்சினி (இளைப்பாறிய ஆசிரியை), சந்திரமலர் (கனடா), யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் சுமதி (கனடா), சுகந்தினி (கனடா), பாமினி, விமேஸ் (கனடா), சுகந்தரூபன் (லண்டன்), காந்தரூபன் (லண்டன்), தாரிசரூபன் (லண்டன்), ஸ்ரீஜனனி (லண்டன்), மோகனரூபி, கார்த்திகா (முகாமையாளர் இலங்கை மத்திய வங்கி, திருகோணமலை), நிரோஸ், சோபனா (கனடா), லக்ஷன் (கனடா), சாளினி, ஷனுஜன், ஆகாஷ் (கனடா), அபிலாஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் நிவேதா, அஜீனா, அஸ்வின், அஜீன், கவீனா, கஜீன, நிஷானா (கனடா), கஸ்விதா, ஆகியோரின் அன்பு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் துன்னாலை கரவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (09.05.2013) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கரவெட்டி வேரோண்டை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

நீதிராசா சுகந்தினி -0019058586071 (கனடா)
சந்திரன் சுமதி - 0019059973567 (கனடா)
பொன்னையா சதாசிவம் - 0014163219070 (கனடா)
பொன்னையா உதயகுமார் - 0014162584288 (கனடா)
சிவராசா விமேஸ்-0016474039345 (கனடா)
சிவபாதம் சுகந்தரூபன் -00447440521391 (லண்டன்)
பொன்னையா அச்சுதம்பிள்ளை-0773464756 (இலங்கை)

"முருகஸ்தான்"

தகவல்:
குடும்பத்தினர்.

(37174)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் மகோற்சவ கால கடைகளுக்கான ஏலம்கூறல் நிகழ்வு - 2013

மேற்படி ஆலயத்தின் இவ்வருட மகோற்சவம் 15.05.2013 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26.05.2013 ஆம் திகதி பூங்கா வனத்திருவிழாவுடன் நிறைவுறும். அக்காலங் களில் குறிப்பிடப்படும் இடத்தில் கடை அமைக்க விரும்புபவர்களுக்கான ஏலம் கூறல் நிகழ்வு 12.05.2013 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் ஆலய முன்றிலில் இடம்பெறும் என அறியத்தருகிறோம்.

தர்மகர்த்தாக்கள் சபை, (சி/8887)(6.2.7)
கும்பழாவளைப் பிள்ளையார் கோயில், அளவெட்டி.


# மஹிந்த அரசுக்கு 'ஒஸ்கார் விருது'

## கிண்டலடிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு, மே 8

மிக அதிகமாக உயர்த்தப்பட்ட மின் கட்டண அதிகரிப்பை முழுமையாகத் தடைசெய்யாத இந்த அரசு, அப்பாவி மக்களை ஏமாற்றுவதற்காக அதை சொற்ப அளவில் மட்டுமே குறைத்து மே தினத்தன்று பெரும் நாடகம் ஒன்றை ஆடி விட்டது.

தொடர்ந்தும் மக்களை பெரும் கஷ்டத்துக்கு உட்படுத்தி அபிவிருத்தி எனும் போர்வையில் கண்கட்டி வித்தையை காட்டிக் கொண்டிருக்கும் இந்த அரசின் செயற்பாடுகளுக்கு இந்த ஒஸ்கார் விருதையே கொடுத்துப் பாராட்டலாம்- என ஐ.தே.கட்சியின் ஊடகப் பேச்சாளரான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

ராஜகிரியவிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கப் பணிமனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிவேகப் பாதைகள் மற்றும் தெயட்ட கிருல தேசியக் கண்காட்சிகள் மூலம் மக்களிடமிருந்து பணத்தைக் கொள்ளையடித்த இந்த அரசு தற்போது நிகழ்த்தப்பட்ட மேதினக் கூட்டத்தின் போது பெரிய கண்கட்டி வித்தையொன்றையே செய்துவிட்டது.

இலங்கை வரலாற்றிலே இல்லாத வண்ணம் பெருமளவில் மின்சாரக் கட்டணத்தை இந்த அரசு உயர்த்தி மக்களைச் சிக்கலில் சிக்க வைத்தது. இந்த மின் கட்டண உயர்வை எதிர்த்து மக்கள் நாடு முழுவதும் பல போராட்டங்களையும் செய்தனர்.

ஆனால் அப்போதெல்லாம் மக்களின் அந்தக் கோரிக்கையை ஏன் என்று கூட கேட்காத இந்த அரசு, நடைபெற்ற மே தினக் கூட்டத்தின்போது மின் கட்டணத்தை சொற்ப அளவில் குறைத்து மக்களை நன்றாக ஏமாற்றிவிட்டது என்றார். (ஒ-சி)


## மரண அறிவித்தல்கள்



### திருமதி பாக்கியம் துரைசிங்கம்

பலாலியைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியம் துரைசிங்கம் நேற்றுமுன் தினம் (06.05.2013) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லர் - ராமி, தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், மரியநாயகத்தின் சகோதரியும், டேவிற்றெஜினோல்டின் அன்புத் தாயும், காலஞ்சென்ற றெஜினாவின் அன்பு மாமியும், றெஜி, ஜெனோ (சுவிஸ்), றெனா (யாழ். பல்கலைக்கழகம்), நெவில்ஸ்ரன் (கட்டார்), டெஸ்மன், அகிலன் ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும், அபிஷாயினி, ஸ்ரேபிகாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (08.05.2013) புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி இடம்பெற்று கலட்டி கீரிபல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளையன் தோட்டம், நெல்லியடி.
077 335 9511

தகவல்:
து. டேவிற் (மகன்).
(35363) (45.6.7)

### தம்பையா நாகலிங்கம்



ஒட்டுவெளி, மிருசுவிலைப் பிறப் பிடமாகவும் காளிகோயிலடி, சப்பச்சிமாவடி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா நாகலிங்கம் 05.05.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் புஸ்பராணி, புஸ்பதேவி, புஸ்பலதா(ஆசிரியை, யா/மீசாலை கமலாம்பிகை வித்.) புஸ்பராசா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகநாதனின் (பனை அபிவிருத்திச் சபை)அன்பு மாமனும், நிமாலினி, விஸ்ணவி,விகாசினி ஆகியோரின் அன்புப் பேரனும், ஷம்சிகாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று முன்தினம் (06.05.2013) திங்கட்கிழமை சாவகச்சேரி,கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சப்பச்சிமாவடி, சாவகச்சேரி.
077 644 7402 (35020)(5.6)

தகவல்:
ஜெகநாதன் (மருமகன்).


# தென்மராட்சி கட்டடப் பணியாளர் குடும்ப மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள்

## தமிழ்நாடு சிமெந்து நிறுவனத்தால்

தென்மராட்சி, மே 8

தமிழ்நாடு ராம்கோ சிமெந்து நிறுவனத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கட்டடப் பணியில் ஈடுபடும் குடும்பங்களைச் சேர்ந்த 484 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட கட்டடப் பொருள்கள் விற்பனை நிலைய உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் நிறுவன உயர் அதிகாரிகளால் நடத்தப்பட்டது. அதன் போது வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கட்டடப் பணியாளர்களின் நிலைகுறித்து எடுத்துக் கூறி இருந்தார்.

கல்வி கற்கும் அவர்களது பிள்ளைகளுக்கு உதவி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்த விடயங்களை செவிமடுத்துச் சென்ற உயர் அதிகாரிகள் 484 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை கப்பலில் அனுப்பி வைத்துள்ளதாக அறிவித்துள்ளதாக மன்றச் செயலாளர் க.சுதாகரன் தெரிவித்தார்.

மன்றத்துக்குக் கிடைத்த 17 கல்வி நிதியங்கள் மூலமும் 37 வணிகர்களின் மாதாந்த பங்களிப்புடனும் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சாவகச்சேரி கைத் தொழில் வணிகர் மன்றத்தினர் கல்வி வளர்ச்சி நிதி வழங்கி வருவது குறிப்பிடத் தக்கது. (வ-9)


## வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் நகருக்குக் கிட்டிய தூரத்தில் சகல வசதிகளும் உடைய மூன்று அறை வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 925 1048
(37177)(6.2.7)


## மனனப்போட்டி

வண்ணை- சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் குரு பூசையை முன்னிட்டு மனனப்போட்டியை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டியில் பாலர் பிரிவில் தரம்-1, 2 மாணவரும், கீழ் பிரிவில் தரம்-3,4 மாணவரும் கலந்து கொள்ளலாம். பாலர் பிரிவில் தோடுடைய செவியன், மந்திர மாவது நீறு ஆகிய தேவாரங்களும், கீழ் பிரிவில் வேயுறு தோளி பங்கன், அங்கமும் வேதமும் ஆகிய இரு தேவாரங்களும் மனனம் செய்ய வேண்டும். மனனப் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும் என்று கழகம் அறிவித்துள்ளது. (ந)





## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையில் சைக்கிள் ஏவலாளியாகக் கடமையாற்றும்

### அந்தோனிராஜ் ஜோர்ஜ்

அவர்கள் 06.05.2013 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!

(சி/8885)2.6.7)

பணிப்பாளர், பணியாளர்கள், ஊழியர் நலன்புரி சங்கம்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## திருமதி தம்பிஜயா மங்களேஸ்வரி

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும், அப்பையா லேன், கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட தம்பிஜயா மங்களேஸ்வரி நேற்று (07.05.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அப்பையா- செல்லம்மா தம்பதியரின் மருமகளும், தம்பிஜயாவின் அன்பு மனைவியும், மாலினி (உதயன் பணிமனை, விளம்பரப்பகுதி) அவர்களின் அன்புத் தாயும், இரவிந்திரன் (யாழ். மாநகரசபை) அவர்களின் அன்பு மாமியும், லக்ஷன், லக்ஷனா, சிவஜெயந்தன் (குடும்பநல உத்தியோகத்தர், உரும்பிராய் வடக்கு), துவாரகா (முகாமைத்துவ பீடம், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2013) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அப்பையா லேன்,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/8894)(16.14.9)

## சரவணமுத்து திருஞானசம்பந்தமூர்த்தி (காண்டீபன்)



வயாவிளான் மேற்கைப் பிறப்பிடமாகவும் 41/A. முருகன் வீதி, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து திருஞானசம்பந்தமூர்த்தி நேற்று(07.05.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், 84A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-இராசம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மங்கையர்க்கரசியின்(சந்திரா) அன்புக் கணவரும், சுபோ ஜினி (றாஜி), றொசினா(சுவிற்றா-சுவிஸ்), றொபின்சன்(நீகன்), ஜனார்த் தனன்(ஜனா, ஆஸ்திரேலியா) ஆகியோரின் தந்தையும், சேகர், கலை மோகன்(சுவிஸ்), அன்பரசி (தீபா) ஆகியோரின் மாமனும், வேர்ஜீனா, வலண்டினா ஆகியோரின் பேரனும், மங்களவதி, சரஸ்வதி, காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், ஜெயம்(ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான சிறிமகேஸ்வரன், பிறவுண்ராஜ், பாலச்சந்திரன், கனகாம்பிகை(தேவி, கனடா), லிங்கேஸ்வரி(கனடா), ரெட்ணஜோதி(கனடா), அனுசியா(றதி-கனடா), குணவதி (இந்தியா), இந்திராணி(அமெரிக்கா), கிருபாளினி(யதி-வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2013) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக பி.ப. 2.00 மணியளவில் கோண்டாவில் ஆணி பக்றறி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41/A, முருகன் வீதி, ஆடிய பாதம் ரோட்,
திருநெல்வேலி கிழக்கு.

தகவல்:
S. சேகர்(மருமகன்)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சிவபாலசிங்கம்

சங்கரத்தையைச் சேர்ந்த கந்தையா சிவபாலசிங்கம் நேற்று (07.05.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -செல்லக்கண்டு தம்பதியரின் அன்பு மகனும், சோமாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, பாக்கியம் மற்றும் மலர், மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சறோஜினி தேவி, ரவீந்திரன் ,உமாதேவி, மல்லிகாதேவி, புலேந்திரன், குகேந்திரன், சாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினசபாபதி, செல்வநாயகி, றேனிக்கலிஸ்ரன், அன்ரன், சிவமலர், சூரி, லோகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், கிரிஜா, சுரேஷ், சாளினி, முகுந்தன், கௌசியன், யசோ, தீபன், டயானா, தீபன், வனஜா, ஜானு, றொபின், பேணாட், ரமேஷ், குகனயன், புவினயன், ஜிஷ்னுகா ஆகியோரின் அன்புப் பேரனும், ஐஸ்வரியாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2013) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Dr. செல்லத்துரை வீதி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குகேந்திரன்
(மகன்- வலின்)

(37188) -17 16-14)

## சீவரத்தினம் இரஞ்சனதாஸ்(ரஞ்சன்)



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.81/14 A, பிறவுண் வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் இரஞ்சனதாஸ்(ரஞ்சன்) நேற்று(07.05.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பையா மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஜசாந், விஸ்ணுறாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராசாவின் (இந்தியா) சகோதரனும், நடராசா, மகேஸ்வரன் (கனடா), செல்வராசா(லெபனான்), தியாகராசா(லண்டன்), முரளிதரன்(லண்டன்), ஜீவராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2013) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் பி.ப. 3.30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரி யைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.81/14 A, பிறவுண் வீதி,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 0049504

## இராமலிங்கம் சிவஞானம்

(பழைய சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர், காங்கேசன்துறை)



கொல்லன்கலட்டி, வித்தகபுரத்தைப் பிறப்பிடமாகவும் மாவத்தை, அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சிவஞானம் (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-கற்பகம் தம்பதியரின் அன்பு மகனும்,அன்னபூரணம், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் இரத்தினபூபதி, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும்,காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், சிறிகுமாரின்(சுவிஸ்) அன்புத் தந்தையும், உஷாந்தினியின் (சுவிஸ்) அன்பு மாமனும், ஜனுஜனின் (சுவிஸ்) பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2013) புதன் கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வித்தகபுரம் கொப்பளா கடவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவத்தை,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல்:
இ.சிறிகுமார் (மகன்-சுவிஸ்),
உஷாந்தினி (மருமகள்-சுவிஸ்),
ஜனுஜன் (பேரன்-சுவிஸ்),
மருமக்கள்.

(37180)(5.6.7)

## திருமதி தனலக்ஷ்மி சங்கரப்பிள்ளை



கோயிற்கடவை துன்னாலை மத்தியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தனலக்ஷ்மி சங்கரப்பிள்ளை நேற்று முன்தினம் (06.05.2013) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வார்- மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற வல்லிபுரம் சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், உதயகுமார் (கனடா), உருத்திரகுமார் (ஆசிரியர், யா/நெல்லியடி ம.ம வித்தியாலயம்), அசோக்குமார் (கனடா), பாமதி (பிரான்ஸ்), விஷ்ணுகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவனேசம் (கனடா), தமயெந்தி (கனடா), இராசேந்திரம் (பிரான்ஸ்), வசந்தகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், நிரோஷன், நிவேதா, கோகுலன், ராகுலன், கீர்த்தனா, கிரிசாந், விஷ்வா, ஆகாஷ், அக்ஷன், அபீஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.05.2013) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் வேதோண்டை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயிற்கடவை
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P- 0776162338

(சி/8895)(16.14.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடர் வெற்றிகளே தோல்விக்கு காரணம்

## கவலைப்படுகிறார் டோனி

தொடர்ச்சியான வெற்றிகளே எமது தோல்விக்குக் காரணம் - இவ்வாறு தெரிவித்துள்ளார் சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் டோனி.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற ஐ.பி.எல். 49ஆவது லீக் ஆட்டத்தில் ஏற்பட்ட தோல்வி குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

''தொடர்ச்சியான வெற்றிகளால் நாங்கள் அசண்டையீனமாக இருப்பதை நினைத்து ஆட்டத்துக்கு முன்பாக பிளமிங் (சென்னை அணியின் பயிற்சியாளர்) கவலைப்பட்டு கொண்டிருந்தார்.

அந்த ஆட்டத்தில் நாங்கள் 139 ஓட்டங்களை நாங்கள் எடுத்திருக்க வேண்டும். துடுப்பெடுத்தாடும் பொழுது ஏற்றுக்கொள்ள முடியாத நிறைய தவறுகளை செய்து விட்டோம். இது எங்களுக்கு ஒரு எச்சரிக்கை மணி.

ஆரம்பத்தில் நாங்கள் சிறப்பாகத்தான் பந்து வீசினோம். ஆனால் இறுதி கட்டத்தில் சில தவறுகளைச் செய்துவிட்டோம். வெய்ன் பிராவோ 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசியிருப்பதாக நினைத்துவிட்டேன்.

ஆனால் அப்போது அவர் ஒரு பந்துப்பரிமாற்றத்தை மட்டுமே வீசியிருந்தார். தவறாக கணக்கிட்டதால் பிராவோ மேலும் ஒரு பந்துப்பரிமாற்றம் வீச முடியாமல் போனது. மேலும் இந்த ஆடுகளம் பந்து வீச்சாளர்களுக்கு உகந்ததாக காணப்பட்டது''- என்றார். (ற)

# மில்லர் அதிரடி வென்றது பஞ்சாப்



டேவிட் மில்லரின் அதிரடியான சதத்தால் 6 இலக்குகள் வித்தியாசத்தில் பெங்களூர் அணியை வீழ்த்தியது பஞ்சாப்.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு மொகாலியில் நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் - பெங்களூர் அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 3 இலக்குகளை இழந்து 190 ஓட்டங்களை எடுத்தது. கெய்ல் 33 பந்தில் 3 சிக்ஸர், 6 பவுண்டரிகளுடன் 61 ஓட்டங்கள் விளாசினார். புஜாரா 51 ஓட்டங்களும், டிவில்லியர்ஸ் 38 ஓட்டங்களும், ஹென்ரிக்ஸ் 16 ஓட்டங்களும், கோஹ்லி 14 ஓட்டங்களும் எடுத்தனர்.

பஞ்சாப் தரப்பில் கோனி 2 இலக்குகளையும், அவானா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

191 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடியது பஞ்சாப்.

மார்ஷ் 6 ஓட்டங்களுடனும், மன்தீப்சிங் 16 ஓட்டங்களுடனும், குர்கீரத்சிங் 20 ஓட்டங்களுடனும், டேவிட் ஹசி 13 ஓட்டங்களுடனும் வெளியேறினர்.

ஒருகட்டத்தில் 10 பந்துப் பரிமாற்றத்தில் பஞ்சாப் அணி 4 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களை எடுத்துத் தடுமாறியது. பெங்களூரின் வெற்றி கைக்கெட்டும் தூரத்தில் இருந்தது.

ஆனால் பெங்களூரின் வெற்றிக் கனவை தகர்த்தனர் டேவிட் மில்லர், சதீஷ் இணை. பெங்களூர் அணியின் பந்து வீச்சை இருவரும் பதம் பார்த்தனர். மில்லர் பவுண்டரியும் சிக்ஸர்களுமாக விளாசி மிரளவைத்தார். அவர் 38 பந்துகளில் 7 சிக்ஸர், 8 பவுண்டரிகளுடன் சதம் விளாச பஞ்சாப் அணி 2 பந்துப் பரிமாற்றங்கள் மீதமிருக்கையில் 4 இலக்குகளை இழந்து 194 ஓட்டங்களை எடுத்து அபார வெற்றி பெற்றது.

பஞ்சாப் அணி கடைசி 5 பந்துப்பரிமாற்றங்களில் 99 ஓட்டங்கள் குவித்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

சதீஷ் 18 பந்தில் 1 சிக்ஸர், 2 பவுண்டரிகளுடன் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். பஞ்சாப் அணிக்கு இது 5ஆவது வெற்றியாகும். பெங்களூர் அணி 5ஆவது தோல்வியை சந்தித்தது. ஆட்ட நாயகன் விருது டேவிட் மில்லருக்கு வழங்கப்பட்டது. (ற)

## டோனிக்கு வழக்கு



கடந்த மாதம் வெளியான 'பிசினஸ் டுடே' இதழின் அட்டைப்படத்தில், இந்திய கிரிக்கெட் அணி தலைவரை இந்துக் கடவுள் விஷ்ணுவாக சித்தரித்து அவரது கையில் ஷூ உட்படப் பல்வேறு பொருள்களை வைத்திருப்பது போல் பிரசுரிக்கப்பட்டிருந்தமை தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக சமூக ஆர்வலர் ஒருவரால் தற்போது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவர் தாக்கல் செய்த மனுவில் இந்து கடவுளை அவமதிக்கும் வகையிலும், இந்துக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையிலும் விளம்பரத்திற்கு டோனி போஸ் கொடுத்திருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

அவரது முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், விசாரணையை எதிர்வரும் 12ஆம் திகதிவரை ஒத்தி வைத்துள்ளது. (ற)

# கோட்டை விட்டார் கோஹ்லி



பெங்களூருக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் அணி 13 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகள் இழப்பிற்கு 95 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. அப்போது மில்லர் 22 பந்தில் 41 ஓட்டங்கள் எடுத்திருந்தார். அந்த சமயத்தில் அவர் கொடுத்த பிடியை கோஹ்லி தவறவிட்டார். அதுதான் ஆட்டத்தின் திருப்புமுனையாக அமைந்தது. கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்ட மில்லர் அதிரடியால் வெற்றியை பெங்களூர் அணியிடம் இருந்து பறித்துச்சென்றார். (ற)

# விலகினார் வீனஸ்



ஸ்பெயினில் நடைபெறவுள்ள மாட்ரிட் ஓபன் ரென்னிஸ் தொடரில் இருந்து உடற்தகுதியின்மை காரணமாக முன்னணி ரென்னிஸ் வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் விலகியுள்ளார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டத்தில் முன்னணி வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா), அனபெல் மெடினாவை (ஸ்பெயின்) எதிர்த்து விளையாட இருந்தார்.

இந்தநிலையில் தற்போது முதுகுவலியால் பாதிக்கப்பட்டுள்ளதை அடுத்து 32 வயதான வீனஸ் வில்லியம்ஸ் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

வீனஸ் வில்லியம்ஸுக்கு பதிலாக 56ஆம் நிலை வீராங்கனை ஸ்டெபானிக்கு (ஸ்பெயின்) வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. (ற)

## 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டம்

# யாழ். மத்திய கல்லூரி சம்பியன்



யாழ்ப்பாணம், மே 8

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 19வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரில் யாழ் .மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று செவ்வாய்க்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதி[illegible]யது.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதனைத் தொடர்த்து இடம்பெற்ற மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் அணி மோதிக்கொண்டது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை [illegible] கொண்டது. [illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட் வீரர்களுக்கான பயிற்சிமுகாம் இன்று

யாழ்ப்பாணம், மே 8

யாழ்.மாவட்ட பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 14, 19 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட் வீரர்கள் மற்றும் தரம்1 கிரிக்கெட் பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாம் இன்றும், நாளையும் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையின் தேசிய பயிற்றுவிப்பாளர்களான ஜெறோம் ஜெயரெட்ணம், சம்பக இரம நாயக்க, பியல் விஜயதுங்க, ஜெசி கமகே மற்றும் மாவட்ட மாகாண கிரிக்கெட் பயிற்று நர்கள் பயிற்சிகளை வழங்கவுள்ளனர் .

இன்று காலை 8.30 மணி தொடக்கம் ந.ப. 12 மணி வரை 14,15,16 வயதுப் பிரிவினர்களுக்கான பயிற்சியும், பிற் பகல் ஒரு மணி தொடக்கம் 4 மணி வரை 17,18,19 வய துப் பிரிவினருக்கான பயிற்சிகளும் இடம்பெறும். இதே வேளை, காலை 9மணி தொடக்கம் ந.ப.12 மணிவரை பாடசாலை கிரிக்கெட் பொறுப் பாசிரியர்களுக்கான செயலமர்வு இடம்பெறும்.

நாளைக் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை பாடசாலை கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் கிரிக்கெட் தரம் 1 இல் சித்தியடைந்த கிரிக்கெட் பயிற்றுநர்களுக்கான பயிற்சிகள் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-23)

### 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கபடி

# கலட்டி றோ.க.த.க. சம்பியனானது



யாழ்ப்பாணம், மே 8

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவு ஆண்க ளுக்கான கபடிப் போட்டியின் இறுதியாட் டத்தில் கலட்டி றோ.க.த.க. பாடசாலை அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதா னத்தில் இடம்பெற்ற இறுதி யாட்டத்தில் கலட்டி றோ.க.த.க. பாடசாலை அணியை எதிர்த்து இளவாலை சென்.ஹென் றிஸ் கல்லூரி அணி மோதியது.

விறுவிப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதிக் கொண்டன.

அதில் கலட்டி றோ.க.த.க. அணி 38:34 என்ற புள்ளிகள் அடிப் படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (ற-23)

(நேற்று இங்கு வெளியான செய்தியில் 19 வயதுப் பிரிவு கபடிப் போட்டியில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவாகியது என்று தவறுதலாகச் செய்தி வெளியாகியிருந்தது. தவறுக்கு வருந்துகின்றோம்.)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி செல்லையா



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அன்னலட்சுமி நேற்று(07.05.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் கதிர்த்தம்பி- செல்லமுத்து தம்பதியரின் மகளும், செல்லையாவின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, ஜெயராணி, சந்திரகுமார்(சாருஜன் கொமினிகேசன், கொக்குவில்), சுகுமார், மதன்ராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2013) புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில்அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

111/10, ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## முல்லை. கரப்பந்து முடிவுகள்

புதுக்குடியிருப்பு, மே 8

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைக ளுக்கு இடையிலான மாவட்ட மட்டக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 15 வயதுப் பெண்களுக்கான பிரிவில் குமுழமுனை மகா வித்தியாலயம், 17 வயதுப் பிரிவில் முள்ளியவளை கலைமகள் மகா வித்தியாலயமும், சம்பியனாகின.

இந்தப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை சிலாவத்தை தமிழ் வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றன.

15 வயதுப் பிரிவில் குமுழமுனை மகா வித்தியாலயமும், கலைமகள் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இதில் 2: 0 என்ற நேர் செற் கணக்கில் குமுழமுனை மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. அதில் மூன்றாமிடத்தினை சுதந்திரபுரம் அ.த.க. பாடசாலை பெற்றுக் கொண்டது.

அடுத்து இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் முள்ளியவளை கலைமகள் மகா வித்தியாலயமும், வெலிஓயா எஹது ஹத்வெவ அ.த.க. பாடசாலையும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் 25:22, 25:20 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 நேர் சுற்றுக் கணக்கில் முள்ளியவளை கலைமகள் மகா வித்தியாலயம் சம்பியனாகியது. அதில் மூன்றாமிடத்தினை கிரிவென் வெவ அ.த.க பாடசாலை பெற்றது. (ற-400-433)


**வீடு வாடகைக்கு உண்டு**

நாவலர் வீதி, அன்னசத்திரலேன், யாழ்ப்பாணத்தில் குளிரூட்டி வசதி, பாதுகாப்புக் கமரா உள்ளடங்களாக சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடன் வாடகைக்கு உண்டு. T.P.:- 077 0476299, 077 2287211


## மரண அறிவித்தல்

### திருமதி ரத்தினேஸ்வரி முத்துலிங்கம்



கொய்யாத்தோட்டம் யாழப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வள்ளிபுனம் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரத்தினேஸ்வரி முத்துலிங்கம் நேற்று முன்தினம் (06.05.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் சிவஞானம் தம்பதியரின் அன்பு மகளும், முத்துலிங்கத்தின் அன்பு மனைவியும், சுதாகர், சுஜாதா, சுகிர்தா ஆகியோரின் பாசமிகு தாயும், ராஜீ, காளிமுத்து, கேந்திரராசா ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் சிவராஜா(ஜேர் மனி), காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.05.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக பி.ப.2மணியளவில் வள்ளிபுனம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வள்ளிபுனம் ,
புதுக்குடியிருப்பு

தகவல்:
குடும்பத்தினர்.


**ஜூன் 1முதல் ஆரம்பமாகின்றது**

**அதிபர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள்**

கடந்த பரீட்சையில் எம்மிடம் பயிற்சி பெற்றவர்களில் வடமாகாணத்திலேயே முதலாமிடம் பெற்றவர் உட்பட 95வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் சித்தியடைந்துள்ளனர். அவர்களுக்குப் பயிற்றுவித்த அதே ஆசிரியர் குழாம் மேம்பட்ட உத்திகளுடன் உங்களைப் பயிற்றுவிக்க உள்ளனர்.

**உங்களுக்கான ஆசனங்களை உறுதி செய்ய உடன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்**

தொடர்புக்கும் விபரங்களுக்கும்
School of Professional And Degree Studies (Pvt) Ltd
65, அம்மன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். Tel:021 2219793, 0777184410 www.spads.edu.lk, spads.edu@gmail.com

**மே 11முதல் ஆரம்பமாகின்றது**

**இலங்கை சட்டக்கல்லூரி நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள்**

**மே 6முதல் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பரீட்சை செப்ரெம்பர் மாதம் நடைபெறும்.**

60வீதத்திற்கும் அதிகமான வெற்றியாளர்களை உருவாக்கிய உயர்ந்த தகுதியும் நிறைந்த அனுபவமும் கொண்ட ஆசிரியர்கள் மேலும் அதிக வெற்றியாளர்களை உருவாக்கும் நோக்கில் மேம்படுத்தப்பட்ட உத்திகள். ஏற்பாடுகளுடன் உங்களைப் பயிற்றுவிக்க உள்ளனர்.

**நீங்களும் ஓர் சட்டத்தரணியாக எம்முடன் இணையுங்கள்**

தொடர்புக்கும் விபரங்களுக்கும்
School of Professional And Degree Studies (Pvt) Ltd
65, அம்மன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். Tel:021 2219793, 0777184410 www.spads.edu.lk, spads.edu@gmail.com

**உதயன்** தமிழ் தேசிய நாளிதழ்

## உடன் வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்தில்

01. நிர்வாக உத்தியோகத்தர்

02. நூலக உதவி ஆய்வாளர்

பதவிகளுக்கு உடனடியாக ஆள்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

நிர்வாக அலுவலர் ஆங்கிலத்தில் எழுத, பேச தெரிந்தவராக இருப்பது அவசியம்.

தகுதியானவர்கள் இன்று காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தரவும்.

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## தேவை

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட

"கேற்வே" Gateway

நிறுவனத்தின் யாழ்ப்பாண அலுவலகத்துக்கு

01. அலுவலக உதவியாளரும்

02. தோட்டப் பராமரிப்பாளரும் தேவை.

விருப்பமுடையவர்கள் இன்று காலை 11.00 மணிக்கு நேரில் வரவும்.

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(உதயன் பணிமனைக்கு அருகில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பணிப்பெண் தேவை**

கணவன், மனைவி இருவர் கொண்ட குடும்பம் ஒன்றிற்குப் பணிப்பெண் தேவை.
சாவகச்சேரி.
தொ.பே. 077 985 9218


# வரமாட்டார் மகாராணி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியேற்ற நாடுகள்

ஒருகாலத்தில் பிரிட்டனின் குடியேற்ற நாடுகளாக (மொசாம்பிக், ருவாண்டா தவிர்த்து) இருந்தவற்றை ஒருங்கிணைத்தே பொதுநலவாய நாடுகள் அமைப்பு உருவாக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை இந்த நாடுகளின் தலைவர்கள் ஒன்றுகூடி உலகப் பொது விவகாரங்கள் பற்றி விவாதிப்பர்.

1973ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாநாட்டிலும் மகாராணி கலந்துகொண்டு வந்தார். முதல் தடவையாக அவர் இம்முறை மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

கொழும்பு மாநாட்டுக்காக 87 வயதான மகாராணி, ''மேற்கொள்ள வேண்டிய மிக நீண்ட பயணம் குறித்து மீளாய்வு செய்த பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டது'' என்று பக்கிங்காம் அரண்மனைப் பேச்சாளர் தெரிவித்தார். இலங்கை அரசு மீது போர்க் குற்றச்சாட்டுக்களும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டு வந்த நிலையில், பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் மகாராணி கலந்துகொள்ளக்கூடாது என்று சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கடும் எதிர்ப்புக் காட்டி வந்த நிலையில் மகாராணியின் முடிவு வந்துள்ளது.

அரசியல் முடிவல்ல

ஆனால், அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப மகாராணியின் முடிவு எடுக்கப்படவில்லை என்றும், மகாராணியிடம் இருந்து அதிகாரங்களை இளவரசர் சார்ள்ஸ் படிப்படியாகப் பெற்றுக்கொள்வதற்கான முன்னோடியே இது என்றும் அரண்மனை கூறுகின்றது. (உ)

# அரசின் அத்துமீறல்கள் குறித்து மௌனம் காக்கிறது இந்தியா

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அசோக் கே.காந்தாவுக்கும், வடபகுதி சிவில் சமூகத்தினருக்கும் இடையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போது கலந்து கொண்ட சிவில் சமூகத்தினர், போரின் பின்னர் வடபகுதியில் தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்டு வரும் அடக்குமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

இது விடயத்தில் இந்தியா தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருகின்றது எனவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

வடபகுதி சிவில் சமூகத்தினர் இந்தளவு பாரதூரமான - ஆழமான கருத்துக்களைக் கூறிய போதும் இலங்கைக்கான இந்தியாவின் முன்னாள் தூதுவர் அசோக் .கே.காந்தா வாய் திறந்து எதுவும் கூறவில்லை. அவர் இறுதி வரையிலும் மௌனமாகவே இருந்தார். (ஒ-5)

# மின்கட்டணம் மீண்டும் மீளாய்வுக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் அரசுக்கும், அரசுக்குள்ளும் கடும் எதிர்ப்பலைகள் எழுந்தன. இதனையடுத்து கடந்த மே தின உரையின் போது ஜனாதிபதி மஹிந்த 60 அலகுகளுக்கு உட்பட்ட மின்கட்டணத்தில் மாற்றங்கள் எதுவும் இல்லை என்று அறிவித்திருந்தார். இந்நிலையில் இந்த மின்கட்டணம் மீண்டும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (த)

# மரண அறிவித்தல்



## தாவீதுப்பிள்ளை அல்போன்ஸ்

(பரந்தன் இரசாயன பொருள்கள் கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்)

கட்டைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், 3/3, 2ஆம் குறுக்குத் தெரு வேளாங்கன்னி மாதா வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தாவீதுப்பிள்ளை அல்போன்ஸ் (பரந்தன் இரசாயன பொருள்கள் கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்) நேற்று (07.05.2013) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாவீதுப்பிள்ளை-பிலிப்பாச்சி தம்பதியரின் அன்பு மகனும், மரியநாயகி அல்போன்ஸ் (ஓய்வு பெற்ற அதிபர் - வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா) அவர்களின் அன்பு துணைவரும், காலஞ்சென்றவர்களான புஸ்பநாயகம் (ஓய்வு பெற்ற கல்வித் திணைக்கள ஊழியர்), அருளானந்தம் (ஓய்வு பெற்ற அதிபர் - கட்டைக் காடு) மற்றும் அருட்சகோதரிறோஸ்மேரி (திருக்குடும்பகன்னியர் மடம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரவிச்சந்திரன் (கொலண்ட்), மரியசாந்தினி, குலேந்திரன் (பெல்ஜியம்), மரியஜெயந்திரன் (கொலண்ட்), மரியஜெயந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜக்குலின் றொசிற்றா (கொலண்ட்), சூசைதாஸ் (மண்டைதீவு), வசந்தி (பெல்ஜியம்), சசி (கொலண்ட்) மற்றும் காலஞ்சென்றவர்களான ஜெனி ஆகியோரின் அன்பு மாமனும், றொபியா, ராதா (கொலண்ட்), ஸ்பிறிங்கிள், மது, ஸ்ரெபானி, ரைசன், எம்பியூறி (பெல்ஜியம்), மேனின், ரெறன்சியா, சாரு (கொலண்ட்), மிரியம், சௌமி (கொலண்ட்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தற்காலிக முகவரியான குருநகரில் வைக்கப்பட்டு இன்று (08.05.2013) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் கட்டைக்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 3.30 மணியளவில் புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கப்பலேந்தி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**குடும்பத்தினர்.**

முள்ளியான்,
கட்டைக்காடு.


**Spoken English** ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
Veta Fluency Diploma



யாழில் பல்கலைக்கழக, தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் பலர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட முழுமையான ஆங்கிலப் பாடநெறி

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
veta Experts in English Training

**விசேட கட்டணக்கழிவுடன் புதிய பிரிவுகள் ஆரம்பம்.**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Sat, Sun 09.00 a.m. Mon,Wed 09.15 a.m. | Sat, Sun, 3.30 P.m. Tue, Thu, 9.30 a.m. | Mon, Wed, Fri 9.30 a.m. | Sat, Sun 9.30 a.m. |

**DMI COMPUTER EDUCATION**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, Tel. : 021-226 2470 | No.174, Tel. : 021-227 0775 | JET (NSB) Tel. : 021-224 1970 |

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனசஞ்சலமா?
எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 072 6816681, 0726816691

**German Language Academy**

★ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் இலகுவான வழியில் பல வருடங்களாக பல மாணவர்களைச் சித்தியடையச் செய்த ஆசிரியர் S.கோணேஸ்வரன் அவர்களால் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு மிக சிறந்த முறையில் ஜேர்மன் மொழியைக் கற்றுக் கொள்ளலாம்.
★இங்கு கற்கும் மாணவர்களுக்கு எமது ஆசிரியர் அவர்களால் தயாரித்து வெளியிடப்பட்ட புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

German Language Academy
#23, Palaly Road, Jaffna.
0779707322

Sun British College
Vairavapuleyang kulam, Station Rd, Vavuniya. [Appolo Hospital Upstair]

**வீட்டுடன் காணிவிற்பனைக்கு**

557/3, K.K.S. வீதி, மதவடி லேனில் வீட்டுடன் கூடிய ஒரு பரப்புக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 706 9605,
077 372 0645,
021 222 6782.
முத்துக்குமார்.

**THE SCIENCE CORNER**
**CLOCK TOWER LANE - JAFFNA**
**CHEMISTRY**
09.05.2013 வியாழன் முதல் புதிய பிரிவுகள்

| | |
|---|---|
| 15 A/L | மீளாய்வுகள் TUE - THU - 4-5 p.m. |
| 14 A/L | INORGANIC TUE - THU - 5-6.15 p.m. |

DAY அயன் சமநிலை
SAT. SUN 7.00 -9-15 a.m.
WED 3- 5 p.m.
By. T. சிவகுமார் BSc.Dip.Ed.

**ஐஸ்வர்யம் தரும் அக்ஷய திருதியைத் திருநாளாம்**
12.05.2013 ஞாயிற்றுக்கிழமையும் 13.05.2013 திங்கட்கிழமையும்
காலை 7.30 மணி முதல் இரவு 8.00 மணி வரையும் உங்கள் விருப்பப்படி தங்கத்தை வாங்கி சுபீட்சமடைவீர்களாக
நவீன அழகிய 22 கரட் தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

**வினோ நகைப் பூங்கா**



அள்ள அள்ளக் குறையாது எல்லார்க்கும் அள்ளித் தரும் அற்புதத் திருநாளாம் அக்ஷய திருதியை அன்று செய்யப்படும் எந்த ஒரு நல்ல காரியமும் அதிக பலன்களைத் தரும் என்பர். இந் நன்னாளிலே வாங்கப்படும் எந்தப் பொருளும் இல்லத்தில் எப்போதும் குறைவின்றி நிறைந்திருக்கும் என்பது நம்பிக்கை. அதனால் தான் இந் நன்னாளில் தங்கம் வாங்க விரும்புவார்கள்.

குறிப்பு: அதிநவீன டிஜிற்றல் கருவி மூலம் நகைகள் தரம் பரிசோதித்து தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5394 / 021 222 9494 பக்ஸ்: 021 222 2824.

**புதிய இடத்தில் ஐடியல் அக்கடமி**
K.K.S.வீதி, யாழ்ப்பாணம்

O/L Day Class பிரிவு: 02

பாரதி பதிப்பகம் முன்பாக யாழ். இந்து அருகில்

ஆரம்பம்: 08.05.2013 புதன்கிழமை:8.00 A.m.

கணித ஆசானும் நிர்வாகியும்: V.N. பத்மநாதன்

**சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம் - தேர்த்திரு உலாக் காட்சி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உழைப்பில்
உடல் நலமும்
உடல் நலத்தால்
உள்ள நிறைவு
உண்டாகும்
-பியாட்டி

# புதன் பொய்கை

A

உதயன் | மே 08 2013 புதன்கிழமை | பக்கங்கள்: நான்கு



# உண்மை எதுவரை?

■ ராஜராஜன்

உண்மையைப் பேச வேண்டும். இதனைக் கடைசி வரை கடைப்பிடிக்க வேண்டும். மறந்தும் கூடப் பொய் பேசக் கூடாது என்றெல்லாம் அறிவுரைகள் கூறப்படுகின்றன.

இதனை அரிச்சந்திரன் தவறாது கடைப்பிடித்தான். இதனால் தனது நாட்டை இழந்தான் - மனைவியைப் பிரிந்து வாழ்ந்தான். மகனை இழந்தான். மயானத்தைக் காத்தான். மனைவியைக் கள்ளி எனக் குற்றம் சுமத்தினான். அவளைக் கொல்வதற்குத் துணிந்தான். உண்மையை மட்டுமே கடைப்பிடித்ததால் அரிச்சந்திரனுக்குக் கிடைத்த பரிசுகள் இவை;

ஒரு முறை தந்தையொருவர் தனது மகனுக்கு உண்மை பேசுவதன் அவசியத்தை எடுத்துக் கூற விரும்பினார். இதற்காக அரிச்சந்திரனின் கதையைக் கூறும் நாடக நிகழ்வொன்றுக்கு அவனை அழைத்துச் சென்றார். இரவு முழுவதும் நாடகம் இடம்பெற்றது - விடிந்ததும் மகனை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றார் தந்தை தமது மகன் அரிச்சந்திரனின் நாடகத்தைப் பார்த்து உண்மையின் உயர்வைப் புரிந்து கொண்டிருப்பான் என்பது அவரது கணிப்பாக இருந்தது.

சிறிது நேரம் கழித்து மகனே ! நேற்றிரவு நீ பார்த்த நாடகத்தின் மூலமாக அதனைப் புரிந்து கொண்டாய் எனத் தமது மகனிடம் கேட்டார். உடனே அந்தச் சிறுவன் தந்தையே, அரிச்சந்திரன் போன்று உண்மையைக் கடைப்பிடிக்கக் கூடிய என்பதைப் புரிந்து கொண்டேன். இதனால் எமக்குத் துன்பங்கள் தான் ஏற்படுமென்பதும் எனக்குத் தெரிந்து விட்டது எனப் பதிலளித்தான்.

இன்றைய கால கட்டத்துக்கு இந்தச் சிறுவனின் பதில் பொருத்தமான தீர்கவும் அமையலாம். ஏனென்றால் உண்மை புறமொதுக்கப்பட்டு கயமையும் வஞ்சகமும், பொய்மையும் நிறைந்த ஓர் உலகில் நாம் வாழ்கின்றோம்.

இந்திய தேசத்துக்கு வெள்ளையிடமிருந்து விடுதலை வாங்கித் தந்த காந்தியடிகள் மகாத்மா என்று அழைக்கப்படுகின்றமைக்கு அவர் எப்போதுமே உண்மை பேசியமையே காரணமாகும். - காந்தியடிகள் தமது இளமைக் காலத்தில் கெட்ட சக வாசகங்களைக் கொண்டிருந்தனர். தமது தந்தையாரின் உயிர் பிரியும் தறுவாயில் கூட அவர் அருகில் இருக்கவில்லை. தந்தையின் உடல் நிலை தொடர்பாக அறிந்திருந்த போதிலும் இந்த வேளையில்- அவர் தமது மனைவியுடன் இருந்துள்ளார். - பிற்காலத்தில் காந்தியடிகள் இவற்றையெல்லாம் ஒளிவு மறைவின்றித் தமது சுய சரிதையில் வெளியிட்டிருக்கின்றார். இதனால் தான் அவர் மகாத்மாவால் போற்றப்பட்டார்.

ஆனால் காந்தியடிகள் வேறொருவர் இப்படி நடந்து கொண்டால் மன்னிப்புக் கிடைக்குமா என்பது சந்தேகமே?

இலங்கையின் நீதி மன்றங்களிலே லட்சக்கணக்கான வழக்குகள் தீர்வு காணப்படாமல் பல ஆண்டுகளாக இழுத்தடிக்கப்படுவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படலாம். ஆனால் வழக்குகளுடன் சம்பந்தபட்டவர்களின் உண்மை வழியில் நின்றால் நீதிமன்றங்களை நாட வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது.

இலங்கையிலே இடம்பெற்ற இறுதிப் போரை புலிகளிடமிருந்து தமிழ் மக்களைக் காப்பதற்கான மனிதாபிமானப்போரென இலங்கை அரசு அறிவித்தது.

புலிகளுக்கு ஏற்கனவே பயங்கரவாதிகளென முத்திரை குத்தப்பட்டதால் இலங்கை அரசின் இந்த அறிவிப்பு ஏனைய நாடுகளால் ஏற்று கொள்ளப்பட்டது. புலிகளை அழிக்கும் நடவடிக்கைகளுக்குத் தேவையான சகல உதவிகளும் வழங்கப்பட்டன. இறுதியில் தோற்கடிக்கப்பட முடியாதவர்கள் எனக் கூறப்பட்ட புலிகள் அழிக்கப்பட்டனர். ஆனால் மக்களைக் காப்பதற்கான மனிதாபிமானப் போர் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்களை ஈவிரக்கமின்றிக் காவு கொண்டது. எண்ணிக்கை தெரியாதோரின் அங்கங்கள் பறிக்கப்பட்டன. கணக்கிட முடியாத அளவு சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. தமிழர்களின் தாயக மண் சுடுகாடாக மாறியது. தமிழ்ப் பெண்கள் மீதான கொடுமைகள் சொல்லவே நாக்கு கூசும் அளவுக்கு இடம்பெற்றன. பலர் துடிக்கத் துடிக்க வெட்டியும், குத்தியும், சுட்டும் கொலை செய்யப்பட்டனர். இளம் பிஞ்சான பாலச்சந்திரனக் கூடக் கொடியவர்கள் விட்டு வைக்கவில்லை.

ஆனால் இந்தப் போரில் கொல்லப்பட்டவர்கள் புலிகள் மட்டுமே. பொதுமக்களுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லையென அதிகாரத்தில் உள்ளவர்கள் திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர். ஒரு பொய்யைப் பல முறை கூறினால் அது உண்மை யாகிவிடும் என்ற சூத்திரத்தை இங்குள்ளவர்கள் நன்கு அறிந்தவர்கள் போல செயற்பட்டு வருவது நன்கு தெரிகின்றது.

எங்கே தனக்கும் பாதிப்பு ஏற்பட்டு விடுமோ என்ற அச்ச உணர்வில் காந்திதேசமான இந்தியா மௌனம் சாதித்து வருவதுடன் இலங்கையுடன் நெருக்கமான மறைமுக தொடர்புகளையும் பேணி வருகின்றது.

தற்போது எல்லாமே நடந்து முடிந்த பின்னர் இலங்கை அரசின் உண்மையான முகத்தை உலக நாடுகளால் புரிந்துகொள்ள முடிந்துள்ளது. தனது நாட்டு மக்களையே ஈவிரக்கமற்ற வகையில் அழித்தொழித்தவர்களின் கொடூர செயற்பாடுகள் வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளன. ஆனாலும் தொடர்ந்து தனது செயல்களை நியாயப் படுத்துவதிலேயே ஆட்சியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு ஆதரவாக மனச்சாட்சியே இல்லாத சில நாடுகள் முண்டு கொடுத்து வருகின்றன.

அகிம்சையையும், தர்மத்தையும் போதித்த புத்தபிரானின் வழித் தோன்றல்கள் எனத் தம்மைக் கூறிக் கொள்பவர்களின் வாயிலிருந்து உண்மைகள் வெளிவருவதாகத் தெரியவில்லை. இதற்கு மாறாக சொல்வதொன்று செய்வது வேறான்று என்ற நிலையே அவர்களைப் பொறுத்தவரை காணப்படுகின்றது.

உலக நாட்டுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழந்த ஜேர்மனியின் சர்வாதிகாரி அடொல்ப் ஹிட்லர் கூட தனது பொய்ப் பிரசாரங்கள் மூலமாகவே ஆரம்ப கால வெற்றிகளை ஈட்ட முடிந்தது. இதற்காக கோயபல்ஸ் என்பவனை ஹிட்லர் பயன்படுத்தி வந்தான். கோயபல்ஸின் பொய்ப் பிரசாரங்கள் மக்களை மிகவும் கவர்ந்தன. மகுடி முன்னால் கட்டுண்டு கிடக்கும் நாகம் போல அவர்கள் மாறினர். ஹிட்லர் சொல்வதையே சரியென ஏற்றுக் கொண்டனர். இத்தகையதொரு நிலைதான் இங்கும் காணப்படுகின்றது. உண்மைகளை உணர்ந்து தெளிவு ஏற்படும் வரை இதுவே நீடிக்கப்போகின்றது. ஆனால் இறுதியில் ஹிட்லருக்கு என்ன நடந்தது என்பதை முழு உலகமும் அறியும்.

> “உண்மை என்பது எப்போதுமே எம்மிடம் இருக்க வேண்டிய அரிய குணம் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் சிறிதளவு பொய்யைக் கூறுவதிலும் தவறு இல்லை என்றுதான் கூற வேண்டும். அதற்காகச் சிலர் போன்று தேவையற்ற வகையில் உண்மைக்குச் சமாதி அமைப்பதை ஏற்றுக் கொள்ளவே முடியாது.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தனது மனச் சாட்சியையே ஒழுக்கமாகக் கொண்டு வாழப் பழகுதல் வேண்டும். ஏனென்றால் நாம் உண்மை கூறுகிறோமா ? அல்லது பொய்ப் பேசுகின்றோமா? என்பதை எமது மனச் சாட்சியே நன்கு அறியும். ஆனால் இதனையும் சிலர் விட்டு வைப்பதாகத் தெரியவில்லை. சிலரின் நடவடிக்கைகளால் பொய்ப் பேசுவதற்கு நாம் தூண்டப்படுகின்றோம். உண்மையைக் கூறிவிட்டால் ஆபத்து ஏற்பட்டு விடும் என்ற அச்ச உணர்வே இதற்கான பிரதான காரணமாகும்.

நள்ளிரவு வேளையில் சிலர் பயங்கர ஆயுதங்களுடன் எமது வீட்டினுள் நுழைகின்றனர் என்று வைத்துக் கொள்வோம். வந்தவர்களின் ஒருவன் கழுத்தில் ஆயுதத்தை வைத்து பணம், நகைகள் இருக்கும் இடத்தைக் கூறுமாறு மிரட்டுகின்றான். அப்போது நகைகள் ஒன்றும் எம்மிடம் இல்லை. பணமும் கிடையாது என்று ஏதோ பொய்யைக் கூறித் தப்பிக்கவே முயலுவோம். இனி மேல் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்ற கட்டம் ஏற்படும் போது உண்மையைக் கூறுவதில் தவறில்லை.

இதனை விடுத்து அரிச்சந்திரனின் நினைவு வந்து, நகைகள் எல்லாம் சமையலறையிலுள்ள அரிசிப் பானைக்குள் இருக்கின்றன. பணம் முழுவதும் பழைய தலையணை உறைக்குள் வைக்கப்பட்டு பரண் மீது வீசப்பட்ட நிலையில் உள்ளது என உண்மையே ஆரம்பத்திலேயே கூறத் தொடங்கினால் என்ன நடக்கும் என்பதைக் கூறவே தேவையில்லை.

எனவே உண்மை என்பது எப்போதுமே எம்மிடம் இருக்க வேண்டிய அரிய குணம் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் சிறிதளவு பொய்யைக் கூறுவதிலும் தவறு இல்லை என்றுதான் கூற வேண்டும். அதற்காகச் சிலர் போன்று தேவையற்ற வகையில் உண்மைக்குச் சமாதி அமைப்பதை ஏற்றுக் கொள்ளவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானபாஸ்கரோதய சங்கம் 93 ஆவது அகவையில் காலடி வைக்கிறது

இலங்கை பிரித்தானிய அரசின் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இருந்த வேளையில் அன்று வாழ்ந்த தமிழ்ப் பற்றாளர்களால் 1919-10-02 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கம். கல்வியங்காட்டு மக்களின் கல்வியின் வளர்ச்சிப் பாதையில் பங்கெடுத்து எமது சமூகத்துக்கு ஓர் உந்துசக்தியாக அமைந்தது. புலம்பெயர் நாடுகளிலும் இதன் சேவை கிளை பரப்பி அற்புத கலங்கரை விளக்காக வழிகாட்டி நிற்கின்றது.

இந்த சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழா 1920 ஆம் ஆண்டு முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் ஆசியுரையுடன் நடை பெற்றது. இந்த நிகழ்வு எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய ஆசியாக அமைந்ததனால் இன்று எமது சங்கம் விழுதுகள் பல ஊன்றி விருட்சமாக விளங்குகின்றது.

ஒரு இனத்தின் வெற்றிகரமான முன்னேற்றம் என்பது அந்த இனம் கொண்டிருக்கும் சமூக, சமய, பொருளாதார, அரசியல் காரணிகளின் அளவு கோல்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அந்த வகையில் நோக்கும் போது எமது சங்கம் இன்று எமது மக்களுக்கு கல்விரீதியாக, பொருளாதார ரீதியாக ஆற்றிவரும் சேவை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை.

எமது சங்கம் இளம் துடிப்புள்ள இளைய சமுதாயத்துக்கு பல்வேறு பேச்சுப் போட்டிகளையும், இல்ல மெய்வல்லுநர் போட்டிகளையும் நாயன்மார் குரு பூசைகள், பௌர்ணமி நிலா முற்றம் போன்ற நிகழ்வுகளையும் நடத்தி அதன் மூலம் பயன்பெறச் செய்துள்ளது.

இந்த சங்கமானது, சனசமூக நிலையம், மங்கையர் கழகம், இளைஞர் சங்கம் என்னும் துணைச்சங்கங்களை உள்ளடக்கியுள்ளது. இந்த துணைச் சங்கங்கள் ஒவ்வொன்றும் தத்தமது துறைகளில் ஆற்றிவரும் சேவையானது மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு பெரும் பங்கெடுத்து ஆற்றி வருகின்றது.

ஆரம்ப காலத்தில் இந்த சங்கம் சிறு கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய நாள்களில் புராணபடலம் ஓதுதல், இறைநாம சங்கீர்த்தன பஜனைகள் நடத்துதல், மற்றும் வெள்ளிக்கிழமைகள் தோறும் நற்பிரசங்கம் ஆற்றுதல் என ஆரம்பகாலச் சேவைகள் அமைந்தன.

இன்று 93 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் இந்த சங்கம் நெருக்கடிகள், நெருடல்கள் மத்தியிலும் சாதித்து நிற்கும் சாதனைகள் பல.

இந்த சங்கத்தின் ஸ்தாபகர்களில் அமரத்துவம் அடைந்த வே.சிதம்பரப்பிள்ளை, ச.கந்தையா, சி.செல்லையா, க.சின்னையா, வ.மருதவாணர், க.வீ.சின்னத்துரை, க.தம்பிப்பிள்ளை, நா.கந்தையா, கா.இராசையா, வ.செல்லத்துரை ஆகியோரோடு இணைந்து செயலாற்றிய சங்க உறுப்பினர்கள் ஆகியோரது தன்னலம் கருதாத சேவையே இந்தச் சங்கம் ஆல்போல் தழைக்கவும் அறுகுபோல் பெருகவும் ஏதுவாக அமைந்தன.

ஆரம்ப காலத்தில் விவசாயிகள் ஓய்வு நேரங்களில் தமிழர்களின் மரபுவழி செஸ் விளையாட்டான பசுவும் புலியும் விளையாட்டுகளில் ஈடுபடுவர். அதுமட்டுமல்ல விவசாயத்தின் துல்லியமான நுணுக்கமான விடயங்களை கூடி ஆராய்ந்ததுடன் துறைசார் நிபுணர்களின் கருத்தரங்குகளையும் ஒழுங்குபடுத்தினார்கள். வள்ளுவப் பெருந்தகைக்கு வருடந்தோறும் விழா எடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கிராமம் சங்கிலிய மன்னனின் இராசதானிக்கு அருகில் இருந்தமையாலும், சிறந்த விவசாய நிலமாக விளங்கியமையினாலும் சித்த வைத்திய மூலிகைகள் அதிகம் காணப்பட்டபடியால் அரச வைத்தியர்கள் பலர் பரம்பரை பரம்பரையாக சித்த வைத்தியத்துறையில் சிறந்து விளங்குகின்றனர்.

தேன் சிந்திடும் கவிபுனை அரசவைக் கவிஞர்களும் இங்கு வாழ்ந்துள்ளனர். அதற்கு ஆதாரமாக புலவனார் வீதி இன்றும் காணப்படுகின்றது. எமது சங்க வாசலில் 1400 ஆண்டுகள் பழைமைவாய்ந்த பாறையில் செதுக்கப்பட்ட மாடுரஞ்சிக் கல், சுமைதாங்கி மற்றும் வயலில் மேய்ந்து பிற்பகல் வரும் பசுக்கள் நீர் அருந்துவதற்கு தண்ணீர் தொட்டி என்பன காணப்பட்டன. போர் காலத்தில் சுமைதாங்கியும் தண்ணீர் தொட்டியும் காணாமற் போய்விட்டன. மாடுரஞ்சிக் கல்லு மட்டும் இன்றும் காணப்படுகின்றது. பண்ணும், பரதமும், சைவமும், தமிழும் என அத்தனையும் உத்வேகத்துடன் எமது மண்ணில் உலாவர எமது சங்கம் ஆற்றிவரும் சேவைகள் பல. பேராசிரியர் கைலாசபதி போன்ற அறிஞர்கள் தலைமையில் இடம்பெறும் பட்டிமன்றங்களை காண்பதற்கு அயலூர்களில் இருந்தெல்லாம் அறிஞர்களும் ஆர்வலர்களும் வந்து இன்புற்று செல்வார்கள்.

ஒன்று திரண்டால் உண்டு வாழ்வு என்னும் இலக்கணத்துக்கு ஓர் வழிகாட்டியாய் திகழ்ந்து எம்மை எல்லாம் தன் கருணைக்கடல் மூலம் அரவணைத்து புதல்வர்களை கவிஞர்களாக, வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, சமூக நன் மாணிக்கங்களாக, ஆற்றல் மிக்க அறிவியலாளர்களாக உருவாக்கிய பெருமை இந்த சங்கத்தையே சேரும்.

க.சுரேஸ்குமார்

# மனிதாபிமான சேவையில் செஞ்சிலுவை



இன்று
செஞ்சிலுவைத் தினம்
மே-08

ஹென்றி டுனான்ட் என்பவரால் உருவாக்கப்பட்டதே செஞ்சிலுவைச் சங்கம். 1828 மே 8 ஆம் திகதி சுவிஸ் நாட்டில் ஜெனிவாவில் பிறந்த இவர் வர்த்தக நோக்கமாக 1859 ஆம் ஆண்டு இத்தாலிக்குப் போகும் போது இத்தாலியில் வடக்கு எல்லையில் சொல்பரினா என்னும் இடத்தில் பிரான்ஸுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் சண்டை மூண்டது. சண்டையில் 40,000 க்கும் மேற்பட்ட படைவீரர்கள் காயப்பட்டும் இறந்தும் காணப்பட்டனர். இவர்களுக்குத் தேவையான மருந்து, முதலுதவி என்பன வழங்கப்படாத காரணத்தால் இந்நிலைமை ஏற்பட்டது. இதனை கண்ணுற்ற ஹென்றி டுனாண்ட் உடனடியாக அவர்களுக்கு உதவி செய்வதற்காக பல தொண்டர்களை இணைத்து முதலுதவியும் மருத்துவ உதவியும் வழங்கி பலரைக் காப்பாற்றியிருந்தார். இந்தக் காட்சி அவருக்கு பெரும் அதிர்ச்சியை அளித்தது.

எனவே, 1862 ஆம் ஆண்டு போர்க் காலங்களில் தான் கண்ட கண்ட காட்சியை வைத்து சொல்பரினா நினைவுகள் (Memory of Solferina) என்ற புத்தகத்தை வெளியிட்டார். இந்தப் புத்தகம் செஞ்சிலுவைச் சங்கம் ஆரம்பமாவதற்கு சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்றது. 1863 இல் செஞ்சிலுவைச் சங்கம் உருவாகியது. இதில் இரண்டு விடயங்கள் முக்கியம் பெற்றது.

1.காயப்பட்டவர்களைக் கவனிக்க தொண்டர்கள் இணைக்கப்படல் வேண்டும்.

2.இந்தத் தொண்டர்களையும் பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாக்க சர்வதேச சட்டங்களை ஏற்படுத்தி, சர்வதேசம் அவற்றை அங்கீகரிக்க வேண்டும்.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 16 நாடுகள் இணைந்து செஞ்சிலுவைச் சங்கத்தை உருவாக்கினர்.

இன்று 191 நாடுகள் செஞ்சிலுவைச் சங்கம் ஜெனிவாவை மையமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இந்தச் சங்கத்தின் கொடியின் செஞ்சிலுவையானது ஜெனிவா நாட்டின் தேசியக் கொடியின் சிவப்பு பின்னணியில் உள்ள வெள்ளைச் சிலுவையை வெள்ளைப் பின்னணியில் சிவப்பு சிலுவையாக மாற்றி அமைத்து உருவாக்கப்பட்டது. இது தான் உலகளவில் காணப்படும் நடுநிலைமையுடன் செயற்படும் செஞ்சிலுவையின் அடையாளமாகும்.

### சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழு ICRC

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆயுத மோதல்கள் உள்நாட்டு கலகங்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு பாதுகாப்பும் வழங்குவதற்காக உலக நாடுகளினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட நடுநிலைமையான சுயாதீன மனிதநேய அமைப்பாகும்.

இது ஆயுத மோதல்களில் பல்வேறுபட்ட அமைப்புக்களால் வழங்கப்படும் சர்வதேச நிவாரணங்களை பகுந்தளிக்கும். அதோடு துன்பப்படும் மக்களுக்கு சர்வதேச உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உறுதிப்படுத்துகின்றது. உயரமான இடத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அமைக்கப்பட்டு இருந்தாலும் குவாண்டனாமா முகாம் பற்றி கடுமையாக விமர்சனங்கள் உண்டு.

சிறுவர்களை போரில் பயன்படுத்துதல் மிக வன்மையாக கண்டிக்கும் இந்த அமைப்பு எல்லைப் போர், உள்நாட்டு போர்கள், இனக்கலவரங்கள் என்பவற்றையும் இந்த அமைப்பு வன்மையாக பக்கச் சார்பில்லாமல் கண்டிப்பதால் சர்வதேசத்துக்கு ஆறுதல் அளிக்கும் ஒரு நிறுவனமாக மதிக்கப்படுகின்றது. போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதுடன் போர்க் காலங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சர்வதேச நியமனங்களைப் பற்றி வலியுறுத்தும் அமைப்பாகும். இன்று போர்க் காலங்களின் தன்மை மாறி வருகின்றது. புதிய ஆயுதங்கள் பயன்படுத்தல், பாதிக்கப்படும் மக்களின் அளவு அதிகரித்து வருதல் என்பன காரணமாக, இந்த அமைப்பின் செயற்பாடு முன்பு ஒரு போதும் இல்லாதளவு சிக்கலாகியுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் சர்வதேச செஞ்சிலுவைக் குழு உள்நாட்டு போரில் மிகவும் கணிசமாக செயற்பட்டு இருப்பதாக உள்ளூர் செய்தியாளர்கள் கூறுகின்றார்கள். இருந்தாலும், கடைசியாக செஞ்சிலுவைச் சங்கம் வன்னியில் இருந்து வெளியேறியது ஓர் கசப்பான செய்தியாகும். இன்று 92 நாடுகளில் 1,3000 ஊழியர்களுடன் செயற்படும் ஓர் அமைப்பாகும்.

### தேசிய செஞ்சிலுவைச் சங்கங்கள், செம்பிறைச் சங்கங்கள் N.S

உலகளாவிய ரீதியில் இயங்கிவரும் இயக்கமான செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்கள், அனர்த்த நிவாரணம், சுகாதாரச் சேவை சமூகசேவைகள், பலதரப்பட்ட மனிதாபிமானச் சேவைகள், அரசுக்கு துணையாக அதனது சொந்த நாட்டிலே செய்கின்றது. அதனது கொள்கைளைப் பலப்படுத்தத் தேவையான வலைப் பின்னல் அமைப்புக் கொண்ட மனிதாபிமான இயக்கம் ஒன்றாகும்.

### சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறை சங்கங்களின் சமாசம் IFRC

1919 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய சங்கங்களினால் ஜெனிவாவில் 191 நாடுகள் கையொப்பமிட்டு உருவாக்கப்பட்டதாகும். இது இன, மத, வர்க்கம் ஆகிய வேறுபாடுகள் இன்றி மிகவும் பாதிக்கப்பட்ட மக்களது நிலைமைகளை மேம்படுத்துவதே இதன் நோக்கம். தனது நிவாரணப்பணிகள் ஊடாக தேசிய வளங்களைப் பலப்படுத்துகின்றது.

### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

1972 இல் இலங்கை செஞ்சிலுவை எனப் பெயரிட்டு செயற்படத் தொடங்கி செயற்பட்டு வருகின்றது. இவற்றின் சேவைகள் முதலுதவிப் பயிற்சி, முதலுதவி சேவை, அடிப்படை சுகாதார சேவை, மனிதனால் இயற்கையால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களும் நிவாரணம் வழங்கல், இரத்ததான முகாம், நடமாடும் மருத்துவ சிகிச்சை முகாம் நடத்தல், சமூகங்களுக்கு எயிட்ஸ் பற்றி பாதுகாப்பு விழிப்புணர்வு ஊட்டல், அனர்த்தத்துக்கு எப்படி முகம்கொடுப்பது என்பதற்கு பயிற்சி அளித்தல், அடிப்படை ஏழு கொள்கைகளை பரப்புரைகளைச் செய்தல். அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல வகையிலும் உதவி செய்தல், சுனாமி வீட்டுத்திட்டம், போரினால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகள் புனரமைப்பு என்பன போன்ற பல்வேறு நிவாரணத்தினை செய்து வருகின்றது.

### யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கங்களின் மாவட்ட கிளையாக இது இயங்கி வருகின்றது. இது தேசிய அடிப்படையில் செயற்படும் எல்லா நிவாரணப் பணிகளிலும் செயலாற்றுகின்றது. குறிப்பாகக் கூறும் போது போர்க் காலங்களில் யாழ்.மாவட்டத்தில் இருந்த ஊரடங்கு கட்ட நேரத்தில் இரவு பகல் 24 மணித்தியாலம் அம்புலன்ஸ் சேவை யாழ்.மக்களால் மறக்கமுடியாது. அத்துடன் முகாம்களில் இருந்த மக்களுக்கு நிவாரணம், மருந்து வசதிகள் வழங்கப்பட்டன. முகாம்களுக்கு வெளியில் வைத்தியசாலைகள் இல்லாத இடங்களில் 2012 வரை நடமாடும் வைத்திய சேவைகள் செய்யப்பட்டன. இது ICRC உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு மேலாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத்திட்டம், வடமராட்சியில் 2,000 வீடுகளுக்கு மேல் அமைக்கப்பட்டது. வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலை புனரமைக்கப்பட்டது.

மேலும் இன்று இந்திய அரசு வடக்கு மாகாணத்துக்கு 1,7500 வீடுகள் எம்மால் அமைக்கப்பட்டு வருகின்றது. யாழ்.மாவட்டத்தில் 8,000 வீடுகள் அமைக்க நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. தெல்லிப்பழை, சாவகச்சேரி, நெடுந்தீவு ஆகிய உதவி அரசாங்க பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. முடிவாக இயற்கை மற்றும் மனித செயற்கை அழிவுகளால் பாதிப்புறுவோர்களின் நலன்களை மனிதாபிமான அடிப்படையில் சாதி, சமய வர்க்கம், பால், இன மொழிப் பாகுபாடின்றி சேவைசெய்வதே செஞ்சிலுவைச் சங்கங்களின் குறிக்கோளாகும். செஞ்சிலுவைச் சங்கங்களின் பலம் அதன் மிகப்பரந்த தொண்டர்களின் சக்தியாகும்.

கு.பாலகிருஷ்ணன், கௌரவ செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைகளும் சுதந்திரமும்

## கொசோவோ மற்றும் தென்சூடான் இரண்டினதும் பட்டறிவு

■ The Statesman/ANN

(தமிழாக்கம் - நக்கீரன்)




கொசோவோ மற்றும் தென் சூடான் இரண்டினது சுதந்திரம் குடியேற்ற நாடுகள் வரைந்த எல்லைக் கோடுகள் புனிதத்தன்மை வாய்ந்தவை அல்ல என்பதைக் காட்டுகின்றது. இது தமிழீழத்துக்கும் பொருந்தும். சிங்களத்துக்கும் தமிழீழத்துக்கும் இடையில் இருந்த எல்லைக் கோடுகளைப் பிரித்தானியா ஒருதலைப்பட்சமாக அழித்ததே இன்றைய இனச் சிக்கலுக்கும் அமைதியின்மைக்கும் காரணியாகும். கொசோவோ மற்றும் தென் சூடானில் நடைபெற்றது போல் தமிழ்மக்களுக்கும் சுயநிர்ணய அடிப்படையின் கீழ் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்த ஐ.நா. முன்வர வேண்டும்.)ஒரு காலத்தில் பன்னாட்டு எல்லைகளை மீளவரைதல் போருக்குக் காரணமாக இருந்தது எனக் கருதப்பட்டது. இன்று அமைதியை வென்றெடுப்பதற்கு ஆட்புல மாற்றங்கள் அமைதிக்கான முன்னெடுப்பாகவும் மோதல் தீர்வுக்கு வேண்டிய உத்திகளாகவும் பார்க்கப்படுகிறது. இந்த சுவாரசியமான திருப்பமானது கொசோவோ மற்றும் தென் சூடான் சுதந்திர நாடுகளாகத் தோற்றம் பெற்ற பின்னர் வேகம் பெற்றுவருகிறது. இந்த நாடுகளின் சுதந்திரத்துக்குக் காரணமாக இருந்த அரசியல் முன்னெடுப்புக்களை நினைவு கூர்தல் நலமாகும். கொசோவோ இருபது இலட்சம் மக்களின் தாயகமாகும். இவர்களில் 90 விழுக்காட்டினர் அல்பேனிய இனத்தவர் ஆவர். அல்பேனியர்கள் மத்திய தரைக்கடல் சார்ந்த மக்களாவர். இவர்கள் பெரும்பாலும் பண்டைய கிரேக்கம் மற்றும் உரோமர்களது புராணக் கதைகளோடு பின்னிப்பிணைந்த இலிரியன் பழங்குடி மக்கள் வழிவந்தவர்கள். சேர்பியர்களுக்கு, அல்பேனியர்கள் ஓட்டமான் துருக்கியர்களது எச்சங்களாகவும் சேர்பியாவின் தேசிய அவமானத்தின் முகவர்களாகவும் இருக்கிறார்கள். அல்பேனியர்களுக்கு, அல்பேனியா பரந்துபட்ட போல்க்கன் நிலப்பரப்பாகும். அது கொசோவோ மற்றும் சேர்பயாவின் சில பகுதிகள், மசிடோனியா, கிறீஸ் மற்றும் மொன்ரெநீக்றோ வரை நீளும் அரசியல் எல்லைகளாகும். ஆனால் ஐரோப்பிய வல்லரசுகள் போல்க்கன் போர்களுக்குப் பின்னர் 1913 ஆம் ஆண்டு அல்பேனியாவின் அரசியல் எல்லைகளைத் திணித்த போது அரைவாசி அல்பேனிய மக்கள் புறத்தில் விடப்பட்டார்கள். கொசோவோ சேர்பியாவிடம் இழக்கப்பட்டது.

1946 இல் யோசேப் புறோஸ் தித்தோ (Josip Br-oz Tito) மசிடோனியாவின் அல்பேனியர்கள், மொன்ரெநீக்றோ மற்றும் கொசோவோ நாடுகள் உட்பட ஆறு நாடுகளைக் கொண்ட யுகோசிலேவியா குடியரசில் அரைகுறையாகப் பொருத்தினார்.

கம்யூனிச ஆட்சியின் கீழ் அல்பேனியர்கள் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். அவர்களுக்குச் சமஉரிமைகள் வழங்கப்பட்டன. எல்லோரும் யுகோசிலேவிய குடிமக்கள். யுகோசிலேவிக்கிய அல்பேனியர்கள் மேற்கு ஐரோப்பியாவில் வேலை செய்தார்கள். அவர்கள் அனுப்ப பணம் யுகோசிலேவின் நிதிக் கொடுப்பனவுகளை ஈடுசெய்ய உதவின. 1980 இல் தித்தோ இறந்தபோது சேர்பியா அல்பேனியர்களுக்கு எதிராகத் திரும்பியது. ஸ்லோபோடன் மிலோசவிக் கீழுள்ள புதிய அரசு 1989 ஆம் ஆண்டு கொசோவோவின் தன்னாட்சி உரிமையை நீக்கியது.

கொசோவோ அல்பேனியர்கள் பெரும்பான்மையாக இருந்தும் அவர்கள் சமூகத்தின் ஓரத்தில் வைக்கப்பட்டார்கள். அவர்கள் அதிகார பதவிகளில் இருந்து நீக்கப்பட்டார்கள். நல்ல வேலைகள் மறுக்கப்பட்டன. அல்பேனியர்களுக்குக் கல்வி கிட்டத்தட்ட மூடப்பட்டது.

கொசோவோ அல்பேனியர்களுக்கும் சேர்பியர்களுக்கும் இடையில் இடம்பெற்ற தொடர்ச்சியான அதே சமயம் கடுமையான இனப்பதற்றம் கொசோவோவை இன அடிப்படையில் பிரித்தது. இது இனங்களுக்கு இடையிலான வன்முறைகளுக்கும் 1999 இல் இடம்பெற்ற கொசோவோ போருக்கும் வழிவகுத்தது. சேர்பியப் படைகள் ஊர்களை கொளுத்தித் தீயிட்டன. சேர்பியப் படைகளின் இனச் சுத்திகரிப்பின் விளைவாக எட்டு இலட்சத்துக்கும் மேலான கொசோவோ அல்பேனியர்கள் கொசோவோவை விட்டுத் துரத்தப்பட்டார்கள். ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானம் (UNSCR) எண் 1244 இன் கீழ் ஐ.நாவின் இடைக்கால நிர்வாகத்துக்குள் கொசோவோ கொண்டுவரப்பட்டது. பெப்ரவரி 2008 இல், கொசோவோ பேரவையின் உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் செயற்பட்டு - பேரவையைக் கட்டுப்படுத்தாது - கொசோவோவை குடியரசாக சுதந்திரப் பிரகடனம் செய்தார்கள். மொத்தம் 193 ஐ.நா. உறுப்பு நாடுகளில் 98 நாடுகள் கொசோவோவை அங்கீகரித்துள்ளன. யூலை 2010 இல் பன்னாட்டு நீதிமன்றம், குறிப்பிட்ட பேரவையின் தீர்மானம் கொசோவோவின் இறுதித் தன்மையை விளக்காத இடத்தில் கொசோவோ சுதந்திரப் பிரகடனம் பன்னாட்டு பொதுக் கோட்பாடுகளை மீறவில்லை என்றும் மேலும் அது பாதுகாப்பு சபையின் தீர்மானத்தை மீறவில்லை என்றும் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பே பன்னாட்டு நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட்ட ஒருதலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனம் பற்றிய முதல் வழக்காகும். பரிக்கப்படாத சூடான் ஆபிரிக்காவின் மிகப் பெரிய நாடாகும். அதே சமயம் அது ஆபிரிக்காவின் முறிவுபட்ட நாடாகும். செங்கடலின் கரையோரமாக மிகப் பெரிய குளவிக் கூடுபோல் வீங்கிக் காட்சியளிக்கும் சூடான் ஒருநாளும் வலிமையோடு இருந்ததில்லை. 1956 இல் பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெறும் முன்னரே அங்கு உள்நாட்டுப் போர் வெடித்தது. 1972 - 1983 இரண்டுக்கும் இடையிலான 11 ஆண்டு கால இடைவெளியில் சூடான் - தென் சூடான் இடையில் ஒரு வலுவற்ற அமைதி நீடித்தது. வன்முறையின் வேர்கள் ஒரு பொழுதும் மறையவில்லை. பிரித்தானியா ஆண்ட சூடான் ஒரு நாடல்ல. அது இரண்டு நாடுகள். தென் சூடான் வெப்பமண்டலத்தைச் சேர்ந்தது. பொருளாதார மேம்பாடற்ற நாடு. அது ஆப்பிரிக்க மரபுவழி வந்த டிங்காஸ், நூர்ஸ், அஸன்டேஸ் மற்றும் நூற்றுக் கணக்கான இனக் குழுக்களைக் கொண்டது. ஒப்பீட்டில் வட சூடான் வரட்சியானது. ஆனால் செல்வம் படைத்தது. அது மத்திய கிழக்கு நாட்டோடு தொடர்புடைய சகாரா உலகம். 19ஆம் நூற்றாண்டில் வட சூடானின் அடிமை வியாபாரிகள் தென் சூடான் பழங்குடி மக்களைச் சூறையாடினார்கள். பிரிக்கப்படாத சூடானை நீண்ட காலமாகப் பணம்படைத்த வட சூடானியர்கள் ஆண்டுவந்தார்கள். அவர்கள் அரேபிய பண்பாடு காரணமாகத் தங்களை ஆபிரிக்கர் என்பதற்குப் பதில் அரேபியர்கள் எனக் கருதினார்கள். 1980 களில் தென் சூடானில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்ட போது அதனைச் சுத்திகரிக்கக் குழாய்கள் மூலம் வடக்குக்குக் கொண்டு செல்ல அரசு திட்டமிட்டது. 1983 இல் இந்தக் காரணியோடு 1972 இல் எழுதப்பட்ட அமைதி உடன்பாட்டை அரசு மீறியதால் தென் சூடான் கிளர்ச்சிக்காரர்கள் வடக்கு மீது தாக்குதல் தொடுத்தார்கள். அது உள்நாட்டுப் போரை மீண்டும் வெடிக்கச் செய்தது. எண்ணெய் வளத்தால் கிடைத்த வருவாய் கார்த்தோம் (Khartoum) இருந்த வசதிபடைத்த சிலரது கைக்குச் சென்றது.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னலமற்றவன்



**ஒரு** முறை போதிசத்துவர் காசி மன்னனாகப் பிறந்தார். அவரது ஆட்சியின் போது ஓர் எல்லைப் புறத்தில் சிலர் கலகம் செய்தார்கள். அவர்களை அடக்க மன்னரான போதிசத்துவர் சிறு படையுடன் சென்றார். பலத்த போர் மூண்டது. அதில் மன்னர் காயமுற்றார். அவர் அமர்ந்திருந்த குதிரை மிரண்டு அவரோடு போர்க்களத்திலிருந்து ஓடிப் போயிற்று.

சற்று நேரத்திற்கெல்லாம் அக்குதிரை மன்னரை ஒரு சிறு கிராமத்திற்குக் கொண்டு போய்ச் சேர்ந்தது. வாள், கேடயம், கவசம் முதலியவற்றோடு குதிரை மீது அமர்ந்து வந்த மன்னரைப் பார்த்து அங்கு கூடி பேசிக் கொண்டிருந்த மக்கள் பயந்து எழுந்து ஓடினார்கள். ஆனால் அந்த கிராமத் தலைவன் மட்டும் ஓடாமல் நின்றான்.

அவன் மன்னரை அணுகி ''நீ கலகக்காரனா அல்லது அரசர் பக்கத்தைச் சார்ந்தவனா?'' என்று கேட்டான். மன்னரும் ''நான் அரசர் பக்கமே'' என்றார். அது கேட்டு கிராமத் தலைவன் திருப்தி அடைந்து ''அப்படியானால் என் வீட்டிற்குப் போகலாம் வா'' எனக் கூறி போதிசத்துவரைத் தன் விருந்தாளியாகத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

அவனும் அவன் மனைவியும் அவரை உபசரித்தார்கள். உண்ண உணவும் படுக்க வசதியும் செய்து கொடுத்து அவரது குதிறையையும் ஓரிடத்தில் கட்டி அதற்குப் புல்லும் கொள்ளும் கொடுத்தார்கள். மன்னர் நான்கு நாள்கள் அந்த தலைவனின் வீட்டிலேயே இருந்தார். கிராமத் தலைவன் அவரை அக்கறையுடன் கவனித்துக் கொண்டான்.

வேளா வேளைக்கு உணவு கொடுத்ததோடு அவர் காயமுற்றும் இருப்பதைக் கண்டு உள்ளூர் வைத்தியரை அழைத்து வந்தார். போதிசத்துவரும் வைத்தியர் கொடுத்த மருந்தைத் தன் காயங்களுக்குத் தடவிக் கொண்டார். இதற்குள் அவரது வீரர்கள் கலகக்காரர்களை அடக்கி விட்டார்கள்.

மன்னர் அத்தலைவனின் வீட்டில்இருந்து கிளம்பும் போது ''ஐயா! நான் காசி நகரில் வாழ்பவன். என் வீடு கோட்டைக்குள் உள்ளது. எனக்கு ஒரு மனைவியும் இரு புதல்வர்களும் உள்ளனர். அங்கே வந்து கோட்டை வாசலில் ''மாபெரும் குதிரை வீரர் எங்கே இருக்கிறார்'' என்று கேட்டால் உம்மை என் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்து விடுவார்கள்.

நீர் என் ஊருக்கு வந்தால் என் விருந்தாளியாக எவ்வளவு காலம் வேண்டுமானாலும் தங்கலாம்'' என்று கூறிச் சென்றார். மன்னர் தன் படைகள் இருக்கும் இடத்திற்குச் சென்று அவற்றோடு காசி நகருக்குத் திரும்பினார். அங்கு கோட்டைக் காவலாளியிடம் ''யாராவது வந்து ''மாபெரும் குதிரை வீரர் வீடு எங்கே உள்ளது?' எனக் கேட்டால் என்னிடம் அழைத்து வாருங்கள்'' என கட்டளையிட்டார்.

அந்தக் கிராமத் தலைவன் தன்னைக் காண வருவான் என்று மன்னர் எதிர்பார்த்தார். ஆனால் அவன் பல மாதங்களாகியும் வரவில்லை. அவனை வரவழைப்பதற்காக மன்னர் மாதா மாதம் புதுப்புது வரியாக அந்தக் கிராமத்தின் மீது மட்டும் விதிக்கலானார்.

மன்னர் பல வரிகளைப் பல மாதங்களாக ஒன்றன் பின் ஒன்றாக அறிவித்து வந்தார். முதலில் அதன் சுமையை அதிகமாக உணராத அக்கிராமத்தவர் நாளாக ஆக வரியைத் தாங்க முடியாமல் சிரமப்பட்டார்கள். தம் மீது வரிச்சுமை அதிகமாகி வருவது கண்டு கிராமத்தவர் அந்த கிராமத் தலைவனிடம் ''நீங்கள் போய் உங்கள் நண்பரான மாபெரும் குதிரை வீரர் உதவியால் மன்னரைக் கண்டு இந்த வரிகளைஎல்லாம் அகற்ற ஏற்பாடு செய்யுங்கள்.

என்ன காரணமோ தெரியவில்லை. நம் கிராமத்தின் மீது மட்டும்தான் இவ்வளவு வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. நீங்கள் உங்கள் நண்பரின் உதவியோடு மன்னரைக் கண்டு முறையிட்டாலே நம் துன்பங்கள் தீரும்'' என்று கூறினார்கள். அத்தலைவனும்'' நான் போகத்தயார்- என்றான்.

(தொடரும்)

# எனது செல்லப் பிராணி



எனது செல்லப் பிராணி நாய் ஆகும்,
அது என்னுடன் பந்து விளையாடும்,
நாய் என்னைப் பார்த்து வாலாட்டும்,
நாய் எமது வீட்டை காவல் காக்கும்,
நாய் 'வள் வள்' எனக் குரைக்கும்.

**த.அபிநயா, தரம் 2,**
**யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.**

# அழகு









நாரைக்கு பறப்பது அழகு!
பருந்துக்கு இறங்குவது அழகு!
மயிலுக்குஆடுவது அழகு!
குயிலுக்கு கூவுவது அழகு!

**ஜெ.தவேதன், தரம் 4சி,**
**யா/ சண்டிலிப்பாய்**
**இந்துக் கல்லூரி.**

# உங்களுக்குத் தெரியுமா?

1. இறக்கைகள் இல்லாத பூச்சி இனங்கள் யாவை?
   **எறும்பு, சிலந்தி, பேன்**
2. நான்கு சிறிய பாதங்கள் உடைய பிராணிகள் யாவை?
   **தவளை, பல்லி, உடும்பு, ஓணான்**
3. வலுவான ஓடுகளை உடைய பிராணிகள் யாவை?
   **ஆமை, நண்டு, கடற்சிப்பி, நத்தை**
4. செதில்களைக் கொண்ட தோலை உடைய பிராணிகள் யாவை?
   **பாம்பு, தவளை, முதலை**
5. ஒட்டுண்ணிகளாக வாழக்கூடிய பிராணிகள் யாவை?
   **உண்ணி, தெள்ளு, பேன், சீலைப்பேன், மூட்டைப்பூச்சி**
6. நகர் உயிர் எவ்வாறு இனத்தைப் பெருக்கும்?
   **முட்டையிட்டு இனம் பெருக்கும்**
7. மூன்று சோடி கால்கள் உடைய பூச்சிகள் யாவை?
   **ஈ, நுளம்பு, சிலந்தி**
8. பூச்சிகளின் இறக்கைகள் எத்தனை?
   **2 அல்லது 4**
9. இரை மீட்கும் பிராணிகள் யாவை?
   **ஆடு, மாடு**
10. அனைத்தும் உண்ணிகள் யாவை?
    **மனிதன், நாய், கோழி, பூனை, அணில், மைனா, காகம், எறும்பு**

செ.தனுசிகா, ஆண்டு,
கருணை இல்லம், பலாலி வீதி, உரும்பிராய்.

# எமது பிரதேசம்



வயலோடு சிறு வனப்பும்
வானுயர்ந்த பனை மகவின்
இதழைக் கிழித்து
இங்கிதம் தருகின்ற ஒளிக்கீற்றும்
பகலை -
கண்டு விட்ட விடலைக் குருவிகளின்
பாசத்தில் இசை ஊட்டும்
மடியோடு பால் மணம் கமழ்ந்து
தேற்றுகின்ற தாய்
கன்று துள்ளுவதை கண்ணுற்று
மகிழும் நேசத்தை தோற்றுவிக்கும்
இயற்கை என் பிரதேசம்

இ.கம்சியா, தரம்-9,
யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

இலங்கையின் வேறு பெயர்களும்
அவற்றை பெயரிட்டு அழைத்தவர்களும்

- ★தம்பபன்னி-ஆரியர்
- ★செரண்டிப்-அரேபியர்
- ★தப்பிரபேன்-கிரேக்கர்
- ★சீலதுவீபம்-இந்தியர்
- ★சீலன்-சீனர்
- ★செயிலான்-போர்த்துக்கேயர்
- ★சிலான்-ஒல்லாந்தர்
- ★சிலோன்-ஆங்கிலேயர்
- ★ஈழம்-இலங்கைத் தமிழர்
- ★சிறிலங்கா-சிங்களவர்

சு.ஆர்த்திகா, தரம்-9டி,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தேவையான வங்கிச் சேவைகள் அனைத்தையும் நாம் வழங்குவோம்

**Vardhana GARUSARU**

வயோதிப காலத்தில் உங்களுக்கு
வழக்கத்தைவிட 3% அதிக
வட்டியும் பங்காளிகளிடம்
மருத்துவ மற்றும் வர்த்தகச் சலுகைகளும்
அன்பளிப்புக்களும்

**சந்தெல்ல**

வர்தன சந்தல்ல வீடமைப்புக் கடன்
உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கும்

**SUPREME வாசி**

உங்கள் சேமிப்புக்களுக்கு அதிகூடிய 10.5%
வட்டியை வழங்கும்.




**வர்தன் Junior+**

Children Savings Account
சிறுவர் சேமிப்புக் கணக்கு
உங்கள் பிள்ளைக்கு 10%
வட்டியுடன் அதிசிறந்த நன்மை தரும்.

**வர்தன்**

உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்.

**RANWARAMA PAWNING**

உங்கள் தங்க நகைகளுக்கு
அதிகுறைந்த வட்டியில் அதிகூடிய
முற்பணத்தை வழங்கும்.

**Vardhana Nenasa**

வர்தன நெனச கல்விக் கடன்கள் மூலம்
வருங்காலச் சவால்களுக்கு முகங்கொடுக்கத்
தயாராகுங்கள்.

**வர்தன் Junior**

உங்கள் பிள்ளையின் சிறந்த
எதிர்காலத்திற்கு வழிகோலும். உயர்ந்த
வட்டி வீதம். 13ஆவது வயதில் கணனியியல்
கல்விக்கும் 18ஆவது வயதில் உயர்
கல்விக்கும் புலமைப்பரிசில்கள்.

மெகா போனஸ் - 1,000.00 – 49,999.99 = 5.00% | 50,000.00 – 249,999.99 = 6.00% | 250,000.00 – 499,999.99 = 7.00% | 500,000.00 – 999,999.99 = 8.00% | 1,000,000.00 மற்றும் அதற்கு மேல் = 9.00%

மிதப்புச் சேமிப்பு – 99,999.99 வரை = 4.00% | 100,000.00 மற்றும் அதிகம் = மிதப்பு வட்டி வீதம்

வர்தன ஜூனியர் - 1,000.00 – 4,999.99 = 5.00% | 5,000.00 – 99,999.99 = 5.50% | 100,000.00 மற்றும் அதற்கு மேல் = 7.00%

வீ.டேஜ. பிளஸ் - வீதி - <100,000.00 = 4.50% | 100,000.00 – 149,999.00 = 8.25% | 150,000.00 – 249,999.00 = 8.50% | 250,000.00 – 499,000.00 = 8.75% | 500,000.00 மற்றும் அதற்கு மேல் = 10.50%

கோரல் வைப்புக்கள் - ரூ. 1 மில். வரை = மிதப்பு வட்டி | ரூ. 1 மில்லியனுக்கு மேல் = திறைசேரியுடன் தொடர்புகொள்ளவும்

5,000.00 மற்றும் அதற்கு மேல் = 10.50%

கருசரு - 9,999.99 வரை = 4.00% | 10,000.00 மற்றும் அதற்கு மேல் = 7.50%

## உடனடி அழைப்பு : 011 2663888

பிச் ரேட்டிங் லங்கா லிமிட்டட்டின் தரப்படுத்தல் AA-(lka)

73, டபிள்யூ.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 2.
இணையத்தளம் : www.dfcc.lk
தொ : (011)2371371

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நுணாவில் வாசியின் கைவண்ணம்



நுணாவில் மத்தி விஸ்வலிங்கம் தம்பிநாதனின் கைவண்ணத்தில் தேங்கால் சிரட்டை மற்றும் சிப்பிகளால் தயாரிக்கப்பட்ட குத்துவிளக்குகள். (9)

ஜப்பானின் Tochigi எனும் இடத்தில் Ashikaga எனும் பூங்கா உள்ளது. இங்கேதான் உலகின் மிகவும் அழகான விஸ்டீரியா மரம் அமைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

மிகப் பழமையானதும் மிக விசாலமானதுமாக உள்ள அந்த மரம் இப்பூங்காவின் முக்கிய ஈர்ப்பாக உள்ளது. சுமார் 143 வயதான இந்த விஸ்டீரியா மரத்தின் கிளைகள் விட்டங்களின் துணையோடு நிற்பதால் ஓர் மலர்க்குடை போல் காட்சி தருகிறது. மே- ஏப்ரல் வரையிலான நடுப்பகுதியில் இப் பூங்காவிற்கு வருகை தந்தால் இந்த விஸ்டீரியா மரத்தின் முழு அழகையும் ரசிக்கலாம்.



## உலகின் மிகவும் அழகான மரம்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org